பாகம் ஒன்று

ஆவியானவரின் ஆலோசனை

100 கேள்வி பதில்கள்

திருமறைக்கலைஞர்
Pr. இறையன்பு V. ஜான்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

பாகம் ஒன்று

ஆவியானவரின் ஆலோசனை

100 கேள்வி - பதில்கள்

திருமறைக்கலைஞர்

Pr. இறையன்பு V. ஜான்

WORD OF CHRIST
WOC

கிறிஸ்துவின் வார்த்தை நூல் நிலையம்

சென்னை, இந்தியா

ஆவியானவரின் ஆலோசனை

The Counsel of the Holy Spirit (Tamil)
by **Pr Eraianbu V. John**

Copyright © 2012 by **Pr Eraiyanbu V. John**

ISBN: 978-93-82134-12-1

All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system, or transmitted in any form or by any means electronic, mechanical, photocopying, recording, or otherwise without the prior written permission of the publisher.

First Edition - 2012
First Reprint - 2013

Published by:
WORD OF CHRIST MINISTRIES
No. 100/3, Nirmala Apartments
Medavakkam Tank Road, Kellys
Chennai 600 010 Tamil Nadu, India
Phone: 044 - 2661 3242/ 4264 0111
E-mail ID: christianliterature@gmail.com
Website: www.wordofchrist.org.in
Printed at Chennai, India.

Price: Rs 60/-

அணிந்துரை

போதகர் இறையன்பு V. ஜான் அவர்கள் இளம் வயதிலேயே முதுபெரும் செய்தியாளர் எழுத்தாளர்களைப் போல் வியக்கும் வண்ணம் பேசும் எழுதும் வல்லுனர் என்பது ஆவிக்குரிய உலகம் நீண்ட ஆண்டுகளாக அறிந்ததே. ..

அவருக்கு ஒரு அறிமுகம் செய்வது சுய அறிமுகமாகிவிடும். இவர் எழுத்தை படித்துவிட்டு அனுபவமிக்க முதியவராகத்தான் இவர் இருக்க முடியும் என்று எண்ணி நேரில் கண்டபோது இந்த இளைஞரா என்று ஆச்சரியப்பட்ட அனேகரிலும் நானும் ஒருவன்.

தீர்க்கமான, தெளிவான, ஆழம் நிறைந்த இவரது எழுத்துக்கள் அனேகருடைய ஆவிக்குரிய வாழ்வில் அரும்பெரும் ஆசீர்வாதத்தை கொண்டு வந்து சேர்த்திருக்கிறது என்பது உண்மை. இவரது 'இயேசு விசாரிக்கிறார்' என்ற ஆவிக்குரிய பத்திரிகை அனேகம் ஆயிரங்களை ஆண்டவருக்குள் திடப்படுத்திக் கொண்டிருக்கிறது.

இவர் ஏற்கனவே எழுதியுள்ள புத்தகங்கள் பலருக்கு பயன் தந்திருக்கிறது. 'இயேசு விசாரிக்கிறார்' என்ற சபையை நிறுவி, சில கிளை சபைகளையும் கொண்டு அனேகரை ஆண்டவருக்குள் வழிநடத்திக் கொண்டிருக்கிறார். இத்தோடு ஆவிக்குரிய ஆசீர்வாதங்களுள்ள பாடல் கேஸட்டும் வெளியிட்டுக் கொண்டிருக்கிறார். இவரது எழுத்துக்கள் மொழிகளையும், தேசங்களையும் கடந்து ஆண்டவர் இயேசுவின் நற்செய்தியை அறியவைக்க, அடையவைக்க, ஆசீர்பட வைக்க ஆண்டவர் இயேசு கிருபை செய்வாராக.

பாஸ்டர் G. தாமஸ் தேவானந்தன்
அப்போஸ்தல விசுவாச சபை
1, சர்ச்ரோடு, முகப்பேர், சென்னை – 58.

ஆவியானவரின் ஆலோசனை

1. கேள்வி: தேவன் ஒரேயிடத்தில் தமது சாயலில் மனிதரை படைத்தார் என்பது உண்மையானால் மனிதரில் பலநிறங்கள் தோற்றங்கள் இருப்பது ஏன்?

பதில்: இதற்கு அநேகக் காரணங்கள் உண்டு!

A. தேவன் மனிதனை தமது சாயலாக படைத்தார் என்பது மனிதனின் வெளித்தோற்றத்தைக் குறிப்பதல்ல, அது அவன் திருத்துவ தேவனைப் போல ஆவி, ஆத்துமா, சரீரம் என்ற மூன்றானவன் என்பதையும், மேலும் தேவனைப் போல மகிமை அவனை மூடியிருந்ததையும் குறிக்கும். மனிதன் பாவம் செய்து தேவகட்டளையை மீறிவிட்டபோது இம் மகிமை விலகிவிடவே அவன் நிர்வாணியானான். இப்போழுது புறம்பாகக் காணப்படுவது தேவசாயலல்ல.

B. காயீன் கர்த்தருக்கு விரோதமாய் பாவம் செய்தபோது அவனுடைய வெளித் தோற்றத்தில் தேவன் அடையாளத்தைப் போட்டார். இதைப்போல் மனிதன். பல்லாயிரம் வருடங்களாக சந்ததி சந்ததியாக பாவம் தொடர்ந்து செய்கையில் அவன் சரீரத்தில் போடப்படும் அடையாளங்கள் அவனை வித்தியாசமாக காட்டுகிறது. காயீன் செய்தது கொலை. மற்றொருவன் செய்வது விபச்சாரம். அதற்கேற்ற அடையாளங்களின் சேர்க்கை மாற்றத்தைக் கொண்டு வருகிறது. எனவே பிரதான காரணம் மனிதனின் பாவமே (ஆதி.4.15). தேவசாயல் மறைந்ததோடு பாவச் சாயலிலும் மாற்றம் ஏற்பட்டுக் கொண்டே போகையில் ...... பல்வேறு நிறம், உயரம், அமைப்பு, குணம் முதலியவை வருகின்றன.

பத்சேபாளிடத்தில் தாவீதுக்கு தவறான முறையில் பிறந்த குழந்தை கேவலமாக இருந்தது என்பதை காண்க (2 சாமு.12:15).

C. உலகத்தில் சாதி வகைகளை (சாதி ஏற்றத்தாழ்வுகளை அல்ல) மனிதருக்குள்ளே தோற்றத்தில் வித்தியாசம் காணப்பட, தேவனே உருவாக்குகிறார்.

ஈசாக்கின் மனைவி ரெபெக்காளின் வயிற்றில் இரட்டைப் பிள்ளைகள்

காணப்பட்டது; இது குறித்து தேவனிடம் கேட்க, அவரும் உன் வயிற்றிலிருந்து இரண்டுவித ஜாதிகள் பிரியும் என்றார். குழந்தைகள் பிறந்தபோது ஏசா சிவப்பு நிறமும், உடல் முழுவதும் ரோமம் நிறைந்தவனாக வெளிப்படுகிறான். யாக்கோபு அப்படியிருக்கவில்லையே. (ஆதி.25:25).

D. சுற்றுப்புற சூழ்நிலையினாலும் வெளித்தோற்றம் மாற்றம் அடைவதுண்டு. பின்பு யாக்கோபு பச்சையாயிருக்கிற புண்ணை, வாதுமை, அர்மோன் என்னும் மரங்களின் கொப்புகளை வெட்டி, இடையிடையே வெண்மைத் தோன்றும்படி பட்டையை உரித்து தான் உரித்த கொப்புகளை ஆடுகள் தண்ணீர் குடிக்க வரும்போது கால்வாய்களிலும் தொட்டிகளிலும் போட்டு வைப்பான். அந்த கொப்புகளுக்கு முன்பாக பொலிந்தபடியால் அவைகள் கலப்புநிறமுள்ளதும் புள்ளியுள்ளதும், வரியுள்ளதுமான குட்டிகள் போட்டது. (ஆதி.30:37–39) இந்த பக்தனின் விஞ்ஞானத்தின்படி மண்ணின் நிறம், சூழ்ந்திருப்போர் நிறம், அமைப்பு முதலியவைகளினாலும் வெளிப்புறம் மாறுதல் பெறுகிறது என்பது உண்மையே.

E. சீதோஷ்ண நிலையினாலும் மாற்றம் ஏற்படுகிறது. நான் கருப்பா யிருக்கிறேன் என்று பாராதேயுங்கள் வெய்யில் என்மேல் பட்டது. என் தாயின் பிள்ளைகள் என்மேல் கோபமாயிருப்பது என்ன திராட்சைத் தோட்டங்களுக்கு காவற்காரியாக வைத்தார்கள் என்று தன் கறுப்பு நிறத்திற்கு சூலமித்தியாள் காரணம் கூறுகிறாள். (உன்ன.1:6) குளிர், கடுங்குளிர், வெப்பம், கடும் வெப்பம் ஆகியவையும் மனிதனுடைய தோற்றத்தில் மாற்றம் ஏற்படுத்துகிறது.

F. கலப்பினத்தினால் மாற்றம் ஏற்படுகிறது. இப்படி பல மாற்றமடைந்தவர் களுக்குள்ளே உறவு ஏற்படும்போது அதனால் கலப்பான மாற்றங்கள் ஏற்படுகின்றன.

G. மனிதனை பெலவீனப்படுத்தும் ஆவி என்ற ஒன்று உண்டு! அவைகளினால் தோற்றத்தில் மாறுதல் காணப்படுகிறது.

அப்போழுது 18 வருஷமாக பலவீனப்படுத்தும் ஆவியைக் கொண்டு எவ்வளவும் நிமிரக்கூடாதவளான கூனி ஒருத்தியிருந்தாள் இயேசு அவள் மீது கைகளை வைத்தார். உடனே அவள் நிமிர்ந்து தேவனை மகிமைப் படுத்தினாள் (லூக்.13:11). இப்படியாக பலவித அங்கவீனங்கள், நீண்ட, குறைந்த, உறுப்புகள், மெலிந்தஉடல், ஊமை, குருடு, செவிடு, முதலியவைகளும் பிசாசினால் உண்டாகிறது. இவைகளுக்குக் காரணம் மனிதன் செய்யும் விக்ரக ஆராதனை, விபச்சாரம், பெருமை முதலியவையே.

மேற்கூறிய 7 காரணங்களால் மனிதனின் தோற்றங்களில் வித்தியாசங்கள் காணப்படுகிறது.

2. கேள்வி :- விசுவாசிகள் லாட்டரி டிக்கெட் வாங்கலாமா? பணத்தை வட்டிக்குக் கொடுக்கலாமா?

பதில்:- கிறிஸ்தவர்கள் போதுமென்கிற மனதுடனே, இருக்க வேண்டியவர்கள், (1 தீமோ.6:6-8) உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதுமென்றிருக்கக்கடவோம் என்றும், பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது என்றும் வேதம் கூறுகிறது.

லாட்டரி சீட்டு வாங்குவதின் நோக்கம் குறுக்கு வழியில் பணக்காரனாக வேண்டும் என்பதே காரணம். சில மிஷனரி ஸ்தாபனங்கள் பரிசு சீட்டு விற்பனை செய்வதால் நாமும் லாட்டரி சீட்டு வாங்கலாம் என தப்பான எண்ணம் கொள்ளக்கூடாது. சிலர் அறியாமல் வாங்கி அதை வேதாகமத்திற்குள் வைத்து அதற்காக ஜெபிக்கவும் செய்கிறார்கள் இது பரிதாபமே.

உங்களுக்கு இன்னது வேண்டும் என்று அறிந்திருக்கிற ஆண்டவர் உங்கள் மேல் அக்கரையுள்ளவராக இருக்கிறார் என்பதை மறக்க வேண்டாம். சிலர் லாட்டரி சீட்டு விழுவதால் ஒரு பகுதியை தேவனுடைய ஊழியத்திற்கு கொடுத்து விடுகிறேன் என்று பொருத்தனையும் செய்கிறார்கள் இதுவும் தவறுதான். இப்போதே உங்களால் இயன்ற அளவு கர்த்தருக்கு கொடுக்க மனதில்லாதவர்கள் லாட்டரி சீட்டு விழுந்தால் விழுந்த பின் கொடுப்பது சிரமமே. எப்படியும் பண ஆசையைக் குறித்து எச்சரிக்கையாயிருந்து அதை விட்டு ஓட வேண்டும்.

வட்டிக்கு பணத்தைக் கொடுப்பதும் பண ஆசையின் விளைவே. தேவனுக்குப் பயந்து உன் பணத்தை வட்டிக்கு கொடாயாக (லேவி 25:36-37) கர்த்தருடைய பரிசுத்த பர்வத்தில் வாசம் பண்ணுகிறவன்தன் பணத்தை வட்டிக்குக் கொடாதவன் என்று பார்க்கிறோம். (சங்.15:5).

யார் நீதிமான் என்று வாசிக்கையில் வட்டிக்குக் கொடாதவன் என்பதும் சேர்க்கப்பட்டிருக்கிறது. (எசே.18:8) தேவனை மறக்கிறவர்கள் பொருளாசை யினால் வட்டியை வாங்குகிறார்கள் என்றும் தேவன் சொல்கிறார் (எசே.22:12).

எனவே லாட்டரி சீட்டு வாங்குவதும் தன் பணத்தை வட்டிக்குக்

கொடுப்பதும் தேவனுக்கு விரோதமான காரியம். கூடவே கூடாது. பாதுகாப்புக்காக, குறிப்பிட்ட காரியத்திற்காக பணத்தை வங்கியில் வைத்திருப்பது தவறு அல்ல.

3. கேள்வி :- நல்ல நாள் எது? கெட்டநாள் எது? நான் பார்க்கலாமா?

பதில் :– தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்த ஆறு நாட்களையும் நல்லது என்றே கண்டார். ஏழாம் நாள் ஓய்ந்திருந்தார். (ஆதி 1:10,12,18,21,25; 2:2) ஏழு நாட்களும் நல்ல நாட்களேயாகும். பாவம் செய்து கெட்டவனுக்கு ஏழுநாளும் கெட்ட நாளாகவே காணப்படும். கெட்ட நாள் என்று ஒன்று இல்லவே இல்லை.

நல்ல கிறிஸ்தவர்கள் என்று சொல்லப்படுகிற பலரும் விவாகத்தில் நாள் பார்த்து விடுகிறார்கள். புது வீடு கட்டி குடித்தனம் போவதற்கும் நாள் பார்க்கிறார்கள்.

நீ துரத்திவிடப்போகிற இந்த ஜாதிகள் நாள் பார்க்கிறவர்களுக்கும் குறி சொல்லுகிறவர்களுக்கும் செவிகொடுக்கிறார்கள்; நீ அப்படி செய்கிறதற்கு உன் தேவனாகிய கர்த்தர் உத்தரவுக்கொடார். (உபா.18:14).

நாள் பார்க்ககூடாது. உத்தம கிறிஸ்வர்கள் நாள் பார்க்க மாட்டார்கள். நாள் பார்க்கிறவன் கிறிஸ்தவன் அல்லவே.

4. கேள்வி :- நான் சிகரெட் குடிப்பதை நிருத்திவிட்டேன். ஆனால் இப்போது அசோகா பாக்கு போட்டு பழக்கப்படுத்திக் கொண்டேன். இது பாவமா?

பதில் :– பாக்கு, சிகரெட், பீடி, சுருட்டு, பான்பராக், இவைகள் தன்னில்தானே பாவமல்ல. ஆனால் இரட்சிக்கப்பட்ட ஒருவன் கர்த்தரை தவிர வேறு யாருக்கும், எதுக்கும் எந்த பழக்கத்துக்கும் அடிமையாகக் கூடாது.

ஒரு தவறை விட்டு மற்றொரு தவறை தொடங்கியிருக்கிறீர்கள். ஆத்துமாவுக்கும் சரீரத்துக்கும் பிரஜோனமில்லாத மேலே குறிப்பிட்ட பழக்கங்களை முற்றிலுமாக விட்டுவிடுங்கள்.

மேலும், மேலே குறிப்பிட்ட பாக்கு, சிகரெட், பீடி, சுருட்டு, பான்பராக் யாவும் வயிற்றை, நுரையீரலை, வாயை மெதுவாக முழு சரீரத்தையும் மிகவும்

பாதிப்பு உண்டாக்கக் கூடியது. அவைகள் ஆபத்தானதும் கூட, நீங்களே தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்கள். இந்த ஆலயத்தை ஒருவன் கெடுத்தால் அவனை நான் கெடுப்பேன் என்று தேவன் சொல்கிறார் (1 கொரி.3:16–17). ஆகவே உங்கள் சரீரத்தை கெடுக்க, சேதப்படுத்த உங்களுக்கு உரிமை கிடையாது. நீங்கள் அசோகா பாக்கு சாப்பிட்டாலும், நிஜாம் பாக்கு சாப்பிட்டாலும், பாக்கை தொடர்ந்து சாப்பிட்டால் அது ஆபத்து. கர்த்தருடைய பிள்ளைகள் எதற்கும் அடிமையாகக் கூடாது. தேவனுக்கு மட்டும் அடிமைகளாயிருங்கள்.

5. கேள்வி :- சாத்தானை தேவன் ஏன் படைத்தார்?

பதில் :- சாத்தான் எனும் தீயசக்தியான சத்துருதான் இப்பூமியில் காணப்படும் சகலதீமைக்கும் காரணம் என்றால் அவனை ஏன் தேவன் படைத்தார் என்று நாம் சிந்திக்கிறோம்.

சாத்தானை தேவன் சாத்தானாக படைக்கவில்லை அவனை லூசிபர் எனும் மகா ஒளியான பிரதான தூதனாக படைத்தார். ஆங்கில வேதாகமத்தில் Lucifer என எழுதப்பட்டுள்ளது. இவன் தன்னை கெடுத்து சாத்தானாக மாறிப்போனான்.

அவனை ஒரு தீமையுமற்றவனாகத்தான் படைத்தார் என்பதை கீழ்வரும் வேத வசனங்களிலிருந்து அறிந்துகொள்ளலாம்.

நீ சிருஷ்டிக்கப்பட்ட நாள் துவங்கி உன்னில் அநியாயம் கண்டுபிடிக்கப் பட்டது மட்டும் உன் வழிகளில் குறைவற்றிருந்தாய் (எசே 28:12–17).

ஆம் சாத்தானை ஏன் படைத்தார் என்று கேட்பதும் மனிதனை ஏன்படைத்தார் என்று கேட்பதும் ஒன்றுதான். மனிதனை பரிசுத்த ஆத்மாவாக தேவன் சிருஷ்டித்தார். அவன் பாவ ஆத்மாவானன். அதற்கு முதல் காரணம் சாத்தான். சாத்தானை பரிசுத்த தூதனாக கர்த்தர் சிருஷ்டித்திருந்தார். அவன் பிரதான எதிரியாக மாறிவிட்டான். மனிதனையும் தன்வழிக்கு கொண்டுசென்றான்.

மனிதனை பூமியை பண்படுத்தவும் ஆண்டுகொள்ளவும் படைத்தார். லூசிபரை ஏன் படைத்தார்? தேவனுடைய சிங்காசனத்தை பாதுகாக்கவும் அதன் அருகில் வேறொருவனும் நெருங்காமலிருக்கவும் அவனை படைத்தார். அவனோ அச்சிங்காசனத்தையே இச்சித்து அடைய திட்டமிட்டான். லூசிபர் சாத்தானாக மாறினதினால் தள்ளப்பட்டான்.

அவனோடு அவன் சேனையும் விழுந்தது. இவன்தான் ஆதியிலேயிருந்த பூர்வ உலகத்தையும் தன்பக்கமிழுத்து கெடுத்தவன். எனவே தேவன் அதன் குடிகளை அழித்துப்போட்டார். ஆதி உலகில் இல்லாத புதுமை ஒன்றும் இன்றைய உலகில் ஒன்றுமில்லை. எல்லாம் முன்பிருந்ததே (பிரச.1:9–10) ஆம் நாகரீகம், அறிவு, ஆராய்ச்சி அனைத்தும்.

ஏன் சாத்தானை மீறிவிடாமல் தடுக்கவில்லை? மனிதனைப் போலவே சுதந்திரம், சுயாதீனம், அதிகாரம், உரிமை ஆகியவற்றை நீதியின் தேவன் தந்திருந்தார், இவைகளை அவன் துஷ்பிரயோகம் **(Misuse)** பண்ணினான்.

சாத்தானாக சாத்தானை தேவன் படைக்கவுமில்லை! பாவியாக மனிதனை படைக்கவுமில்லை.

6. கேள்வி :- தேவ பிள்ளைகள் கடன் வாங்கலாமா? கடன் கொடுக்கலாமா?

பதில் :– கிறிஸ்தவர்கள் கடன் கொடுக்கிறவர்களாக இருக்க வேண்டும் ஆனால் கடன் வாங்கக் கூடாது. இஸ்ரவேலருக்குக் கொடுக்கப்பட்ட ஆசீர்வாதங்களில் ஒன்று. உன் தேவனாகிய கர்த்தர் உனக்கு சொன்னபடி உன்னை ஆசீர்வதிப்பதினால் நீ அநேகம் ஜாதிகளுக்குக் கடன்கொடுப்பாய் நீயோ கடன் வாங்குவதில்லை (உபா.15:6).

கடன் கொடுப்பதும், கடன் வாங்காதிருப்பதும் கர்த்தருடைய பிள்ளைகளுக்கு, வாக்குப் பண்ணபட்டிருக்கிற ஆசீர்வாதமாகும். எளியவனுக்கு தேவை யானதை கடன் கொடுப்பாயாக. ஒருவரிடத்தி லொருவர் அன்பு கூறுகிற கடனேயல்லாமல் மற்றொன்றிலும் கடன்படாதிருங்கள். (ரோம.13:8) ஏனெனில் கடன் வாங்கினவன் கடன் கொடுத்தவனுக்கு அடிமை (நீதி.22:7). மனுஷருக்கு அடிமை களாகாதிருங்கள் (1 கொரி.7:23). தவணை முறையில் பொருட்களை வாங்குவதும் தேவன் நமக்கு தேவையானதை ஏற்ற வேளையில் தருவார் என்ற விசுவாசமில்லாமையினாலேயே.

கர்த்தருக்குப் பயந்து அவருடைய கட்டளைகளில் பிரியமாயிருக்கிற மனுஷன் இரங்கிக் கடன் கொடுக்கிறான் என்று வாசிக்கிறோம் (சங்.112:5). மலைப் பிரசங்கத்திலும் நமதாண்டவர் உன்னிடத்தில் கேட்கிறவனுக்குக் கொடு. உன்னிடத்தில் கடன் வாங்க விரும்புகிறவனுக்கு முகங்கோணாதே என்று உபதேசித்திருக்கிறார் (மத்.5:42). கைமாறு கருதாமல் கடன் கொடுங்கள்; அப்பொழுது பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்.

துன்மார்க்கன் கடன்வாங்கிச் செலுத்தாமற்போகிறான். நீதிமான் இரங்கிக் கொடுக்கிறான். (சங்.37:21). எனவே, ஏற்கனவே கடன் வாங்கியிருப்பீர்களானால் ஆண்டவரிடம் ஜெபித்து எப்படியும் கடனை செலுத்திவிடுங்கள். கர்த்தர் உதவி செய்வார்.

எனவே கடன் கொடுப்பதும் கடன் வாங்காதிருப்பதும் கர்த்தருடைய பிள்ளைகளுக்குரிய ஆசிர்வாதம்.

7. கேள்வி :- தெய்வீக சுகத்தை விசுவாசிக்கிறவர்கள் கண்ணாடி போடலாமா?

பதில் :– கர்த்தர் சுகம் தருகிறார் என்பது மறுக்கவோ மாற்றவோ முடியாத உண்மை.

நானே உன் பரிகாரியான கர்த்தர் என்று அவரே சொல்லியிருக்கிறார். அவருடைய தழும்புகளால் குணமாகிறோம் என்று பழைய ஏற்பாட்டிலும், குணமானோம் என்று புதிய ஏற்பாட்டிலும் எழுதியிருக்கிறது.

உங்களில் ஒருவன் வியாதிப்பட்டால் சபையின் மூப்பர்களை வர வழைப்பானாக என்றே எழுதியிருக்கிறது. வைத்தியர்களை வரவழைப்பானாக என்று எழுதப்படவில்லை. (மருத்துவமனைக்கோ, ஜெபவீட்டிற்குக் கொண்டுபோகவோ எழுதப்படவில்லை)

ஆகவே கர்த்தர் வசனத்தின்படி சுகமளிக்கிறார். வேதத்தில் சொல்லப் பட்ட சுகம் ஏறக்குறைய எல்லாம் உடனுக்குக்குடன் அதிசயசுகம்.

எங்கள் வாழ்க்கையில் பல ஆண்டுகளாக இந்த சுகத்தை அனுபவித்துக் கொண்டேயிருக்கிறோம். தேவன் தரும் சுகத்தினால் உண்டாகும் சந்தோஷத்தையும் பரிசுத்தமாக்குதலையும் அடைகிறோம்.

யார் அதற்கு எதிர் சொன்னாலும் எங்கள் உள்ளம் அதை நம்பி மேன்மை பாராட்டிக் கொண்டே இருக்கும். தெய்வீக சுகத்தை அனுபவமாக்கிக் கொண்ட ஒவ்வொருவருக்கும் அது அப்படியே இருக்கும்.

அனுபவத்தில் ஒவ்வொருவரும் அதை ஒவ்வொரு அளவில் அனுபவிக்கிறார்கள். ஒருவரையொருவர் குறைசொல்ல வேண்டாம்.

கண்ணாடி கூட வேண்டாம் என்ற விசுவாசம் இருந்தால் மிகவும் நல்லது, எனக்கு வயதாகி விட்டது. அதற்கான கண்ணாடிப் போடுகிறேன் என்பவரை

குற்றம் சொல்லவேண்டாம். ஆஸ்பத்திரியில் மருந்து சாப்பிடுகிறவர்களைப் பார்க்கிலும் அவர் கர்த்தரை விசுவாசிக்கிறார் அல்லவா?

மரித்த பலரை உயிரோடு எழுப்பிய **விகின்ஸ் வொர்த்** கண்ணாடி போடுவார். ஒருவர் அவரிடம் தெய்வீக சுகமுள்ள உமக்கு கண்ணாடி எதற்கு என்றாராம். அதற்கு இவர் உமக்கு வழுக்கைத்தலை எதற்கு என்று கேட்டாராம். அறிவுள்ளவர்கள் சிந்திக்கட்டும்.

8. கேள்வி :- பில்லி சூனியம், செய்வினை விசுவாசிகளை பாதிக்குமா? தகடு எரிக்கிறதை குறித்து வேதம் என்ன சொல்கிறது?

பதில் :– யாக்கோபுக்கு விரோதமான மந்திரவாதம் இல்லை, இஸ்ரவேலுக்கு விரோதமான குறிசொல்லுதலும் இல்லை (எண்ணா.23:23) என்ற வேத வசனத்தின்படி இரட்சிக்கப்பட்ட ஆவிக்குரிய இஸ்ரவேலரை, செய்வினை, பில்லிசூனியங்கள் பாதிக்க முடியாது.

எனினும் அவர்கள் இரட்சிக்கப்படுவதற்கு முன்பே அவர்களுக்கு விரோதமாக செய்வினை செய்யப்பட்டிருந்தால் அவர்கள் இரட்சிக்கப்பட்ட பின்பும் அவர்களை பாதிக்க முயற்சி செய்யும். ஆனால் உபவாசத்தினாலும் ஜெபத்தினாலும் அவைகளை சீக்கிரத்தில் மேற்கொள்ளலாம்.

தேவனால் பிறந்த விசுவாசி தன்னை பிசாசின் காரியங்களுக்கு, பாவங்களுக்கு விலகி தன்னை காத்துக் கொள்ளும்போது எந்த சூனியமும் அவர்களைத் தொடமுடியாது. வேதவசன ஆதாரப்படி தகடுகள் எடுப்பது என்பது முற்றிலும் தவறு.

இன்றைய நாட்களில் கிறிஸ்துவின் ஊழியர்கள் என்ற பெயரில் தகடுகளை எடுப்பதாக சொல்லி இதை வியாபாரமாக்கி வருகிறார்கள். இயேசுவின் நாமத்தின் வல்லமையாலும், அவருடைய இரத்தத்தினாலுமே சாத்தானை நாம் ஜெயிக்க வேண்டும். பில்லி சூனியம், செய்வினை போன்ற சத்துருவின் போராட்டத்திலிருக்கிறவர்கள் குடும்பமாக முதலாவதாக கர்த்தருக்கு ஒப்புக்கொடுக்க வேண்டும். கர்த்தரை விசுவாசியாமல் இதிலிருந்து விடுதலை பெறும்படி செய்த எல்லா கிரியைகளுக்காகவும் கர்த்தரிடம் அறிக்கையிட்டு மன்னிப்பு கேட்கவேண்டும்.

ஒரு ஆவிக்குரிய சபைக்கு ஒப்புக்கொடுத்து ஆராதனைகளில் தவறாமல்

கலந்து கொள்ள வேண்டும். சபை போதகருடைய ஆலோசனையின் பேரில் வீடுகளில் கூடி உபவாசித்து ஜெபிக்கலாம். கர்த்தருக்கு எல்லாவற்றிலும் உண்மையாயிருந்து அவரையே நம்பி அவரையே தேடும்பொழுது கர்த்தர் அற்புதமாக முற்றிலுமாய் விடுதலையளிப்பார். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்.

9. கேள்வி :- அவிசுவாசியை ஒரு விசுவாசி விவாகம் பண்ணலாமா?

பதில் :– திருமணமென்பது ஒரு நுகம். அந்நிய நுகத்தை வேதம் கண்டிக்கிறது (2 கொரி.6:14) மாட்டையும் கழுதையையும் பிணைத்து உழாதிருப்பாயாக. (உபா.22:10).

இரு ஏற்பாடுகளும் அவிசுவாசிகளை கலப்பு மணம் செய்வதை வெகுவாய் எதிர்க்கின்றன. மனந்திரும்பாதவரோடு பரிசுத்த வித்து கலந்து விடுவதை குற்றம் அக்கிரமம் என்றெல்லாம் வேதம் அழைக்கிறது. (எஸ்றா.9:1–6). ஒரு விதவை கூட, அவள் விசுவாசியாயிருப்பாளானால் அவிசுவாசியை மணக்க அனுமதிக்கப்படவில்லை. கர்த்தருக்குட்பட்ட ஒருவனை மாத்திரம் அவள் மணக்கலாம். (1 கொரி.7:39).

காரணம் எதுவாயினும் அவிசுவாசியை மணக்க உங்கள் பெற்றோர் வற்புறுத்தினாலும், நீங்கள் திடமாய் மறுக்கலாம். பெற்றோருக்குக் கீழ்ப்படிதலும் கர்த்தருக்குள்தான் (எபே.6:1).

காதலில் ஒருவரோடு விழுந்துவிட்டால், அவனோ, அவளோ மெய்யாய் மனந்திரும்பாத பட்சத்தில் அவ்வுறவை அறுத்தெரியுங்கள். திருமணத்திற்கான திருமுழுக்கு ஆபத்தானது.

ஒரு சில இணைப்புகளில் மனந்திரும்பாத கணவனோ மனைவியோ திருமணத்திற்குப்பின் இரட்சிக்கப்பட்டுவிடுவதுண்டு. ஆனால் இதிலிருந்து தெளிவாய் எதையும் போதிக்க முடியாது. மனைவியானவளே, நீ உன் கணவனை இரட்சிப்பாயோ அல்லவோ உனக்கு எப்படித்தெரியும்? (1 கொரி.7:16) விவாகம் விளையாட்டல்ல. ஏற்கனவே அவிசுவாசியை மணந்துவிட்டால், அவனுடைய அவளுடைய இரட்சிப்புக்காக ஜெபித்து தேவனை விசுவாசிப்பதைவிட ஒன்றும் செய்வதற்கில்லை

கிறிஸ்தவரல்லாத குடும்பங்களிலிருந்து வாலிபர் கன்னியர் இரட்சிக்கப்பட்டால், விசுவாசியான வாழ்க்கைத் துணையைக் கண்டுபிடிப்பதில் மிகவும் சிரமப்படுகின்றனர். ஜாதிப்பிசாசு இந்திய கிறிஸ்தவத்திலுருந்து இன்னும் விரட்டப்படவில்லை. கிறிஸ்தவரல்லாத பிண்ணணியிலிருந்து வரும் விசுவாசிகளுக்கு மணமுடித்து வைக்க கிறிஸ்தவத் தலைவர்களும் மேய்ப்பர்களும் மிகுந்த சிரத்தையெடுக்க வேண்டும்.

கிறிஸ்தவ குடும்பங்களிலுள்ள இரட்சிக்கப்பட்ட வாலிபரும் கன்னியரும் மற்ற பின்னணி விசுவாசிகளை மணம்புரிய முன்வரவேண்டும் சில வேளை இப்புது விசுவாசிகளை அவர்களது குடும்பத்தினர் அந்த சமுதாயத்தை விட்டே துரத்திவிடுவர். இப்படிப்பட்டவர்களுக்குக் கனிவுணர்வுடன் ஆதரவு தருவது சபையின் கடமையாகும்.

10. கேள்வி:- 1 பேதுரு 3:18-20 காவலில் இருந்த ஆவிகளுக்கு மனந்திரும்ப வேண்டும் என்பதற்காக கிறிஸ்து அவர்களுக்கு பிரசங்கித்தாரா? அப்படியென்றால் மரித்த பின்பு அவர்கள் மனந்திரும்ப தருணம் கொடுக்கப்பட்டதா?

பதில்:- அந்த ஆவியிலே அவர் போய் காவலிலுள்ள ஆவிகளுக்குப் பிரசங்கித்தார். (1 பேது.3:19) எந்த ஆவியினாலே இயேசு உயிரோடெழுப்பப்பட்டாரோ, அதே ஆவியினாலே அவர் நோவாவில் இருந்துகொண்டு ஜனங்களுக்கு நீதியை பிரசங்கித்தார் என்று அறிவோமாக (இதை இங்கிலீஸ் பைபிளில்) (1 பேது.3:18–20) ஐ சேர்த்து வாசித்தால் விளங்கும். உதாரணமாக இப்பொழுதும் கிறிஸ்துவே உயிர்ப்பிக்கிற ஆவியாகி (1 கொரி.15:45) விசுவாசிகளுக்குள் இருந்து, சுவிசேஷத்தை அறிவிக்கிறார் பேசுகிறவர்கள் நீங்களல்ல, உங்கள் பிதாவின் ஆவியானவரே உங்களிலிருந்து பேசுகிறார் (மத்.10:20).

நோவா மூலமாக அறிவிக்கப்பட்ட சுவிசேஷத்துக்குக் கீழ்ப்படியாமல் மரித்துப்போனவர்கள் மனந்திரும்பச் செய்யும்படி (அல்லது அவர்களை இரட்சிக்கும்படி) பாதாளத்தில் காவல்பண்ணப்பட்டிருந்த ஆவிகளுக்குப் பிரசங்கிக்க, இயேசு மரித்து அடக்கம்பண்ணப்பட்ட உடனே, பாதாளத்துக்குச் சென்றார் என்று சிலர் சொல்வது சரியல்ல, ஏனெனில் ஒரு தரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்பு அடைவதும் மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது (எபி.9:27).

தேவனுடைய வார்த்தைகளைக் கேட்டும் அதற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கு தேவ கோபாக்கினை வரும் என்று வேதம் கூறுகின்றது (எபே.5:6). அப்படியிருக்க, நோவாவின் மூலமாய் தேவனுடைய வார்த்தைகளை அறிவித்தும், எச்சரித்தும், கீழ்ப்படியாமற்போன ஆவிகளுக்கு மறுபடியும் இயேசு, சுவிசேஷத்தை பிரசங்கித்தார் என்பது எப்படி சரியாகும்?

சரீரத்தில் ஒரு தரம் மரித்தவர்கள் பின்பு மனந்திரும்புவதுமில்லை. விசுவாசிப்பதுமில்லை, சரீரத்தில் உயிரோடிருக்கும்போது மனந்திரும்பி சுவிசேஷத்துக்கு கீழ்ப்படிவதே தேவனுடைய ஒழுங்கு, மரித்தவர்களின் ஆத்துமா சாந்தியடைவதற்கு ஜெபம் பண்ணுவது முற்றிலும் தவறானது. அது தேவனுடைய உபதேசமல்ல, அது மனுஷ உபதேசம்.

நோவாவின் காலத்தில் மரித்துப்போனவர்களுக்கு சுவிசேஷம் பிரசங்கிக்கும்படி தேவன் சலுகை காண்பித்தாரானால், அதற்கு முன்னான காலத்தில் பாவத்திலே மரித்துப்போனவர்களுடைய நிலமை என்னவாகும் அவர்களைப்பற்றி ஆண்டவருக்கு கவலை இல்லையா? அப்படியானால் 1 பேது.3:19ல் காவலிலுள்ள ஆவிகளுக்கு அவர் போய் பிரசங்கித்தார் என்பதின் அர்த்தம் என்ன? நோவாவின் காலத்திலிருந்தவர்கள் யாவரும் காவலில் அடைக்கப்பட்டவர்களைப்போல், மாம்சத்தின் கிரியைகளுக்கு அடிமையாய் வெறும் மாம்சமாயிருந்தார்கள். ஆகவே ஆவியாயிருக்கிற தேவன் மனுஷரோடு இசைந்திருக்கமுடியாமல் மனுஷரோடு போராட வேண்டியதாயிற்று (ஆதி.6:3). ஜனங்கள் புசிப்புக்கும் குடிப்புக்கும் அடிமைப்பட்டிருந்தனர். பெண் கொள்வதும், கொடுப்பதுமே அவர்களின் முக்கிய கவனமாய் இருந்தது (மத்.24:38).

எதற்குக் கீழ்ப்படியும்படி உங்களை அடிமைகளாக ஒப்புக்கொடுக்கிறீர்களோ, அதற்கே அடிமைகளாயிருக்கிறீர்கள் என்று அறியீர்களா? (ரோம. 6:16). பாவஞ்செய்கிறவன் எவனும் பாவத்துக்கு அடிமையாயிருக்கிறான் (யோவா.8:34). மனுஷரெல்லாரும் மரண பயத்துக்கு அடிமைகளாயிருக்கிறார்கள் (எபி.2:15). உலக வழக்கங்களுக்கும் அடிமைப்பட்டிருக்கிறார்கள் (கொலோ.2:20–21).

ஆபிரகாமின் சந்ததியார்களான யூதர்கள் நாங்கள் ஒருக்காலும் ஒருவனுக்கும் அடிமைகளாயிருக்கவில்லை என்று கூறினார்கள் (யோவா. 8:33). ஆனால் அவர்களுடைய ஆத்துமாவும், ஆவியும் பாவத்துக்கு அடிமைப்பட்டிருந்ததை அவர்கள் அறியவில்லை. இதை அறிந்த விசுவாசி

ஒருவர் என் ஆத்துமாவை காவலுக்கு நீங்கலாக்கிவிடும் என்று விண்ணப்பம் பண்ணினார் (சங்.142:7). ஆகவே காவலிலுள்ள ஆவிகள் என்றால் பாவத்திலும், சாபத்திலும், மரணபயத்திலும், பிசாசின் பிடியிலும், வியாதிகளிலும் அகப்பட்டிருக்கும் மனுஷரையேக் குறிக்கும்.

அவர்கள் சரீரத்தில் விலங்கிடப்பட்டு, சிறைகளாய் காணப்படா விட்டாலும், மனித ஆவியில் காவலில் அடைக்கப்பட்ட சிறைகளே.... பாவப் பிரமாணத்துக்கு என்னைச் சிறையாக்கிக்கொள்கிறது. ஆகவே நான் வெறுக்கிற தீமையை நானே செய்யும்படி அது என்னை வலுக்கட்டாயப் படுத்துகிறது என்றும் இந்த மரண சரீரத்திலிருந்து யார் என்னை விடுதலை யாக்குவார்? என்றும் பவுல் கூறியுள்ளார் (ரோம.7:15,23,24).

இயேசு பூமியில் இருந்த நாட்களில் சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும்...பிரசித்தப்படுத்தினார் (லூக்.4:18). பிசாசின் வல்லமையில் அகப்பட்ட அனைவரையும் விடுவிக்கிறவராய் சுற்றித்திரிந்தார் (அப்.10:38). மற்றபடி சிறைச்சாலைகளில் விலங்கிடப்பட்டிருந்தவர்களை இயேசு விடுவித்ததாக சரித்திரம் இல்லை.

மேலும் நாம் அடைக்கப்பட்டவர்களாய் நியாயப் பிரமாணத்தின் கீழே காவல் பண்ணப்பட்டிருந்தோம் என்று (கலா.3:23) பவுல் கூறியிருக்கிறார். தேவனுடைய வார்த்தைகளை விசுவாசித்து ஏற்றுக்கொண்டு கீழ்ப்படிகிறவர்கள் நியாயப்பிரமாணத்திலிருந்து விடுதலை பெறுகிறார்கள். நம்மைக் கட்டியிருந்த நியாயப்பிரமாணத்திலிருந்து விடுதலையாக்கப் பட்டிருக்கி றோம் (ரோம.7:6).

நோவா பேழையை ஆயத்தம்பண்ணிக் கொண்டிருக்கும்பொழுதே உலகத்து மனிதர் யாவரும் மேற்கூறியபடி காவலில் உள்ளவர்களா யிருந்தனர். (சிறைப்பட்டிருந்தனர்) விசுவாசத்தால் நீதிமானாக்கப்பட்ட நோவா என்பவருக்குள் கிறிஸ்து வாசமாயிருந்ததினால், நோவா தேவனோடு சஞ்சரித்துக்கொண்டிருந்தார் என்றும் நோவா நீதியை பிரசங்கித்தார் என்றும் அறிகிறோம் (ஆதி.6:9; 2 பேது.2:5).

சிலராகிய எட்டுப்பேர் மட்டும் நோவாவின் பிரசங்கம் மூலமாய் விடுதலைப்பெற்று, பேழைக்குள் பிரவேசித்து அழிவுக்குத் தப்பிக் கொண்டார்கள். அதுபோலவே முற்காலத்தில் தீர்க்கதரிசனம் சொன்ன தீர்க்கதரிசிகளுக்குள் கிறிஸ்துவின் ஆவியானவர் இருந்துபேசினார் என்று அறிகிறோம் (1 பேது.1:11).

இதைத்தான் (1 பேது.3:18–20) வசனங்களில் கூறப்பட்டிருக்கிறது. நோவாவின் காலத்தில் கீழ்ப்படியாமற்போனவர்களின் ஆவிகள் காவலில் வைக்கப்பட்டிருந்தனர் என்பதும், அவர்களுக்கு இயேசு போய் பிரசங்கித்தார் என்று கூறுவதும் சரியல்ல. மனிதர்கள் மரித்தபின் அவர்கள் மனந்திரும்புவதற்கோ, சுவிசேஷம் கேட்பதற்கோ தருணம் தரப்படுவதில்லை.

ஆபிரகாமின் குடும்பத்திலுள்ள ஐசுவரியவான் மரித்தபின்பு அவனுடைய ஆவி பாதாளத்தில் வேதனைப்பட்டபோது அவனுக்கு ஆறுதலாக ஒரு துளி தண்ணீர் கூட கொடுக்கப்படவில்லை. மரித்துப்போன லாசரு போய் ஐசுவரியவானின் சகோதரர்களுக்கு மனந்திரும்புதலை பிரசங்கிக்க அனுமதிக்கப்படவுமில்லை என்பது இயேசு கிறிஸ்துவின் திட்டவட்டமான கூற்று (லூக்.16:23–31).

நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டதற்கு முந்தின காலத்தில் உள்ளவர்களுக்கும் கெட்டுப்போகாமலிருக்கும்படி அவர்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டிருந்தது (1 பேது.4:6; எபி.4:2). தேவனைக்குறித்து அறியப்படுவது அவர்களுக்குள்ளே வெளிப்பட்டிருந்தது. தேவனே அதை அவர்களுக்கு வெளிப்படுத்தியிருந்தார். எப்படி என்றால் .... அவருடைய நித்திய வல்லமை தேவத்துவம் என்பவைகள் உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளினாலே, உலகம் உண்டானது முதற்கொண்டு தெளிவாய் காணப்படும். ஆதலால் அவர்கள் போக்குச்சொல்ல இடமில்லை (ரோம.1:19–20).

11. கேள்வி:- காயீனுக்கு மனைவி எங்கிருந்து வந்தாள்?

பதில்:– முதல் மனிதன் ஆதாம், அவன் மனைவி ஏவாள், இருவருக்கும் காயீன், ஆபேல் என்ற 2 மகன்கள். மூத்தவனாகிய காயீன் ஆபேலை கொன்று போட்டான். தேவ சாபத்தைப் பெற்றவனாக பெற்றோரைவிட்டு பரதேசியாக சுற்றியலைகிறான் (ஆதி.4:16). நோத் என்னும் தேசத்தில் வந்து வசிக்கிறான். இப்படியிருக்க, அவன் தன் மனைவியை அறிந்தான் என்று வேதம் திடீரென்று கூறுகிறதே அவனுக்கு மனைவி எங்கிருந்து வரமுடியும்?

சில நாஸ்திகர்களும், பிறமதத்தினரும் கிறிஸ்தவர்களைப் பார்த்துப் பரியாசமாய்க் கேட்கிற கேள்வியாகும் இது. இதற்கு பதிலளிக்கத் தெரியாத ஆவிக்குரியவர்களும் உண்டு. பரியாசக்காரர் நினைப்பது அக்காலத்தில் ஏவாள் தவிர வேறு பெண் இல்லையே; அப்படியானால் காயீன் யாரை மணந்திருக்கமுடியும் என்பதே.

ஆதாம் 930 வருடங்கள் வாழ்ந்தவர். காயீனைப் பெற்றபின் 9 நூற்றாண்டுகள் வாழ்ந்தவர். சேத்தைப் பெற்றபின் 800 வருடங்கள் வாழ்ந்தவர். சேத்தைப் பெற்றபின் ஆதாம் குமாரரையும், குமாரத்திகளையும் பெற்றான் என்று வேதம் கூறுகிறது. நோத் (WANDEROR) பரதேசி என்று பொருள். அதாவது எத்தனை ஆண்டுகள் சுற்றித்திரிந்து இங்கே வந்தான் என்று கூறவியலாது. ஆதாமின் 8ம் நூற்றாண்டுகளில் அவருக்குப்பிறந்த குமாரத்திகளில் எத்தனையோ பேர் இருந்தார்கள்.

இந்த தேசத்தின் வம்சம் நோவா வரை கிரமமாக சொல்லப்பட்டதுபோல் காயீனுக்கும் தெளிவாகச் சொல்லப்பட்டு காயீன் எத்தனை நூற்றாண்டுகள் வாழ்ந்தான் என்று கூறப்படவில்லை. அந்நாட்களில் எத்தனை குமாரத்திகள் வாழ்ந்தார்கள், அவர்கள் எங்கெல்லாம் சென்று வாழ்ந்தார்கள் என்றும் கூறப்படவில்லை.

ஏதேன் என்றாலும் தற்காலத்தில் உள்ள ஈராக் என்றாலும் பாரடைஸ் (Paradise) என்றுதான் பொருள். மேலும் ஐபிராத்து நதி பாபிலோன் அருகே தான் இன்றும் ஓடுகிறது. எனவே ஈராக்கிற்கு கிழக்கே பல நூறு மைல்கள் பல நூறு ஆண்டுகளாக பிரயாணம் பண்ணி நிலையற்றவனாக திரிந்து பரதேசியாக நோத் தேசத்தில் வந்து குடியேறுகிறான்.

இப்படியே புறப்பட்டு வந்த அவன் சகோதர சகோதரிகளும் காயீனைக் கண்டிருக்கலாம். காயீன் சகோதரன் என்றறியாமலேயே அவன் சகோதரியில் ஒருத்தி மனைவியாகக் கொடுக்கப்பட்டிருக்கலாம். அந்நாட்களில் தேவன் திருமண வரம்புச்சட்டங்களைக் கொடுத்திருக்கவில்லை. பின்பு மோசேயின் வழியாக திருமண உறவு முறைகளைக் கொடுத்தார்.

உதாரணமாக ஆரம்பத்தில் மரக்கறி உணவுகளை மட்டும் மனிதனுக்கும் அனுமதித்தார். ஜலப்பிரளயத்திற்குப் பின்பு மாம்ச உணவையும் அனுமதித்தார். மேலும் மோசே காலத்தில் மாம்ச உணவிலும் தவிர்க்க வேண்டிய வரம்புகளைத் தந்தார்.

பெண்களின் வம்சாவழிகளை வேதம் விரிவாக கூறாமல் தடுத்துவந்தது. இதனால் அவன் இவனைப் பெற்றான் என்று படித்து முதலில் குழப்ப மடைகிறோம். எனவேதான் காயீனின் மனைவி இன்னாள் என்று குறிப்பிட்டு நாம் கூறவியலவில்லை. கிறிஸ்து ஒரு கன்னிகையிடத்தில் பிறக்கும் ஒரு சிறப்பான வித்தியாசத்தை தீர்க்கதரிசன நிறைவேறுதல் மிகவும் முக்கியப்

படுத்த ஆரம்பத்திலிருந்தே தேவன் பெண்களின் வம்சப்பட்டியலை எழுத அனுமதிக்காமல் வந்துள்ளார் என்பதை அறிக.

மேற்குறிப்பிட்டவைகளிலிருந்து காயீனுக்கு மனைவியை கர்த்தர் அனுப்பித்தந்ததை அறிய முடிகிறது. திடீரென காயீன் மனைவியை அறிந்தான் என்பதை படித்துவிட்டு ஏவாளைத் தவிர பெண்ணே இல்லாத வேளையில் இது எப்படி சாத்தியம்? வேதம் பொய்! என்று குழம்பி ஏமாந்து விடாதீர்கள். ஆராய்ந்து பார்த்தால் அனைத்தும் விளங்கும். அறியாமையுள்ள காலங்களில் தேவன் காணாதவர் போலிருந்தார் (அப்.17:30).

12. கேள்வி:- இன்றைய இந்திய அரசியல், சமூக சமய சூழ்நிலைகளில் கிறிஸ்தவர்களுக்கென்று தனியாக அரசியல் கட்சி தேவையா?

பதில்:- கிறிஸ்தவர்களுக்கு எந்த ஒரு சூழ்நிலையிலும் அரசியல் கட்சி தேவையில்லை. நாம் ஜீவனுள்ள தேவனை அறியும் கிருபை வரம் பெற்றவர்கள். ஜெபத்திற்கு பதில் அளிக்கும் தேவன் நமக்கு உண்டு. வழிகாட்டும் வசனங்கள் வேதத்தில் உண்டு. எனவே நாம் சுயத்தை சார்ந்திராமல், தேவனையே சார்ந்து நம் காரியத்தை மேற்கொள்வது அவசியம். அதற்கு எல்லாவற்றையும் விண்ணப்பத்தோடும், ஸ்தோத்திரத் தோடும் தேவனிடம் ஒப்படைக்கவேண்டும்.

நம்மை புண்படுத்தும் இயக்கங்களுக்காகத் துக்கப்படுவதை விடுத்து, துன்பப்படுத்துகிறவர்களுக்காக ஜெபிக்கலாம். இதையே இயேசுவும் சொல்லிக்கொடுத்தார். இதை விடுத்து கட்சி அல்லது ஒரு குறிப்பிட்ட அமைப்புமூலம் மற்றவர்களை குற்றப்படுத்தி நாமே நியாயந்தீர்க்க முயற்சிப்பது அறிவீனமாகும். இஸ்ரவேல் மக்கள் தங்களை ஆள ராஜாவைக் கேட்டபோது தேவன் மகிழ்ச்சி அடைந்துவிடவில்லை.

மணவாளனுக்காக ஆயத்தமாக இருக்கவேண்டிய நாம், கிருபையாய் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் நேரத்தையும், தாலந்துகளையும் சுவிசேஷத்தை அறிவிப்பதற்கும், சபையை வளர்ப்பதற்கும் பயன்படுத்துவதை விட்டு, உலகப் பிரகாரமான அரசியல் கட்சியை ஏற்படுத்திக் கொண்டிருப்போமானால் தேவனை விட்டு விலகிச் செல்பவர்களாயிருப்போம். மற்றவர்களுக்கு உப்பாகவும், வெளிச்சமாகவும் வாழவேண்டிய கிறிஸ்தவர்கள், ஜெப ஆயுதத்தின் மூலம் தீமையைக் களைந்து நன்மையை எடுத்து பலப்பட தேவன் கிருபை புரிவாராக.

13. கேள்வி:- கிறிஸ்தவ விசுவாசிகள், ஊழியர்கள் நாய் வளர்க்கலாமா?

பதில் :- இப்படிப்பட்டக் கேள்விகளுக்கு நேரடியான பதில் பரிசுத்த வேதத்திலே எழுதப்படவில்லை யென்றாலும், நாம் எதைச் செய்தாலும் இயேசுவின் நாமத்தினாலே தேவனுடைய நாம மகிமைக்கென்று செய்ய வேண்டுமென்று ஆவியானவர் எழுதிக்கொடுத்திருக்கிறார். என்னிடத்தில் கேட்கும் விசுவாசிகளுக்கு நான் பொதுவாகச் சொல்கிற பதில் வேண்டாம் என்பதே. அதற்குக் கீழ்க்கண்ட காரணங்களைக் கூறுவது வழக்கம். இது பாவம் என்று சொல்லாவிட்டாலும் வீணான பிரச்சனைகளுக்கு காரணமாகி விடுகிறது.

முதலாவதாக வீட்டைக் காக்கும்படி காவலுக்காக நாய் வளர்க்க விரும்புகிறோம் என்றால் கர்த்தர் வீட்டைக் காக்கிறவர் என்பதை நாம் மறந்து விடுகிறோமே. கர்த்தர் வீட்டைக் காவல் செய்யாவிடில் காவலாளர் விழித்திருக்கிறது விருதா என்ற (சங்.127:2)ல் வாசிக்கிறோமே. நம்மையும் நமக்கு உண்டான யாவற்றையும் கர்த்தர் தான் காக்கிறவர் என்ற விசுவாசமில்லாவிட்டால், விசுவாசத்தினால் வராதயாவும் பாவமே.

இரண்டாவதாக நம்முடைய நேரத்தையும் சில வேளைகளில் நம்முடைய பணத்தையும் வீணாக்க வேண்டியதாயிருக்கிறபடியால் நாய் வளர்க்கா மலிருப்பது நல்லது. சில சமயங்களில் நாய் கடிக்க ஆரம்பித்துவிட்டால் அதினால் வேறு பிரச்சனை மற்றவர்கள் வந்து சண்டைபோட ஆரம்பித்து விடுவார்கள். சில சூழ்நிலைகளில் போலீஸ் ஸ்டேஷன் வரை போக வேண்டியது வந்து விடுகிறது.

மூன்றாவது தேவ ஊழியர்கள், விசுவாசிகள் உங்கள் வீட்டிற்கு பயமில்லாமல் தாராளமாய் வரமுடியாது.

நான்காவதாக சுயாதீனமாக நாம் நாயை தனியே விட்டுவிட்டு வெளியூருக்குப் போகமுடியாது. ஊழியங்களினிமித்தம் குடும்பமாக வீட்டைவிட்டு வெளியே போகத்தடை ஏற்படுகிறது. இதுபோன்ற காரணங்களினிமித்தமாக விசுவாசிகள், ஊழியர்கள் நாய் வளர்க்காமல் இருப்பது நல்லது.

14. கேள்வி:- கிறிஸ்தவர்கள் பொட்டு வைக்கலாமா?

பதில்:- சிலர் கண்களுக்கு நடுவே புருவங்களுக்கு மத்தியில் பொட்டு வைத்துக்கொள்கிறார்கள். ஒரு சிலர் அதை அப்படியே மேல் நோக்கி தலையிலும் இழுத்துவிட்டுக்கொள்வதும் உண்டு. வேறு சிலர் தங்கள் வீட்டு நிலைவாசல்களில் செந்தூரக் குங்குமத்தினால் கோடுகள் போட்டு அதன் மத்தியிலே ஓம் என்னும் எழுத்தையும் எழுதிவைப்பதுண்டு. இன்னும் சிலர் தங்கள் கைகளில் நூல் அல்லது மெல்லிய கயிறு கட்டிக்கொள்வதும் உண்டு. இவைகளின் முகாந்திரம் என்ன? ஏன் இப்படி செய்கிறார்கள் என்று கேட்டால் அதற்குச் சரியான பதில் இல்லை. புராணங்களில் இப்படி, அப்படி என்று சிலர் கதை விடுகிறார்கள். ஒரு சில பக்திமான்கள் இதற்கு ஞானவிளக்கம் சொல்லிப் பார்த்தாலும் அது பொருந்துவதாக இல்லை.

ரிக், யசுர், சாம, அதர்வண வேதங்களிலோ, அல்லது மெய்கண்ட சாஸ்திரம் குறள் போன்ற தமிழ் வேதங்களிலோ அல்லது தங்கள் ஆன்மீகத்தில் இறைவனை அறிந்துகொண்ட சித்தர்களின் பாடல்களிலோ இதற்கு எந்த ஆதாரங்களும் இல்லை. ஆரியர் வருகைக்கு முன்பு வாழ்ந்த திராவிடர்களின் வாழ்க்கையில் இப்பழக்கங்கள் இருந்ததாக சங்க இலக்கியங்களோ புதைபொருள் ஆராய்ச்சியாளர்களோ கூறவும் இல்லை. இப்பழக்கங்கள் மத்திய ஆசியாவில் இருந்து இங்கு கடந்து வந்த ஆரியர்களால் கொண்டு வரப்பட்டது என்று காண்கிறோம். ஆரியர்களுக்கு இப்பழக்கம் எப்படி ஏற்பட்டது என்று ஆராயுங்கால் இதற்கு ஆதாரம் பழைய ஏற்பாட்டு புத்தகமாகிய உபாகமத்திலே காணப்படுகிறது.

நான் இன்று உனக்கு கட்டளையிடுகிற இந்த வார்த்தைகள் உன் இருதயத்தில் இருக்கக்கடவது. நீ அவைகளை உன் பிள்ளைகளுக்கு கருத்தாய் போதித்து நீ உன் வீட்டில் உட்கார்ந்து இருக்கிறபோதும், வழியில் நடக்கிறபோதும், எழுந்திருக்கிற போதும் அவைகளை குறித்துப்பேசி அவைகளை உன் கையின் மேல் அடையாளமாகக்கட்டிக்கொள்வாயாக. அவைகள் உன் கண்களுக்கு நடுவே ஞாபகக் குறியாய் இருக்கக்கடவது. அவைகளை உன் வீட்டின் நிலைகளிலும் உன் வாசல்களிலும் எழுதுவாயாக (உபா.6:6-9).

இஸ்ரவேலர்களாகிய யூதர்கள் எகிப்து தேசத்திலே அடிமைகளாய் வாழ்ந்தபோது தங்கள் தேவனாகிய கர்த்தரை நோக்கி முறையிட்டார்கள். தேவன் மோசேயைக் கொண்டு பல அற்புதங்கள் நடப்பித்து கடைசியில்

பஸ்கா ஆட்டின் மூலமாக ஒரு நியமத்தை ஏற்படுத்துகிறார். பஸ்கா ஆட்டின் இரத்தத்தை தங்கள் வீட்டின் நிலைகளிலும், வாசல்களிலும், நிலையின் மேற்ச்சட்டத்திலும் தெளித்து இன்னும் ஆண்டவர் சொன்ன அநேகக் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்தவர்களை சங்காரத்தூதன் கடந்து சென்றான். மற்ற வீடுகளில் சங்காரம் உண்டாயிற்று, இந்த அற்புதத்தை மட்டும் பார்வோனின் மந்திரவாதிகள் செய்யமுடியவில்லை. இவ்விதமாக எகிப்து தேசத்தில் அடிமைகளாக இருந்த யூதர்கள் பஸ்கா ஆட்டின் இரத்தத்தின் மூலமாக விடுதலை பெற்றார்கள் (யாத்.12ம் அதிகாரம்).

மோசே தன் ஜனங்களுக்கு இக்காரியத்தை மீண்டும் நினைவுப்படுத்திக் கூறும்போது (உபா.6:8–9ல்) இவைகளைச் சொல்லுகிறார். யூதர்களும், யூதஸ்திரீகளும், அப்படியே செய்து வந்தார்கள். பஸ்கா ஆட்டின் இரத்தத்தைக் குறிப்பால் உணர்த்தும்படிக்கு சிவப்பு நூலைத் தங்கள் கைகளில் கட்டினார்கள். சிவப்பு நிற அடையாளத்தை தங்கள் கண்களுக்கு நடுவிலே அணிந்தார்கள். சிவப்பு நிறத்தை தங்கள் வீட்டு இருநிலை கால்களிலும் அதன் மேற்சட்டத்திலும் கதவிலும் பூசினார்கள், சிலர் எழுதினார்கள்.

சந்ததி மாற மாற காலத்தை மறந்தார்கள். சடங்குகளை மட்டும் பரம்பரை பரம்பரையாக கைக்கொண்டார்கள். பின்பு இம்மக்கள் பாபிலோனிய கிரேக்க விக்கிரக ஆராதனைக்காரர்களுடன் கலந்து தேவனுடைய கோபத்திற்கு ஆளாகி உலகில் பல பாகங்களுக்கு சிதறடிக்கப்பட்டபோது ஒரு சில யூத பிரிவினர் இத்திராவிட நாட்டிற்குள் நுழைந்து தங்கள் கலாச்சாரத்தை இங்குப் பரப்பினார்கள்.

பிரஜாபதி பலியாக வேண்டும் என்று அழுத்தமாக சொல்லுகிறதற்கு முன்பு செய்யப்படும் மிருக பலி அல்லது **"யக்ஞம்"** உண்மையான பலிக்கு நிழல் என்றும் அவ்வேதம் சொல்லுவதை யாராலும் மறுக்கவோ அல்லது மறைக்கவாவது கூடுமோ; **யக்ஞோத அவதி தயை சாயா க்ரியதே** உண்மையான பலி இரட்சிப்பளிக்கின்றது. இப்போது செய்யப்படும் பலி உண்மையான பலிக்கு நிழல்தான்.

பாவத்தில் அடிமைப்பட்டுக் கிடந்த மனுமக்களை மீட்க பஸ்கா ஆட்டுக்குட்டியாகிய இறைவன் மனிதனாக அவதரித்துத் தமது இரத்தத்தை சிந்த வேண்டியது அவசியம் என்பதை ஞாபகப்படுத்திக்கொள்வதற்காகவே பழைய ஏற்பாட்டுக்கால யூதர்கள் இச்சடங்குகளை நிறைவேற்றி வந்தார்கள்.

தேவன் மனிதனாக அவதரித்து இயேசு என்னும் பெயரில் வெளிப் பட்டபோதோ, அவரை பஸ்கா ஆடாக மேசியாவாக பலியாகவே வந்த இறைவனாக ஏற்றுக்கொள்ளவில்லை. அங்குள்ள யூதர்களுக்கே அந்த நிலை என்றால் இங்கு வந்து நிரந்தரமாக தங்கிவிட்ட யூத ஆரியர்களின் நிலை எப்படி இருந்திருக்கும் என்பதை சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

எனினும் போகர் போன்ற வேத சாஸ்திரிகள் இயேசு பெருமான் பிறந்தபோது அவரை அங்கு சென்று தரிசித்து வந்திருக்கிறார்கள். போகர் இயேசுவைக் குறித்து தமதுபாடல்களில் எழுதியும் இருக்கிறார். ஆனால் இயேசு பிறப்பதற்கு முன்பே இங்கு வந்து தங்கிவிட்ட ஆரியர்கள் இயேசு பிறந்ததையும் அறியாமல் அவர் பாவிகளுக்காக மரித்ததையும் உயிர்த் தெழுந்ததையும் அறியாமல் இன்னமும் பழைய ஏற்பாட்டுக் கொள்கை களையே தாங்கள் என்ன செய்கிறோம் என்பதை அறியாமலேயே செய்து வருகிறார்கள். அதனால்தான் பிற்காலத்தில் எழுதப்பட்ட புராணங்களிலோ, இதிகாசங்களிலோ உபநிடதங்களிலோ இவைகளைக் குறித்த விளக்கம் காணப்படவில்லை.

ஆத்துமாக்களுக்காக பாவநிவர்த்தி செய்வது இரத்தமே என்று யூதர்கள் (ஆரியர்கள்) நம்பினாலும் அப்படி இரத்தம் சிந்திய இயேசுவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு நமக்குள் எல்லாவற்றையும் நிறைவேற்றி பழைய வழக்கங்களை ஒழித்துவிட்ட இயேசுவை தரிசித்துக் கொள்ளாமல் இன்னும் பழைய ஏற்பாட்டு வழக்கங்களையே கடைப்பிடித்து வருகிறார்கள். அதனால்தான் நெற்றியில் பொட்டுவைப்பதும், நிலைக் கால்களிலும், மேற்சட்டத்திலும் குங்குமமிட்டுக் கதவுகளிலும் குங்குமமிட்டு அதன் நடுவே ஓம் என்று எழுதி வைப்பதும், கைகளில் கயிறு கட்டுவதும் எதற்காக என்று அறியாமலேயே செய்து வருகிறார்கள்.

இன்று செந்தூரம் என்னும் சிவப்பு நிறம் நாகரீகம் என்னும் பெயரில் பல நிறங்களில் காணப்படுகிறது. புடவைக்கேற்ற நிறங்களில் குங்குமம் அணிகிறார்கள். சிவப்பு கயிறு, கருப்பு, வெள்ளை, மஞ்சள் என்னும் நிறங்களில் மாறிவிட்டது.

நாளடைவில் இப்பழக்கங்கள் மதாச்சாரியர்களால் திரித்துக்கூறப்பட்டு இன்று இது இந்துமத கோட்பாடுகளில் புதைந்துவிட்டது. அப்படியானால் கிறிஸ்தவர்கள் பொட்டு வைக்கலாமா? கையில் அல்லது கழுத்தில் கயிறு கட்டலாமா? வீட்டு நிலைகளிலும், மேற்சட்டத்திலும் குங்குமம், மஞ்சள்

பூசலாமா? என்று கேட்கலாம். யூதர்கள் அப்படி செய்கிறார்கள். அதிலும் எபிரேயர்கள் இவ்வழக்கங்களை ஆசாரமாக கடைபிடிக்கிறார்கள்.

ஆனால் புது சிருஷ்டியாகிய கிறிஸ்தவர்கள் பழைய வழக்கங்களை கடைபிடிக்கக்கூடாது. பழையவைகள் ஒழிந்தன. கிறிஸ்தவர்கள் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுகிறார்கள். விசுவாசத்தினால் வராத எல்லாம் பாவமே.

இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும் என்று விசுவாசிக்கிறவர்களுக்கு இவ்வடையாளங்கள் தேவையில்லை.

யூதர்கள் அடையாளத்தை கேட்கிறார்கள். கிரேக்கர் ஞானத்தை தேடுகிறார்கள். நாங்களோ சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவை பிரசங்கிக்கிறோம். அவர் யூதருக்கு (ஆரியருக்கு) இடறலாயும் கிரேக்கருக்கு பைத்தியமாகவும் இருக்கிறார். ஆகிலும் யூதரானாலும் (ஆரியரானாலும்) கிரேக்கரானாலும் எவர்கள் அழைக்கப்பட்டிருக்கிறார்களோ அவர்களுக்கு கிறிஸ்து தேவபெலனும், தேவ ஞானமுமாயிருக்கிறார். இயேசுவே தேவனால் நமக்கு ஞானமும், நீதியும், பரிசுத்தமும் மீட்புமானார்.

இன்று அநேக கிறிஸ்தவ பெண்கள் தங்கள் நெற்றியில் பொட்டு வைப்பது, கண்களுக்கு மையிடுவதுமாக இருக்கிறார்கள். இவைகள் பரிசுத்த ஆவியானவரை துக்கப்படுத்துவதாகும். இவர்கள் இயேசு கிறிஸ்துவை அணிந்துகொள்ள முடியாதவர்கள். இயேசு கிறிஸ்து தனக்காக இரத்தம் சிந்தி தன்னை மீட்டுவிட்டார் என்று நம்பாதவர்கள், அல்லது உலகத்தாரை திருப்திப்படுத்த ஆவலுள்ள வீண் சடங்காச்சார மக்கள் அல்லது கொக்கு தலையில் வெண்ணை வைத்து பிடிக்க நினைப்பவர்கள். இப்படிப்பட்டவர்களுக்கு ஐயோ? மூலாதாரத்தை அறிந்தபின்பு மூலையில் எறிய வேண்டியவைகளை தலைமீது தூக்கி வைத்துக்கொண்டு கூத்தாட வேண்டுமா? சிந்திப்போம்.

கிறிஸ்தவர்கள் கண்டிப்பாக பொட்டு வைக்கக்கூடாது.

15. கேள்வி:- தனிக்கட்டையாக இருக்கும் ஆண்டவருக்கு மனிதனுக்குத் துணை வேண்டும் என்ற எண்ணம் எப்படி வந்தது? அதுவும் பெண் துணை வேண்டும் என்ற எண்ணம் எப்படி வந்தது? அந்த பெண் துணையை ஆணின் எலும்பினால் உருவாக்கும் எண்ணம் எப்படி வந்தது?

பதில்:- இது நாத்திகர்களால் பரவலாக, ஏன் பலமாகவே கேட்கப்படுகிற ஒரு கேள்வியாக இருக்கிறது. தேவன் உயிரினங்களை சிருஷ்டித்து அவைகளைப் பலுகிப்பெருகும்படியாக ஆசீர்வதித்தார் (ஆதி.1:22). பலுகிப்பெருக அவை ஆண் பெண் என்று படைக்கப்பட்டது ஆச்சரியமானதும் அல்ல. அதிர்ச்சிக்குரியதும் அல்ல.

தேவ பக்தியுள்ள சந்ததியைப் பெறும்படியாக ஆதாமை படைத்தவர் (மல்கி.2:15). அவனுக்குத் துணையாக ஏவாளைத் தந்தார். இதிலே கேள்விகேட்க என்ன வந்ததோ, நாத்திக நண்பர்களுக்கு.

புருஷனும் மனைவியும் ஒன்றாய் இருக்கவேண்டும் (மாற்.10:7). புருஷன் மனைவிக்குத் தலையாக இருக்கவும் வேண்டும் (எபே.5:24). இவை நிறைவேற புருஷனில் இருந்தே மனைவி சிருஷ்டிக்கப்படுவதே முற்றிலும் சரியானது. எல்லாவற்றையும் நன்றாய் செய்கிறவர் இதையும் நன்றாய் செய்திருக்கிறார்.

பாருங்கள்: ஆணுக்கு பெண்தான் ஏற்றத்துணையென்று பரிசுத்த வேதம் சொல்கிறது (ஆதி.2:18). புருஷனுக்கு மனைவியல்ல, மனைவிக்கு புருஷனே தலையென்றும் வேதம் சொல்கிறது. வேதம் பொய் என்கிறவர்கள்கூட தங்களுடைய குடும்பத்தின் தலைமையை தாங்களே வைத்திருக்கிறார்கள். அதாவது வேதம் பொய் என்று வாயாலே சொல்லி வாழ்க்கையாலே வேதம் மெய் என்று அறிக்கையிடுகிறார்கள்.

பாருங்கள்! ஆணுக்குப் பெண்தான் ஏற்ற துணை என்னும் சத்தியத்தை நாத்திக நண்பர்களாலே ஏன் தான் நிராகரித்திட இயலவில்லை? இளங்கோ அடிகளைக் குறித்து கதையொன்று சொல்லப்படுவது உண்டு. ஆருடத்திலே- ஜோதிடத்திலே அவருக்கு நம்பிக்கை இல்லாதவராய் இருந்தார்.

ஒரு நாள் ஒரு ஜோதிடக்காரன் வந்தான். தந்தைக்குப்பின் உன் தமையன் அல்ல நீயே அரசன் என்றான். ஆருடத்தைப் பொய்யாக்கத் தன்னையே துறவியாக்கிக்கொண்டார். தன்னுடைய மணவாழ்க்கையை அற்பணித்தார்.

இன்றும் வேதம் பொய் என்று சொல்லுகிறவர்கள், வேதம் பொய் என்று பிரச்சாரம் பண்ணுகிறவர்கள். வேதம் பொய் என்று புத்தகம் எழுதுகிறவர்கள், ஆணுக்குப் பெண்தான் ஏற்ற துணை என்று வேதம் விளம்புகிறதை பொய்யாக்க ஆணும் ஆணுமாய் பெண்ணும் பெண்ணுமாய் ஏற்ற துணையாக

வாழ்ந்து வரலாறு படைக்கலாமே! மகத்தான சாதனை சாதிக்கலாமே.

ஆருடத்தை இளங்கோ அடிகளார் பொய்யாக்கியதுபோல வேதத்தை பொய்யாக்க இவ்வழிப்பயணம் தொடங்கலாமே தொடரலாமே ஏன் செய்யவில்லை?

பெரியாரும் அண்ணாவும் கூடியிருந்த நேரம், மணியம்மையை மணந்துகொள்ள பெரியார் தீர்மானித்துவிட்டார். பெரியாருக்கு அதிக வயது, மணியம்மைக்கோ சின்ன வயது. கூடவே கூடாது நாம் சொல்லிவந்த சுயமரியாதைத் தத்துவங்கள் செத்துவிடும். பொருந்தா திருமணம் இது என்று போர்க்கொடி உயர்த்தினார். புயலாக வீசினார் அண்ணா.

நான் மணியம்மையை மணப்பது குடும்பவாழ்க்கைக்காக அல்ல கழகப்பணிகளுக்கு துணைபோக என்று பெரியார் சொல்லிவிட்டார். கழகப் பணிகளுக்கு துணைபோக நாங்கள் இருக்கிறோம் என்று கெஞ்சிப் பார்த்தார் அண்ணா. பகுத்தறிவு தந்தையென்று தமிழகத்தில் பரவலாக அறியப்படும் ஈ.வெ.ரா, நாத்திகம் பேசியே நாட்களைக் கடத்தியவர். வேதம் பொய்யென்று நிரூபிக்க பெரும்பாடு அரும்பாடுபட்டவர்.

தன்னுடைய வாழ்க்கைக்கு துணையாக ஒரு பெண்தான் இருக்கமுடியும் என்று முடிவுக்கு வந்து மணியம்மையை மணமுடித்தார். வேதவாக்கியங்களை வாயாலே நிராகரித்த பெரியார் வாழ்க்கையில் அங்கீகரித்தார். அல்லேலூயா, தேவன் நிர்மாணித்தது நிர்மாணித்ததுதான். அதை நிர்மூலமாக்கவோ நிராகரிக்கவோ முடியாது! முடியவே முடியாது.

நாத்திகம் பேசும் அருமையான நண்பரே ஆண்டவர் உண்டா? இல்லையா? என்று தேடிக்கொண்டு அலையாதீர். இன்றைய சமுதாயத்தை, குடும்பத்தை உற்றுப்பார்த்து உண்மையை உணர்ந்துகொள்ளுங்கள்.

மனுஷனுக்கு ஏற்ற துணையாக மனுஷியை நியமித்த ஆண்டவர். மனுஷனுக்கு மரணத்தையும் நியாயத்தீர்ப்பையும் நியமித்திருக்கிறார் (எபி.9:27) பெரியாராலே முதல் இரண்டையும் நிராகரிக்க முடியவில்லை. மூன்றாவதையும் நிராகரிக்க முடியாது ஏன் நம்மால் கூட.

சகோதரனே, சகோதரியே நியாயத்தீர்ப்புக்குத் தப்பிக்கொள்ள இயேசுவல்லாது இனியொரு வழியில்லை இயேசுவை பற்றிக்கொள்! அல்லேலூயா!

16. கேள்வி:- இராத்திரியில்தான் கர்த்தருடைய பந்தி ஆசரிக்க வேண்டுமா?

பதில்:– அநேகர் கர்த்தருடைய பந்தி இரவில்தான் ஆசரிக்க வேண்டு மென்று கூறுகின்றனர். ஆனால் இப்போது நாம் இரவிலே பந்தி நடத்து வதில்லை. இயேசு காட்டிக் கொடுக்கப்பட்ட இரவில் தானே இராப்போஜனம் செய்தார். எனவே இரவில்தான் அப்பம் பிட்க வேண்டுமென்று கூறுகின்றார்கள்.

பஸ்கா அந்திநேரத்தில் ஆசரிக்கப்பட்டது இது நிழல். ஆனால் நிஜந்தான் முக்கியம். பஸ்காவாகிய இயேசு காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை சிலுவையில் தொங்கினார். கிறிஸ்துவாகிய பஸ்கா அடிக்கப்பட்ட நேரம் சரியான வெயில்நேரம். ஆனால் பழைய ஏற்பாட்டில் அவர்கள் சாப்பாடாக சாப்பிட்டதால் இரவில் ஆசரித்தனர். நிஜமாகிய் இயேசுவை நினைவு கூறும்படியாக அப்பம் பிட்கிறோம்.

அப்படியானால் இதை இரவில்தான் ஆசரிக்க வேண்டுமென்றால் இது தவறு. பஸ்காவாகிய கிறிஸ்து அடிக்கப்பட்ட நேரம் பகல் நேரம். இராத்திரிதான் பந்தி என்றால் அதை உணவாகக் கொள்ளவேண்டும். இரவு நேரத்தில்தான் ஆசரிக்க வேண்டுமென்றால் போஜனத்தையும் முக்கியப் படுத்தவேண்டும். பந்தியின் நேரத்தை முக்கியப்படுத்தினால் இயேசு அடிக்கப்பட்ட பகலின்தான் பந்தி நடத்தவேண்டும். ஏனென்றால் இயேசு பகல் நேரத்தில்தான் சிலுவையில் அறையப்பட்டார்.

என்னை நினைவுகூறும்படி இதைச் செய்யுங்கள் என்றார். எனவே இயேசுவின் மரணத்தை நினைவுகூர குறித்த நேரம் கிடையாது. காலையிலும் அவருடைய மரணத்தை நினைக்கலாம். மாலையிலும் அவருடைய மரணத்தை நினைக்கலாம். இரவிலும் அவருடைய மரணத்தை நினைக்கலாம். இயேசுவின் மரணத்தை நினைவு கூறும்படிதான் பந்தி என்றால் எந்த நேரத்திலும் பந்தி வைக்கலாம்.

இயேசுவின் மரணத்தை ஒரு நாளில் எத்தனைமுறை வேண்டுமானாலும் நினைக்கலாம். ஏன் என்னை இத்தனைமுறை நினைவு கூர்ந்தாய் என்று இயேசு கேட்கமாட்டார். நிஜமான பஸ்கா மரித்தது பகலில்தான். ஆனால் எப்போது வேண்டுமானாலும் பந்தி வைக்கலாம். ஆனால் பகலில் பந்தி நடத்துவது குற்றம் என்று சொல்வது தான் குற்றம். உண்மையான சத்தியம், அப்பம் பிட்குதல் வேறு இராபோஜனம் வேறு.

அப்போஸ்தலரில் சபை ஆரம்பித்த நாட்களில் வீடுகள் தோறும் அப்பம்பிட்டார்கள். ஏனென்றால் ஆலயம் கிடையாது. பொது இடங்களும் கிடையாது. மேலும் யூதர்களுக்கு பயந்ததினால் வீடுகளில்தான் அப்பம் பிட்டார்கள். இவ்வாறு ஆராதனை நடத்தவேண்டுமென்றால் உங்களுடைய வீடுகளைக் கொடுப்பீர்களா? வீட்டிலே ஜெபக்கூட்டங்கள் வைக்கவேண்டும். எனவே கர்த்தருடைய பந்தி எந்த நேரத்தில் வேண்டுமானாலும் நடத்தலாம் இது தவறல்ல.

17. கேள்வி:- உபவாசம் இல்லாமல் செய்யும் ஜெபத்துக்கு வல்லமை இல்லையா?

பதில்:– உண்டு, சரியான விசுவாசத்தோடு செய்யும் எல்லா ஜெபங்களுக்கும் வல்லமை உண்டு பதிலுண்டு. ஆனால் சில குறிப்பிட்ட காரியங்களுக்காக, குறிப்பாக பிசாசினால் தடைபண்ணப்படும் விஷயங்கள் சாதாரண ஜெபத்தினால் நீங்குவதில்லை. ஆண்டவராகிய இயேசுவே கூறினார். இப்படிப்பட்ட பிசாசுகள் உபவாசத்தினாலும் ஜெபத்தினாலுமேயன்றி வேறு எதினாலும், நீங்காது அல்லது போகாது என்று குறிப்பிட்டார்.

நம் ஆவிக்குரிய ஜீவியம் விழுந்துபோவதும் வளராமல் இருப்பதும் பிசாசின் தடைகளில் ஒன்று ஆகும். ஆகவே இரட்சிக்கப்பட்ட விசுவாசிகள் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் உபவாச ஜெபம் மிக மிக அவசியம்.

நம்முடைய சரீர உணர்ச்சிகளை கட்டுப்படுத்தவும், மாம்சத்தின் கிரியைகளிலிருந்து வெற்றிப்பெறவும், நமது ஆவிக்குரிய ஜீவியத்தை மரணம் வரை விழாமல் காத்துக்கொள்ளவும், கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டும் பின்மாற்றத்தோடு வசனத்தின்படி ஜீவிக்காதவர்கள் உயிர்மீட்சிப்பெறவும், இயேசுவை அறியாத மக்கள் இயேசுவை அறிய சுவிசேஷத்துக்கு உண்டாகும் தடைகள் நீங்கவும் உபவாச ஜெபம் மிக அவசியம்.

அவரவர்களுடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்கேற்ப, நோக்கங்களுக்கேற்ப ஒரு நாளோ, இரண்டு நாட்களோ எத்தனை நாட்களானாலும் உபவாசிக்கலாம். இரட்சிக்கப்பட்ட விசுவாசிகள் கண்டிப்பாக அடிக்கடி உபவாசித்து தங்கள் ஆத்துமாவை இயேசு வரும்வரை காத்துக்கொள்ள வேண்டும்.

18. கேள்வி:- சங்கீதங்களில் வசனத்தின் கீழே வரும் சேலா என்பதின் பொருள் என்ன?

பதில்:– சேலா என்ற சொல் சங்கீதத்தில் 71 முறையும், ஆபகூக் மூன்றாம் அதிகாரத்தில் மூன்று முறையும் வருகின்றது. அந்த இசைக் குறிமானம் (NOTATION) இசைப் பின்தொடர்லின் மாற்றத்தைக் குறிப்பிடுகின்றது.

19. கேள்வி:- கன்னிகையின் வயிற்றிலிருந்து கிறிஸ்து உற்பத்தியாகி பிறந்தார் என்பது நம்ப முடியாத ஒரு கதையல்லவா?

பதில் :– A. இதோ ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள்; அவருக்கு இம்மானுவேல் என்று பெயரிடப்படும். இம்மானுவேல் என்பதற்கு தேவன் நம்மோடிருக்கிறார் என்று அர்த்தமாம் என்று ஓர் தீர்க்கதரிசனத்தை ஏசாயா மூலம் தேவன், இயேசு பிறப்பதற்கு முன்பு 740 வருடங்களுக்குமுன் அறிவித்திருந்தார். மேலும் மனிதன் தோன்றிய அக்காலத்திலே அவன் பாவம்செய்து சாவுக்கேதுவானபோது ஸ்திரீயின் வித்தாக (இயேசு) மீட்பர் பிறப்பார் என்பதை தேவன் கி.மு.4000 வாக்கிலேயே அறிவித்திருந்தார்.

எனவே இது தேவனின் முன்னறிவிப்பால், அது அப்படியே நிறைவேறியே ஆகவேண்டும். "கடவுள்" என்ற ஒருவர் இருக்கிறார் என்பதை ஒத்துக் கொண்டால் அவரால் மனிதன் செய்யமுடியாத நம்பமுடியாதவைகளைச் செய்ய முடியாதா?

B. சந்தேகிக்கிற எந்த மனிதன்மீதும் குறைசொல்வதற்கு இல்லை. ஏனெனில் இப்படி இயேசு உன் வயிற்றில் தோன்றுவார் என்ற செய்தியை மரியாள் கேட்டவுடனே அவளும் இது எப்படி ஆகும். புருஷனை அறியேனே என்றாள். அவளுக்கு கிடைத்த பதில் தேவனாலே எல்லாம்கூடும் என்பதே.

C. பவுல் இதனை (கலா.4:5)ல் ஸ்திரீயினிடத்தில் பிறந்தவர் என்று கூறுகிறார். ஆம், கிறிஸ்துவுக்குக் கொடுக்கப்பட்டுள்ள சிறப்பு மரியாளுக்கு கொடுக்கப்படவில்லை. அதைப்போல வேதத்தில் மரியாளுக்கு கொடுக்கப் பட்ட முக்கியத்துவம் கூட யோசேப்பிற்கு கொடுக்கப்படவில்லை. காரணம் இயேசு கிறிஸ்துவுக்கும், யோசேப்புக்கும் இரத்த சம்பந்தமில்லை.

D. இது "சோதனைக் குழாய் குழந்தைகள் வாழும் காலம்!" இப்படிப்பட்ட

அற்புதங்களை மனிதனே செய்ய முடியுமென்றால், மரியாளின் கர்ப்பத்தில் பரிசுத்த ஆவியானவர் தமது விஞ்ஞானத்தினால் ஓர் கருவை உருவாக்கிட முடியாதா?

E. பரிசுத்த வேதாகமம் முழுவதும் அற்புதங்களால் நிறைந்துள்ளது. இந்த அதிசயங்கள் அனைத்தையும் நீக்கிவிட்டால் பரிசுத்த வேதாகமத்தை தேவனின் புத்தகம் என்று சொல்வதற்கு அதில் ஒன்றுமில்லை. எனவே அற்புதமூர்த்தி இயேசுவின் பிறப்பிலே அற்புதம் நடந்ததை நம்பாமலிருக்க வழியில்லை. இரண்டாவது அவர் வாழ்க்கை முழுவதும் அற்புதங்களை அளவில்லாமல் செய்தார் இது அவர் அதிசயப்பிறவி என்று நிரூபிக்கிறது.

F. கிறிஸ்துவின் எதிரிகளாக யூதர்கள் வாழ்ந்தனர். அவர்கள் தாங்கள் எழுதியுள்ள அநேக சரித்திர புத்தகங்களில் ஒன்றிலும் இயேசுவின் கன்னிகை பிறப்பை மறுக்கவில்லை.

G. கி.பி. 110–ல் இக்னேசியஸ் என்பவர் கிறிஸ்து ஓர் கன்னிகைக்கு பிறந்தார் என்று எழுதி வைத்துள்ளார்.

H. கி.பி. 150–ல் ஜஸ்டின் மார்ட்டயர் என்பவர் கிறிஸ்துவின் கன்னிகைப் பிறப்பை எழுதியுள்ளார்.

I. கி.பி. 600–ல் எழுதப்பட்டுள்ள குரான் கிறிஸ்துவின் கன்னிகைப் பிறப்பை ஒத்துக்கொள்கிறது.

K. ஆகாயத்துப் பறவைகளில் சில உடல் சேர்க்கையில்லாமலே வானத்தில் பறந்து செல்கையில் பெண் பறவையின்மேல் ஆண் பறவையின் நிழல் படும்போதே கர்ப்பந்தரிக்கின்றனவே– இவைகளை சிருஷ்டித்த தேவன் பூமியில் பிறக்க இந்த அற்புதம் நடக்க முடியாதா என்ன?

L. சிலவகை மீன்களின் கண்கள் சந்திக்கும்போதே கர்ப்பந்தரிக்கின்றன வாம். இவைகளை உருவாக்கின தேவன் பூமியில் பிறக்க ஒரு கன்னிகையை பயன்படுத்த முடியாதா?

M. தென் அமெரிக்காவின் பெருவைச் சேர்ந்த "லிமோ" என்னும் ஊரில் 5 வயது பெண்ணுக்கு 1939ம் ஆண்டு மே மாதம் 14ந்தேதி ஓர் குழந்தை பிறந்தது இவள் பெயர் லினா மேடினா சிசெரியன் மூலம் குழந்தை கொண்டு வரப்பட்டது. லினா மேடினா 5 வயதில் குழந்தைப்பெற்றெடுக்க முடியுமானால் இவளைப் படைத்த தேவனால் மரியாளின் வயிற்றில் புருஷக்கலப்பின்றி இயேசுவை உருவாக்கக் முடியாதா?

N. "குதிரைமீன்" எனும் மீன் இனத்தில் ஆணினம் தன் வயிற்றிலுள்ள பையில் வைத்து அடைகாத்து முட்டை பொரிக்கிறது. என்றால் இதனை உருவாக்கிய தேவனுக்கு கன்னிகைப் பிறப்பினால் உலகில் வெளிப்படுவது கடினமா?

O. முட்டையிடும் வகை உண்டு, குட்டிப்போட்டு பாலூட்டும் வகையுண்டு. முட்டையிட்டு பொரித்து பின் பாலூட்டும் வகையை காணமுடியாது என்றனர். ஆனால் பெங்கோலின் என்னும் எறும்புத் திண்ணி முட்டையிட்டு குஞ்சுபொரித்து அவைகளுக்கு பாலும் ஊட்டி வளர்க்கின்றனவே. இந்த விந்தையை செய்யும் இறைவனே வந்து பிறக்க கன்னிகை பிறப்பு கடினமா?

P. பனைமரம் கிளையற்றது என்றுதான். வாதிடுவோம். ஏழு கிளைகளுடைய பனைமரம் புதுகோட்டை மாவட்டம் அறந்தாங்கியிலிருந்து 10கிமீ. தொலைவில் உள்ள நெம்மேலி எனும் இடத்தில் உள்ளது. இந்த மாற்றத்தை செய்யும் கைவண்ணம் தேவனிடம் உண்டென்றால் கன்னிகை பிறப்பு அவருக்குக் கடினமா?

Q. இரண்டு கண்களுடைய விலங்குகளை காணலாம். 3 கண் களுடையதைத் காணமுடியாது என்று நம்பி வந்தனர். SPHENODEN ஸ்பெனோடன் எனப்படும் ஓனான் நியூஜிலாந்தில் உண்டு. இதற்கு 3வது கண்ணும் உண்டு. இந்த அற்புத விலங்கை சிருஷ்டித்த தேவனால் கன்னிகையின் வழியாக பிறக்கமுடியாதா?

R. ராணி தேனீ (Queen Bee) ஆண் சேர்க்கையில்லாமலேயே கர்ப்பந்தரித்து தேனீக்களை பிறப்பிக்கும். ஆனால் கிடைக்கும் தேனீயோ ஆண் தேனீயாகத்தானிருக்குமாம். (Wisdom April 85.page 40) தேவன் படைத்த இந்த ராணி தேனீ ஆண் சேர்க்கையில்லாமல் ஆணினத்தை பிறப்பிக்க சக்திவாய்ந்ததானால் தேவனால் மரியாளின்மூலம் புருஷ சம்பந்தமின்றி பிறக்கமுடியாதா?

S. குதிரைமீன் பெண் சேர்க்கையின்றி (ஆண் மீன்) தானே தன்னைப் போன்ற அநேக ஆண் மீன்களை வெளிவிடுகின்றனவாம். லண்டன் பொருட் காட்சி சாலையில் இன்றும் இது நிரூபிக்கப்படுகிறது. இந்த விந்தையை புரியும் தேவனால் இப்பூமியில் வெளிப்பட அற்புதமாக கன்னிகை பிறப்பை கையாள முடியாதா?

T. இப்படி அவர் கன்னிகை வயிற்றில் உற்பத்தியாக காரணம் என்ன?

அவர் மனிதனல்ல என்பதை நிரூபிக்கவே. அவர் தேவனாகவும், மனிதனாகவும் கொஞ்சகாலம் இருக்கவேண்டும். எனவே பிறந்து வளரவும் வேண்டும். அதற்கு ஒரு பெண் வேண்டும். ஏன் மனித உடல் அவருக்குத் தேவை? மனிதன் செய்யும் பாவத்தின் தண்டனைகளையெல்லாம் தன்மீது போட்டுக்கொள்ள ஆவியான இறைவனுக்கு உடல் தேவை.

அவர் மரியாளின் வயிற்றில் தோன்றி பிறந்து தன் சிருஷ்டிப்பு வல்லமையைக் காட்ட கூன், குருடு, செவிடு, ஊமை, முடம் ஆகியவர்களுக்கு உறுப்புகளை ஒரே வார்த்தையில் சிருஷ்டித்து சிருஷ்டி கர்த்தா என்று நிரூபித்து; நானே மனிதனுடைய பாவத் தண்டனையும் ஏற்றுக்கொள்கிறேன் என்னும் நீதியை சிலுவை மரணம் வழியாக நிரூபித்தார். உயிரோடே மூன்றாம் நாளிலே மீண்டும் வந்தார்.

இயேசுவே மெய்யான தேவன்– அறிந்து உணர்ந்து நம்பி அண்டிக் கொள்வீர்.

20. கேள்வி:- பிதாக்களின் அக்கிரமத்தை மூன்றாம் நான்காம் தலைமுறை மட்டும் விசாரிப்பேன் என்று பழைய ஏற்பாட்டில் கூறப்பட்டுள்ளதே, பிள்ளைகள் தேவனை தேடுபவர்களாக இருந்தாலும் தண்டனை தொடருமா?

பதில்:– அதே பழைய ஏற்பாட்டிலேயே அதன் பதில் இருக்கிறதே. எசே.18:2; எரே.31:29–30. பாவஞ் செய்கிற ஆத்துமாதான் சாகும் என்று எழுதியிருக்கிறது. பிதாக்கள் திராட்ச காய்களைத் தின்றார்கள். பிள்ளைகளின் பற்கள் கூசிப்போயின என்று அந்நாட்களில் சொல்ல மாட்டார்கள் (எரே.31:29). இயேசு கிறிஸ்துவின் மரணம் மூலம் எந்த சாபமும் இயேசுவை நேசிக்கிறவர்களுக்கு தொடராது தொடாது தைரியமாயிருங்கள்.

21. கேள்வி:- கிறிஸ்தவ மார்க்கத்தை அழிக்க எவராலும் முடியுமா?

பதில்:– கிறிஸ்தவத்தை அழிக்க ஒருவராலும் ஒருக்காலும் முடியாது. ஏனென்றால் கிறிஸ்தவம் இல்லாமல் உலகமே இல்லை. பென்சில் பேனா முதல் ரயில், கப்பல், விமானம் அத்தனையும் கண்டுபிடித்தவர்கள் யார்? அஞ்ஞானியுமல்ல. நாஸ்திகனுமல்ல, மெஞ்ஞானிகளாகிய கிறிஸ்தவர்களே யாவர்.

பிரெஞ்சு, தத்துவ ஞானியான வால்டேர் என்பவர் அகில உலகத்திலும் பேர் பெற்ற நாஸ்திகன். கிறிஸ்தவத்தை மிக வல்லமையாக எதிர்த்த வனாவான். அவன், நான் என்னுடைய பேனாவைக்கொண்டே இன்னும் 100 வருடங்களில் இந்த உலகத்திலிருந்தே கிறிஸ்தவத்தை அழித்து விடுகிறேன் என்று சவால் விட்டான்.

ஒருநாள் அவனுடைய கொள்கைகளைப் பரப்புவதற்காக கப்பலில் அட்லாண்டிக்கடலைத் தாண்டிப் போவதற்காகப் பிரயாணம் பண்ணினான். போகும் வழியில் பெருங்காற்றினால் கப்பல் உடைந்தது. கடலில் அலைமோதிய மக்கள் கப்பலில் உடைந்து மிதந்த கட்டை, ரப்பர் இவைகளைப் பிடித்துக்கொண்டு தங்களின் உயிரைக் காப்பாற்றப் பிரயாசப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

வால்டேர், தன் உயிருக்காக சமுத்திரத்தின் மத்தியில் போராடிக் கொண்டிருந்தான். சமீபத்தில் ஒருவன் ஒரு மரக்கட்டையில் மிதந்து கொண்டிருப்பதைப் பார்த்து, அவனோடு சேர்ந்து அதில் ஏறிக்கொண்டு ஜீவன் தப்பிவிடலாம் என்று அவனை நோக்கி நீந்தி சென்று அந்த மரக்கட்டையில் ஏறிக்கொண்டான். முன்பு கட்டையில் ஏறி இருந்தவன் ஒரு கிறிஸ்தவன்; அவனோ சத்தமாய் ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தான்.

நாஸ்தீகனான வால்டேர் அந்த மரக்கட்டையில் ஏறிக்கொண்டான். வால்ட்ரோ களைத்துப்போய் அசந்திருந்தார். ஜெபித்துக்கொண்டிருந்த கிறிஸ்தவனோ மிகவும் ஆத்திரப்பட்டு வால்ட்டேரைப் பார்த்து நான் ஜெபித்தபோது தேவன் எனக்கு இந்தமரத்துண்டைத் தந்தார். உனக்கு ஜீவன் வேண்டுமானால் ஜெபம்பண்ணு அல்லது கீழே இறங்கிவிடு என்று சொன்னான்.

உலகப் புகழ்பெற்ற நாஸ்திகனாகிய வால்டேர் தேவனே என்னைக் காப்பாற்றும் என்று கதறி ஜெபிக்க ஆரம்பித்தான் (அல்லேலூயா) தேவன் ஜெபத்திற்குப் பதில் அளித்தார். தேவ கிருபையால் இருவரும் கரையேறினார்கள். வால்டேர் தன்னுடைய வாழ்க்கையின் பின் பகுதியில் தேவனுக்காக செலவழித்த சமயம் அதிகம். வால்டேர் மரித்தபின்பு பிரான்சில் அவர் வசித்த வீடு வேதாகமங்களைப் பராமரிக்கும் ஒரு சிறந்த இடமாக மா்ற்றப்பட்டது. இன்றும் அதே இடம் பிரெஞ்சு மொழியில் வேதாகமங்களை அச்சிட்டு வழங்கும் பெரிய ஸ்தாபனமாக செயல்பட்டுவருகிறது.

இப்படி எத்தனையோ சாட்சிகள் உண்டு. எழுதினால் ஏடு இடங் கொள்ளாது. கிறிஸ்தவத்தை எதிர்த்த ஒருவனும் நன்றாய் வாழ்ந்ததாக வரலாறு கிடையாது. கிறிஸ்தவத்தை அழிக்க எவராலும் முடியாது முடியவே முடியாது.

22. கேள்வி:- கிருபையின் காலத்திலிருக்கிற நாம் தசமபாகம் கொடுக்க வேண்டுமா? எங்கு கொடுக்கவேண்டும்?

பதில்:– தசமபாகத்திற்கு அதிகமாகவே கொடுக்க வேண்டும். வேதபாரகர், பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால் பரலோக ராஜ்ஜியத்தில் பிரவேசிக்க மாட்டீர்கள் என்றும் நமதாண்டவர் திட்டமாக சொல்லியிருக்கிறார் (மத்.5:20).

பரிசேயரே உங்களுக்கு ஐயோ, நீங்கள் ஒற்றலாம், மருக்கொழுந்து முதலிய சகலவித பூண்டுகளிலும் தசமபாகம் கொடுத்து நியாயத்தையும், தேவ அன்பையும் விட்டுவிடுகிறீர்கள்; இவைகளையும் செய்யவேண்டும், அவைகளையும் விடாதிருக்க வேண்டும் என்று எழுதப்பட்டிருக் கிறதை கவனியுங்கள் (லூக்.11:42).

ஆண்டவருக்கென்று நாம் எதைச் செய்தாலும் மனப்பூர்வமாய் செய்ய வேண்டுமென்று எதிர்பார்க்கிறார். உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார் என்ற வசனத்தின்படி கொஞ்சம் கொடுத்தால் போதுமானது என்று தங்களைத் திருப்திப் படுத்திக்கொள்ள முடியாது. பரிசேயரே எல்லாவற்றிலும் தசமபாகம் கொடுத்தார்கள் என்றால் நாம் அதற்கு அதிகமாகவே கொடுக்கிறவர்களாக இருக்கவேண்டும்.

சமீபத்தில் ஒரு சபையைச் சேர்ந்த இரண்டு விசுவாசிகள் என்னிடம் நாங்கள் 10ல் 2 பங்கு எங்கள் சபைக்கு கொடுக்கிறோம். ஒருபங்கு சபையின் பராமரிப்புக்காகவும் ஒரு பங்கு சபை மூலமாய் நடக்கிற ஊழியங்களுக் காகவும் அப்படி செய்கிறோம் என்றார்கள். எவ்வளவு உற்சாகமான காரியம்.

மல்கியா 3ம் அதிகாரம் 8 முதல் 10 வரையுள்ள வசனங்களின்படி தசமபாகம், பண்டக சாலைக்குக் கொண்டு வாருங்கள் என்று திடமாக சொல்லப்பட்டிருக்கிறபடியால், கொடுப்பதற்கு ஒரு ஒழுங்கான திட்டம் நாம் ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். புதிய ஏற்பாட்டு விசுவாசிகளுக்கு பண்டகசாலை என்பது அவர்கள் ஐக்கியம் கொண்டுள்ள சபையைக் குறிக்கிறது. காணிக்கையைப்பற்றி எந்த அளவும் சொல்லப்படவில்லை.

எனவே தசமபாகத்திற்குக் குறையாமல் பத்தில் ஒன்றை சபைக்கும், காணிக்கைகளை தேவ நடத்தலின்படி ஊழியருக்கும், மற்ற ஊழியங் களுக்கும் கொடுக்கவேண்டும். கர்த்தருக்குக் கொடுப்பதிலும் ஆவியான வருடைய வழி நடத்தலின்படி செய்யப்படவேண்டும்.

தசமபாகம் என்னுடையது என்று தேவன் சொல்லியிருப்பதினால் தேவனுடையதை தேவனுக்குச் செலுத்த தாமதிக்கவேண்டாம். அப்படிச் செலுத்துவதற்காக ஒவ்வொரு விசுவாசியும் ஒரு ஸ்தல சபைக்கு தங்களை ஒப்புக்கொடுத்து பண்டகசாலையாகிய அந்த சபையிலே ஆகாரம் உண்டா யிருக்கும் பொருட்டு தசமபாகங்களையெல்லாம் அங்கு கொண்டு செல்லுங்கள். அப்பொழுது கர்த்தர் வானத்தின் பலகனிகளைத் திறந்து இடங்கொள்ளாமல் போகுமட்டும் உங்கள் மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்கப்பண்ணுவார். ஆமென்.

23. கேள்வி:- அந்நிய பாஷையின் அர்த்தம் புரியுமா?

பதில்:– பெந்தெகொஸ்தெ நாளில் அபிஷேகம் பெற்றவர்கள் அனைவரும் அந்நியபாஷைப் பேசினார்கள். அவர்கள் பேசிய அந்நியபாஷை மற்றவர்களுக்குப் புரிந்தது, இன்று பெந்தேகொஸ்தேக்காரர்கள் பேசுகிற அந்நியபாஷை மற்றவர்களுக்கு புரிவதில்லை. ஆகவே அவர்கள் பேசுகிற அந்நியபாஷையை அங்கிகரிக்க முடியாது. அங்கிகரிக்கக்கூடாது என்று போதிக்கிற பாரம்பரிய சபைகள் பல உண்டு.

பெந்தெகொஸ்தெ நாளில் அபிஷேகம் பெற்றவர்கள் அந்நிய பாஷை பேசினார்கள். அவர்கள் பேசியதை வானத்தின் கீழிருக்கிற சகல தேசத்தாரிலுமிருந்து வந்த தேவ பக்தியுள்ளவர்கள் கேட்டார்கள் (அப்.2:5–6).

தேசத்துக்கு தேசம் பேசும் மொழியிலே பேதமுண்டு. உலகிலுள்ள எல்லா மொழி பேசுகிறவர்களும் அங்கிருந்தார்கள். அங்கே பேசப்பட்ட பாஷை உலகத்தில் உள்ள யாரோ ஒருவருடைய ஜென்மபாஷையாக இருந்தது. கவனியுங்கள்! அந்நிய பாஷையில் அவர்கள் பேசினார்கள் எல்லா பாஷைக்காரர்களும் அங்கே இருந்தபடியால் அவர்கள் பேசியதை புரிந்துகொண்டார்கள்.

இன்றும் அந்நிய பாஷை பேசுகிற சபையிலே, உலகிலுள்ள சகல மொழி பேசுகிறவர்களின் தேவபக்தியுள்ள பிரதிநிதிகளைக் கூட்டி வைத்தால், அந்நியபாஷை அவர்களுக்கு புரியக்கூடியதாகவே இருக்கும் இன்னும்

கவனிக்க வேண்டிய மிக முக்கியமான இனியொரு காரியமும் இருக்கிறது.

தேவபக்தியுள்ளவர்கள், தேவனுடைய மகத்துவங்களைப் பேசக் கேட்டார்கள் (அப்.2:11). மற்றவர்கள், தேவபக்தியற்றவர்கள் அந்நிய பாஷையில் தேவனுடைய மகத்துவங்களைப் பேசினவர்களை, மதுபானத்தினால் நிறைந்திருக்கிறார்களென்று பரியாசம் பண்ணினார்கள் (அப்.2:13).

இன்றைக்கும் அந்நிய பாஷை பேசுகிறவர்களைப் பரியாசம் பண்ணுகிறவர்கள் இருக்கிறார்கள். இவர்கள் தேவ பக்தியற்றவர்கள், இதற்கு வேதமே சாட்சி, சரியான அத்தாட்சி, தேவபக்தியற்றவர்களுக்கு விரோதமாய் தேவகோபம் வெளிப்பட்டிருக்கிறது (ரோம.1:18).

பரிசுத்த பவுல் நான் மனுஷர் பாஷைகளையும் தூதர் பாஷைகளையும் பேசுவதாக சொல்லுகிறார் (1 கொரி.13:1). அந்நியபாஷை பேசுகிறவர்கள் தூதர்பாஷை பேசுவதும் உண்டு. தூதர் பாஷை பேசினால் மனுஷருக்கு புரிவதில்லை. அவன் பேசுகிறதை ஒருவனும் அறியாதிருக்கிறபடியினாலே தேவனிடத்தில் பேசுகிறான் (1 கொரி.14:2) என்கிறார் பவுல்.

பிரியமானவர்களே நீங்களும் அந்நிய பாஷை பேசவேண்டும் (1 கொரி.14:15). பேசுகிறவர்களை தடைபண்ணவும் வேண்டாம் (1 கொரி.14:39). அந்நிய பாஷை அடையாளத்தோடு அபிஷேகத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

24. கேள்வி:- பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த நாஸ்ட்ரடாம்ஸ் கூறிய தீர்க்கதரிசனமெல்லாம் அச்சுப் பிசகாமல் நிறைவேறியுள்ளதாமே! அவர் தேவனுடைய தீர்க்கதரிசி என்றும் ஓர் தமிழ் கிறிஸ்தவ இதழில் படித்தேன் உண்மையா?

பதில்:- சுமார் 400 ஆண்டுகளுக்கு முன் அதாவது 1503ல் இருந்து 1566 வரை பிரான்சில் வாழ்ந்தவர். நாஸ்ட்ரடாம்ஸ். இவர் நூற்றாண்டுகள் என்றவொறு நூலை எழுதினார். இதில் இனி நடைப்பெறப்போகும் சம்பவங்கள் தெளிவான தீர்க்கதரிசனங்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளன என்று கேள்விப்பட்டு பிரெஞ்ச் மொழியிலுள்ள அவரது தீர்க்கதரிசனங்கள் அடங்கிய புத்தகம் ஒன்றை வாங்கினேன்.

இந்த நூல் முழுவதும் கம்பராமாயணம்போல பாடல் வடிவிலானது. இதில் எதிர்காலம் பற்றி நேரடியாக ஒன்றும் கூறாமல் மறைபொருளாக கூறப்பட்டுள்ளது. எனவே இப்பாடல்களுக்கு அவரவர் தங்கள் சொந்த

விருப்பப்படியே பொருள்கொள்ள நிறைய வாய்ப்பு உண்டு. இவர் இப்பாடல்களை பரவசநிலையிலும் (Trance) மற்றும் கிரிஸ்டல் பாலின் முன்பாக அமர்ந்தும் (மேல் நாட்டில் ஆவிகளுடன் பேசும் ஒருமுறை) பாடியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது தேவனுடைய தீர்க்கதரிசிகளுக்கு இலக்கணமாக இல்லை.

மேலும் தேவனுடைய தீர்க்கதரிசிகள் தேவனையும், இயேசுவையும் மையமாகக் கொண்டே தீர்க்கதரிசனம் உரைத்திருக்கிறார்கள். அதுவும் இவரிடத்தில் இல்லை. பின்னே, இவர் தீர்க்கதரிசனங்களெல்லாம் அப்படியே நிறைவேறுவது எப்படி? தெளிவற்ற இவர் பாடல் வரிகளுக்கு யார் எப்படி வேண்டுமானாலும் பொருள் கூறி சரியானதுபோல ஆக்கிவிட வசதி நிறையவே இருக்கிறது.

எரிகோ சீத்தம் (Erica Ceetham) என்பவர் இம்மாதிரி திறமையாக விளக்கம் கூறியுள்ளார். அதாவது நடந்த சம்பவங்களை இவர் பாடல் வரிகளுடன் ஒப்பிட்டு ஒப்பற்ற தீர்க்கதரிசனம் என்கிறார். அவர் எழுதியுள்ள "Prophecies of Nostrodamus" என்ற நூலில் அவர் இப்படிக் குறிப்பிட்டுள்ளார். நாஸ்ட்ரடாமின் தீர்க்கதரிசனங்களில் 95 சதவீதத்தை சரியானவை யல்லவென்றோ, யதார்த்தமாக நிறைவேறியவை என்று ஒதுக்கிவிட்டால் கூட எஞ்சியுள்ள ஐந்து சதவீதம் சம்பவங்களை பொட்டில் அடித்தாற்போல அவர் மிகத் துல்லியமாக சொல்லியிருப்பது வியப்பூட்டுகிறது.

ஒருவன் தேவனுடைய தீர்க்கதரிசியாயிருந்தால் 100 சதவீதமும் நிறைவேறவேண்டும். ஐந்தோ அல்லது ஐம்பதோ மட்டும் நிறைவேறினால் போதாது. முழுவதும் நிறைவேறினால் அவனே தேவனுடைய உண்மையான தீர்க்கதரிசியாவான்.

25. கேள்வி:- விசுவாசிகள், ஊழியர்கள் TV வாங்கலாமா? TV பார்க்கலாமா?

பதில்:- வசதி இருக்குமானால், தேவையானால் TV வாங்குவது பாவமல்ல. ஆனால் கடன் வாங்கியோ, தவணை முறையிலோ வாங்குவது கூடாது. நமக்கு இன்னது தேவை என்று அறிந்திருக்கிற ஆண்டவர் தேவையானால் கடன் இல்லாமல் தருவார். இந்நாட்களில் TV வாங்குவது ஒரு அத்தியாவசியம் என நினைப்பது தவறு.

TV வாங்குவதற்கு முன்னால் அதை உபயோகிக்கும் விதத்தைக் குறித்து மிகவும் கவனமாயிருக்கவேண்டும். தங்கள் ஜெப நேரத்தையும், வேதவாசிப்பையும், பிள்ளைகளின் படிப்பையும் TV எவ்வளவேனும் பாதிக்கக்கூடாது! சினிமா, டிராமா, விக்கிரக ஆராதனை போன்ற நிகழ்ச்சிகள் நம் வீட்டிற்குள் TV மூலமாக வரவேக்கூடாது. விக்கிரக ஆராதனையை நம் வீட்டில் TV மூலம் அனுமதிப்போமானால் பிசாசுக்கு நம் வீட்டைத் திறந்து வரவழைப்பதற்குச் சமானம்.

காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ள வேண்டிய கிறிஸ்தவர்கள் மணிக்கணக்காய் TV முன்னால் உட்கார்ந்து செய்யவேண்டிய வேலையை சரியாய் செய்யுாமலிருப்பது பாவமே. எதைச் செய்தாலும் கர்த்தருக்கென்று தேவமகிமைக்காக செய்வோமாக TV வாங்குவது பார்ப்பது கூர்மையான கண்ணி, அதில் சிக்காமல் இருக்க TV வாங்காமலிருப்பதே நல்லது.

26. கேள்வி:- நான்காம் நாளில் தானே சூரியனையும், சந்திரனையும் தேவன் படைத்தார். பூமி தினமும் சுற்றுவதால் அல்லவா இரவும் பகலும் உண்டாகிறது. இதற்குமுன் உள்ள மூன்று நாட்களும் இரவும் பகலும் உண்டானது எப்படி?

பதில்:- தேவன் வெளிச்சம் உண்டாகக்கடவது என்றார். வெளிச்சம் உண்டாயிற்று (ஆதி.1:3). வெளி.21:23ல் நகரத்திற்கு வெளிச்சம் கொடுக்க சூரியனும், சந்திரனும் அதற்கு வேண்டுவதில்லை, தேவனுடைய மகிமையே அதைப் பிரகாசித்தது என்று தெளிவாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன் (யோவா.1:4) என்று சொன்ன தேவனே வெளிச்சமாயிருந்தார் என்பது தெளிவாகிறது.

27. கேள்வி:- மத்தேயு 24ம் அதிகாரம் கர்த்தருடைய இரண்டாம் வருகையைப் பற்றியல்லவா சொல்லுகிறது. வசனம் 19ல் அந்நாட்களில் கர்ப்பவதிகளுக்கும் பால் கொடுக்கிறவர் களுக்கும் ஐயோ என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த நிலையிலுள்ள ஸ்திரீகள் பரலோகத்திற்குச் செல்ல முடியாது என்பது பொருளா?

பதில்:- மத்.24ல் சொல்லப்பட்டிருப்பவை கர்த்தருடைய வருகையைப்

பற்றியவை மட்டுமல்ல. சீஷர்கள் மூன்று கேள்விகளைக் கேட்டார்கள். (வசனம்–3).

1. எருசலேமின் அழிவு எப்போது?

2. உம்முடைய வருகைக்கு அடையாளம் யாது?

3. உலகத்தின் முடிவிற்கு அடையாளம் என்ன?

இந்த மூன்று கேள்விகளுக்கும் சேர்த்துக் கர்த்தர் பதில் சொல்லுகிறார். இதில் கர்த்தர் நடுவானில் வரும் காரியம் பற்றி எதுவுமே குறிப்பிடப்படவில்லை. அவர் நடுவானில் வரும் விஷயம் பின்னால் வெளிப்படுத்தப்பட்டஒன்று 19ம் வசனம் எருசலேமின் அழிவைப்பற்றிச் சொல்லுகிறது. ரோமப்படை எருசலேமை முற்றுகையிடுகிறதைக் கண்டபோது, அவர்கள் கர்த்தர் சொன்ன இந்த வார்த்தைகளை நினைவுகூர்ந்து, மாடிகளில் இருந்தவர்கள் கீழேயிறங்காமலே தப்பமுடிந்தவர்கள் தப்பினார்கள். (மேல் பகுதிகள் வழியாய்) ஓடித் தப்ப முடிந்தவர்கள் பட்டணத்தைவிட்டு வெளியேறி ஓடித் தப்பினார்கள். கர்ப்பவதிகளும், பால்கொடுக்கும் குழந்தைகள் உடையவர்களுக்கும் அவ்வாறு ஓடித் தப்பித்துக்கொள்ள இயலாமற் போயிற்று இதைப்பற்றி மட்டும்தான் 19ம் வசனம் கூறுகிறது தவிர வேறு ஏதுமில்லை.

மற்றப்படி கர்ப்பவதிகளும், பால் கொடுக்கிறவர்களும் இரட்சிக்கப்பட்டவர்களாயிருந்தால் வருகையில் மகிமையில் எடுத்துக்கொள்ளப்படுவார்கள் என்பதற்கு எவ்வித சந்தேகமும் தேவையில்லை.

28. கேள்வி:- இயேசு கிறிஸ்துவின் ஐந்து காயங்கள் உலகத்தின் ஐந்து கண்டங்களுக்காகவே ஏற்பட்டது என்கிறார்களே எப்படி?

பதில்:– இது அந்த காலத்து பிரசங்கியார்கள் பயன்படுத்திய வாசகம். அப்போது உலகத்தை ஐந்து கண்டங்களாக (CONTINENTS) பிரித்திருந்தார்கள். ஆனால், தற்போது ஏழு கண்டங்களாக உலகத்தை பிரித்துள்ளார்கள். 1. ஆசியா, 2. ஆப்பிரிக்கா, 3. வட அமெரிக்கா, 4. தென் அமெரிக்கா, 5. ஐரோப்பா, 6. ஆஸ்திரேலியா, 7. அண்டார்டிகா என்பன ஆகும்.

இயேசு கிறிஸ்துவின் காயங்களை கொஞ்சம் ஆராய்ந்து பார்த்தால் எட்டுக்குமேல் கணக்கிடலாம்.

1. முதல் காயம்:- கெத்சமனேயில் அவர் வியர்வை இரத்தத்தின் பெரும் துளிகளாய் நிலத்தில் விழுந்ததாக எழுதப்பட்டுள்ளது (லூக்.22:44). இரத்த நாளங்கள் வெடித்தால் மட்டுமே இரத்தம் மயிர்க்கால்கள் வழியாக வெளிவரும். ஆகவே இதை முதல் காயம் எனலாம்.

2. இரண்டாவது காயம்:- முள் முடியைப் பிண்ணி அவருக்கு சூட்டினார்கள் (மாற்.15:17). முள்ளினால் ஒரு கிரீடம்போல பிண்ணி அதை தலையில் வைத்து அழுத்தியதால் ஏற்பட்ட காயம், இதை இரண்டாவது காயம் எனலாம்.

3. மூன்றாவது காயம்:- இயேசுவைப் பிடித்து வாரினால் அடிப்பித்தார்கள் (யோவா.19:1). ரோமர்கள் தவறு செய்தவர்களைத் தண்டிக்கப் பயன்படுத்திய சாட்டை வாரின் நுனியில் இரும்புத் துண்டுகள் கட்டப்பட்டிருக்கும். சாட்டையை ஒருவன் அடித்து இழுக்கும்போது இந்த இரும்புத் துண்டுகள் சதையைப் பிய்த்து எடுத்துக்கொண்டுவரும். இந்த வகையில் உண்டான காயம் மூன்றாவது ஆகும்.

4. நான்காவது காயம்:- போர் சேவகரில் ஒருவன் ஈட்டியினாலே அவருடைய விலாவில் குத்தினான். உடனே இரத்தமும் தண்ணீரும் புறப்பட்டது. இது நான்காவது காயம் எனலாம்.

ஐந்தும், ஆறும், ஏழும், எட்டாவதும் இரண்டு கைகள் இரண்டு கால்களில் ஆணிகளால் அடிக்கப்பட்டதால் உண்டானவைகள், ஆகமொத்தம் எட்டு காயங்கள் இயேசுவின் சரீரத்தில் உண்டானது என்று கணக்கிடலாம். ஆனால் இவைகளைவிட இயேசு கிறிஸ்து தன் சரீர முழுவதையும் சாக ஒப்புக்கொடுத்ததை பார்க்கும்போது இந்த காயங்களை யோசிப்பது எம்மாத்திரம். இயேசுவின் காயங்களின் கனிகளே நாம் களிகூர்ந்து மகிழ்ந்து ஆடிப்பாடுவோம். ஒவ்வொரு காயங்களையும் முத்தம் செய்வோம்.

29. கேள்வி:- சொரூபங்கள் அல்லது விக்கிரகங்கள் தீமை செய்யுமா?

பதில்:- கர்த்தர் சொல்லுகிற வசனத்தைக் கேளுங்கள். புறஜாதிகளுடைய மார்க்கத்தைக் கற்றுக்கொள்ளாதிருங்கள்; வானத்தின் அடையாளங்களாலே

புறஜாதிகள் கலங்குகிறார்களே என்று சொல்லி, நீங்கள் அவைகளாலே கலங்காதிருங்கள்.

ஜனங்களின் வழிபாடுகள் வீணாயிருக்கிறது; காட்டில் ஒரு மரத்தை வெட்டுகிறார்கள். அது தச்சன் கையாடுகிற வாச்சியால் பணிப்படும், வெள்ளியினாலும், பொன்னினாலும், அதை அலங்கரித்து, அது அசையாதபடிக்கு அதை ஆணிகளாலும் சுத்திகளாலும் உறுதிப்படுத்து கிறார்கள்.

அவைகள் பனையைப்போல் நெட்டையாய் நிற்கிறது. அவைகள் பேசமாட்டாதவைகள், அவைகள் நடக்கமாட்டாததினால் சுமக்கப்பட வேண்டும்; அவைகளுக்குப் பயப்படவேண்டாம், அவைகள் தீமை செய்யக்கூடாது; நன்மை செய்யவும் அவைகளுக்குச் சக்தி இல்லையென்று கர்த்தர் சொல்லுகிறார் (எரே.10:1–5).

அஞ்ஞானிகளுடைய விக்கிரகங்கள் வெள்ளியும், பொன்னும், மனுஷருடைய கைவேலையுமாயிருக்கிறது. அவைகளுக்கு காதுகளி ருந்தும் கேளாது, அவைகளுடைய வாயிலே சுவாசமில்லை. அவைகளைப் பண்ணுகிறவர்களும், அவைகளை நம்புகிறவர்கள் யாவரும் அவைகளைப் போல் இருக்கிறார்கள் (சங்.135:15–18).

அவர்கள் தேசம், விக்கிரகங்களால் நிறைந்திருக்கிறது, தங்களின் கைகளின் கிரியையும், தங்கள் விரல்கள் உண்டுபண்ணினதையும் பணிந்துகொள்ளுகிறார்கள். சிறியவனும் குனிகிறான், பெரியவனும் பணிகிறான். ஆகையால் அவர்களுக்கு மன்னியாதிருப்பீர் (ஏசா.2:8–9). விக்கிரகங்கள் கட்டோடே ஒழிந்துபோம் (ஏசா.2:18). எனவே ஒருவரும் விக்கிரகங்களுக்குப் பயப்படவேண்டாம். ஒரு கிரியையும் செய்யமாட்டாத விக்கிரகம் எப்படி தீமை செய்யும், ஒருக்காலும் தீமையோ, நன்மையோ செய்யமுடியாது.

30. கேள்வி:- 1 சாமுவேல் 16:10ன் படி ஈசாய்க்கு 8 குமாரர்கள்; ஆனால் 1 நாளா.2:13-15ன்படி ஈசாய்க்கு 7 குமாரர்கள் எது சரி?

பதில்: ஈசாய் பெற்ற குமாரர்கள் 8, அதில் கடைசி மகன் தாவீது. அது சரித்திர உண்மை. ஆனால் ஒரு மகன் சந்தானமில்லாமல் மரித்திருக்கலாம்.

ஆகவே வம்சாவழி எழுதும்போது அவன் பெயர் விடப்பட்டுள்ளது. நாளாகமத்தில் 7 குமாரர்கள் பெயர் மாத்திரம் எழுதப்பட்டுள்ளது.

31. கேள்வி:- இயேசு சிலுவையில் மரிக்கவே இல்லை மயக்க நிலையிலிருந்தார். அடக்கம் பண்ணப்பட்டவர், மயக்கம் தெளிந்து எழுந்து வந்து விட்டார் என்று முஸ்லீம்கள் சொல்கிறார்களே எப்படி?

பதில்:– அவர் மரிக்கவில்லை மயக்கமாயிருந்தார் என்பது பொய்யான கேள்வியாகும். அவர் மரித்துவிட்டாரா இல்லையா என்று அறிவதற்காகவே ஒரு சேவகன் அவர் விலாவிலே குத்த அதிலிருந்து இரத்தமும் தண்ணீரும் புறப்பட்டு வந்ததைப் பார்த்த நூற்றுக்கு அதிபதியிடம், அவர் மரிக்கவில்லை, மயக்கநிலையிலிருந்தார், நீங்கள் தவறாக இயேசு மரித்துவிட்டார் என்றெண்ணிவிட்டீர்கள் என்று சொன்னால், அதே ஈட்டியால் கேள்வி கேட்பவர்களைக் குத்தி, உயிரோடிருப்பவனைக் குத்தினால் இரத்தம் மாத்திரமே வரும், ஆனால் மரித்துப்போனவுடன் குத்தினால் தண்ணீரும் சேர்ந்துவரும் என்று ஆதாரப்பூர்வமாகக் காட்டிவிடுவான்.

அவனுக்கு இப்படி எத்தனையோ பேர்களைக் குத்திப் பார்த்த பழக்கம். மரியாமலிருப்பதைக் கண்டால் கால் எலும்பை ஒடித்து மரிக்க வைப்பது பழக்கம். இந்தக் காரியம் தெரியாதவர்கள் வைத்திய சாஸ்திரம் தெரியாதவர்கள் மட்டுமல்ல சொந்த ஞானமில்லாதவர்கள்.

அப்படியே இயேசு மயக்க நிலையிலிருக்கையில் அவரை அடக்கம் பண்ணிவிட்டார்கள் என்று வைத்துக்கொள்வோம். யூதர்கள் அடக்கம் பண்ணும் முறையாவது தெரியுமா? யோசேப்பு என்பவன் வெள்ளைப் போளமும் கரிய போளமும் கலந்து 100 ராத்தல் கந்தவர்க்கம் கொண்டு வர (இது பசைபோன்று எலும்பு முறிவுக்குப் போடும் மாவுகட்டுப்போல) ஒரு சீலையில் இயேசுவின் உடலைச் சுற்றிக் கட்டுப்போட இதுவரை அவர் மரிக்காமல் இருந்தால் இந்தக் கட்டுகளினால் நிச்சயம் மரித்தே போயிருப்பார்) அந்த நிலையில் அடக்கம்பண்ணிவிட்டு, கல்லறையை பெரிய கல் கொண்டு மூடி வைக்க, அவர் மயக்கம் தெளிந்து எப்படி எழுந்து வரமுடியும்?

கைகால்கள் கட்டப்பட்டுக்கிடக்கிறவர் மயக்கம் தெளிந்தாலும் எழுந்திருக்க முடியுமா? எழுந்தாலும் தன் கட்டுகளை விடுவித்துக்கொள்ள

முடியுமா? இல்லை மூடியிருந்த கல்லை அவர் மட்டுமே புரட்டித் தள்ளிவிட முடியுமா? அப்படியே புரட்டித் தள்ளிவிட்டாலும், காவலரை ஏமாற்றிவிட்டு வந்து விட முடியுமா? புத்தியுள்ளவர்கள் சிந்திக்கட்டும். இது ஒரு விதாண்டாவாதக் கேள்விதானே ஒழிய வேறல்ல. மேலும் வாதத்துக்கு மருந்து உண்டு... ஆனால் விதண்டாவாதத்துக்கு மருந்து இல்லை.

32. கேள்வி:- விவாகம் பண்ணுவது பாவமா?

பதில்:- விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளது (எபி.13:4) விவாகம் பண்ணுவது பாவமல்ல (1 கொரி.7:9). தேவனாகிய கர்த்தர் தம்முடைய சாயலின்படியே மனுஷனை சிருஷ்டித்தார். அவர்களை ஆணும், பெண்ணுமாக சிருஷ்டித்தார். மனுஷன் தேவ கட்டளையை மீறிபாவம் செய்யும் முன்னதாகவே விவாகம் நியமிக்கப்பட்டது. மனுஷன் பாவம் இன்னதென்று அறியாமல் இருக்கும்போதே தேவன் விவாகத்தை ஏற்படுத்தி வைத்தபடியினால் விவாகம் பாவமல்ல. பரிசுத்தமாயிருக்க விவாகம் செய்வது நல்லது.

33. கேள்வி:- கள்ளத் தீர்க்கதரிசிகளை, பொல்லாத ஊழியக் காரரை அடையாளம் கண்டுகொள்வது எப்படி?

பதில்:- நம்முடைய ஆண்டவர் மலைப்பிரசங்கத்திலே கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள் என்ற சமயம் அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள் (ஊழியத்தினால் அல்ல) (மத்.7:16). மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கை பண்ணாத எந்த ஆவியும் தேவனால் உண்டானதல்ல (1 யோவா.4:3).

இயேசுவை மகிமைப்படுத்தாமல் தன்னையே உயர்த்தும் எந்த ஊழியனும் ஊழியன் அல்ல. தேவ சித்தம் செய்யாமல் அற்புதம் செய்தாலும், பிசாசை துரத்தினாலும் தீர்க்கதரிசனம் உரைத்தாலும் அவர்களைப் பார்த்து அக்கிரமச் செய்கைக்காரரே நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை என்று சொல்லுவேன் என்று எழுதியிருக்கிறது (மத்.7:22–23).

வியாதிகளுக்கோ, பிசாசு பிடித்தவர்களுக்காகவோ ஜெபம் செய்வதற்குப் பணமோ, பொருளோ, கேட்கிற எந்த ஊழியனும் உண்மை ஊழியராக இருக்கமுடியாது. ஏனெனில் இலவசமாய் பெற்றதை இலவசமாய் கொடுங்கள் என்று கர்த்தர் சொல்லியிருக்கும்போது,

வேத வசனத்துக்கு முரண்பாடான காரியங்களை சொல்லுகிற, செய்கிற எந்த ஊழியனும் கிறிஸ்துவின் ஊழியனாயிருக்க முடியாது. எனவே அவர்களுடைய கனிகளினாலே, சுபாவங்களினாலே அவர்கள் இன்னார் என்று அறிந்துகொள்ள முடியும். பொல்லாத வேலையாட்களுக்கு எச்சரிக்கையாயிருங்கள் (பிலி.3:2). எல்லாவற்றிலும் தெளிவோடிருங்கள்.

34. கேள்வி- விசுவாசியான ஆணோ, பெண்ணோ இரட்சிக்கப் படாதவரை திருமணத்திற்குப்பின் ஆதாயப்படுத்திவிடலாம் என்ற நம்பிக்கையோடு விவாகம் செய்யலாமா?

பதில்:– கூடவேக்கூடாது. அறியாமல் செய்தவர்களுக்கு ஒரு வேளை கர்த்தர் இரங்குவார். ஆனால் சத்தியத்தை அறிந்தவர்கள் ஒருபோதும் இரட்சிக்கப்படாதவர்களோடு விவாக உடன்படிக்கை செய்ய சம்மதிக்கவேக் கூடாது. பெற்றோர் அல்லது உறவினர்களிடம் பயபக்தியோடு வேத வசனத்திற்கு மாறாக தயவுசெய்து என்னை திருமணம் செய்யக் கட்டாயப்படுத்தவேண்டாம் என்று வேண்டிக்கொள்ளவேண்டும்.

ஒருவேளை ஆரம்பத்தில் முடியாது கூடாது என்று சொன்னாலும் நீங்கள் உறுதியாய் கர்த்தர் பேரில் நம்பிக்கையோடு இருந்தால் உங்கள் பெற்றோர் மனதை மாற்றி உங்கள் விருப்பத்தின்படி நீங்கள் திருமணம் செய்தால்போதும் என்ற முடிவுக்கு அவர்கள் வரும்படி கர்த்தர் கிரியை செய்வார்; என்னுடைய குறைந்த அனுபவத்தில் இப்படி பல சம்பவங்கள் அறிந்திருக்கிறேன்.

அந்நிய நுகத்தில் அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது? அவிசுவாசியுடனே விசுவாசிக்குப் பங்கேது? (2 கொரி.6:14–15).

துணிந்து விசுவாசிகள் பணத்துக்காக, அழகுக்காக, இனத்துக்காக, ஆசைப்பட்டு அவிசுவாசிகளை திருமணம் செய்தவர்களை நான் அறிவேன். அவர்கள் எலியும் தவளையும் கதைபோல நிர்ப்பந்தமான குடும்ப வாழ்க்கை செய்துகொண்டிருக்கிறார்கள். திருமணம் செய்யாமலேயே இருந்திருந்தால் நலமாயிருக்கும் என்று இன்று வருத்தப்படுகிறார்கள்.

எனவே தேவபிள்ளைகள் ஜாதி, நிறம், பணம், என்ற எந்த அடிப்படையும் பார்க்காமல் தேவசித்தப்படி தேவ பிள்ளைகளான வாழ்க்கைத் துணையையே தெரிந்துகொள்ளுங்கள். ஆபிரகாமின் தேவன், ஈசாக்கின் தேவன்,

எலியேசரின் தேவன் நிச்சயம் உங்களை வழிநடத்தி ஆசீர்வதிப்பார். ஆமென்.

35. கேள்வி:- மரியாள்மூலம் இயேசுவண்டை போக முடியுமா?

பதில்:- காணாவூர் கல்யாணவீட்டில் திராட்சரசம் குறைவுபட்டபோது இயேசுவின் தாய் அவரை நோக்கி அவர்களுக்குத் திராட்சரசம் இல்லை என்றாள். அப்பொழுது இயேசு ஸ்திரியே எனக்கும் உனக்கும் என்ன, என்வேளை இன்னும் வரவில்லை என்றார். அவருடைய தாய் வேலைக் காரரை நோக்கி அவர் (இயேசு) உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ அதன்படி செய்யுங்கள் என்றாள் (யோவா.2:1–5); இயேசு உலகத்திலே ஜீவித்த நாட்களிலேயே மரியம்மாளுடைய சிபாரிசு நடக்கவில்லையே.

இயேசு மரித்து மூன்றாம்நாள் உயிர்த்தெழுந்து இன்றும் ஜீவிக்கிறார்; பேசுகிறார். மரியம்மாள் மரித்தார்கள் உயிரோடு எழும்பவில்லை, இருக்கிற இடமே தெரியவில்லையே. உயிரோடு இருக்கிற ஒருவரோடு, மரித்து முகவரி இல்லாத ஒருவர் எப்படி பேசமுடியும்? சிபாரிசு எப்படி செய்யமுடியும்?

மரியம்மாள்மூலம் இயேசுவண்டை போகவே முடியாது; தாய் இல்லாமல் மகன் எப்படி வந்தான். தாய் முந்தி வந்தாள் என்பார்கள். முதல் மனிதனாகிய ஆதாமுக்கு தாய் இல்லையே அப்படியானால், ஆதாமுக்கும் தாய்தானே முக்கியம்.

இயேசு ஒருமுறை சீஷர்களோடு பேசிக்கொண்டிருக்கும்போது ஒருவன் அவரை நோக்கி, உம்முடைய தாயாரும், உம்முடைய சகோதரரும் உம்மோடே பேசவேண்டுமென்று நிற்கிறார்கள் என்றான். தம்மிடத்தில் இப்படி சொன்னவனுக்கு அவர் பிரதியுத்தரமாக என் தாயார் யார்? என்று சொல்லி தம்முடைய கையை தமது சீஷர்களுக்கு நேராக நீட்டி இதோ, என் தாயும், என் சகோதரர்களும் இவர்களே, பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவன் எவனோ அவனே எனக்குச் சகோதரனும், சகோதரியும், தாயுமாய் இருக்கிறார்கள் என்றார் (மத்.12:47–50).

மேலறையில் 120 பேர்கூடி ஜெபித்து பரிசுத்தாவியை பெற்ற இடத்தில் மரியம்மாவும் உண்டு. அங்கே இவர்கள் எல்லோரும், ஸ்திரிகளோடும் அவருடைய சகோதரரோடுங்கூட ஒருமனப்பட்டு ஜெபத்திலும், வேண்டுதலிலும் தரித்திருந்தார்கள் (அப்.1:14–15).

இயேசுவின் மூலமாகத்தான் மரியம்மாளும் தேவனிடத்தில் போகமுடியும். மரியம்மாள்மூலம் இயேசுவண்டை ஒருவரும் ஒருக்காலும் போனதும் இல்லை போகவும் முடியாது. இயேசு ஒருவரே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறார். அவராலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்திற்கு வர முடியாது.

36. கேள்வி:- வேதாகமத்திலுள்ள மிகப்பெரிய வசனம் எது? மிகச் சிறிய வசனம் எது?

பதில்:– வேதாகமத்திலுள்ள மிகப் பெரிய வசனம் (எஸ்தர் 8:9; தானி.5:23) மிகச்சிறிய வசனங்கள் 1. பின்னும் எலிகூ (யோபு 36:1). 2. ஜீவ அப்பம் நானே(யோவா.8:48). 3. இயேசு கண்ணீர் விட்டார். (யோவா.11:35). உங்களுக்கு இந்த வசனங்கள் மனப்பாடமாகத் தெரியவேண்டும்.

37. கேள்வி:- நமது உடல் ஓர் அதிசயமா?

பதில்:– நமது உடலில் 263 எலும்புகள், 600 தசைநார்கள், 970 மைல் நீள்முள்ள இரத்தக் குழாய்கள், நாக்கில் ஆயிரக்கணக்கான சுரப்பிகள், 20,000 நுண் முடிச்சுகளையுடைய ஓசையறியும் செவிப்பறைகள், மேலும் இரத்தத்தில் இலட்சக்கணக்கான ஜீவ அணுக்கள், உணவைக்கொண்டு செல்ல, பரம்பரைக் குணாதிசயங்களைப் பாதுகாக்க நமது உடலில் உள்ள உயிரணுக்கள் எண்ணிலடங்காதவை.

நான் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டபடியால் உம்மைத் துதிப்பேன் (சங்.139:14). சரி! இப்ப சொல்லுங்கோ நீங்க அதிசயப்பிறவி தானே.

38. கேள்வி:- மத்.17:1-லும், மாற்.9:2-லும் ஆறு நாளைக்குப் பின்பு இயேசு மறுரூப மலைக்கு போனதாகக் கூறப் பட்டுள்ளது. ஆனால் லூக்.9:28ல் எட்டு நாளைக்குப்பின்பு எனக் கூறப்பட்டுள்ளது. இதில் எது சரியானது? இது ஒரு முரண்பாடு எனத் தோன்றுகிறதல்லவா?

பதில்:– இதில் முரண்பாடு ஏதுமில்லை. மத்தேயும் மாற்குவும் திட்டமாக ஆறு நாளைக்குப் பின்பு எனக் கூறுகின்றார்கள். ஆனால் லூக்கா அப்படி கூறவில்லை. ஏறக்குறைய எட்டுநாளைக்குப்பின் என்று குறிப்பிட்டுள்ளார்.

லூாக்கா உத்தேசமான ஒரு நாளைத்தான் குறிப்பிடுகின்றார். திட்டமாக சொல்லவில்லை. எனவே அவர் தப்பிதமாகக் குறிப்பிடவில்லை. மத்தேயும் மாற்குவும் சொல்லுகின்றபடி ஆறுநாள் என்பதே சரியானதாகும்.

39. கேள்வி:- தேவனிடத்திலிருந்து அசுத்த ஆவி புறப்பட்டதாக வேதம் கூறுகிறதே எப்படி?

பதில்:– பரிசுத்தமான தேவனிடமிருந்து அசுத்த ஆவி புறப்படுவது என்பது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றல்லவா? இதனை எப்படி ஒத்துக்கொள்ள முடியும் என்று நாம் மிகவும் கலவரம் அடைகிறோம். இதனை ஆராய்வது நல்லது.

சம்பவம் 1. கர்த்தரால் வரவிடப்பட்ட ஒரு பொல்லாத ஆவி அவனை கலங்கப்பண்ணிக்கொண்டிருந்தது (1 சாமு.16:14).

சம்பவம் 2. ஒரு ஆவி புறப்பட்டு வந்து கர்த்தருக்கு முன்பாக நின்றது. நான் அவனுக்கு போதனை செய்வேன் என்றது... பொய்யின் ஆவியாக இருப்பேன் என்றது... போய் அப்படிச் செய் என்றார் (எசே.14:9).

சம்பவம் 3. அபிமெலேக்கும் சீகேமின் பெரிய மனுஷருக்கும் நடுவே பொல்லாப்பு உண்டாக்கும் ஆவியைத் தேவன் வரப்பண்ணினார் (நியா.9:23).

A. யோபுவின் சரிதையிலிருந்தும் மேலேக் காணப்படும் மூன்று சம்பவங்களிலிருந்தும் கர்த்தரின் அனுமதியின்றி சத்துரு மனிதர் எவரையும் தொடமுடியாது என்பதை அறியவேண்டும்.

B. தேவனிடத்திலிருந்து புறப்படவில்லை, தேவனிடத்திற்கு வந்து அனுமதிப்பெற்றுப் புறப்பட்டன என்பதை அறியவேண்டும்.

C. வரவிடப்பட்ட, போய் அப்படி செய், வரப்பண்ணினார் என்று மூன்று நிகழ்ச்சிகளையும் சிந்திக்கையில் தேவன் தாமே அவைகளை பயன்படுத்த வில்லை. தமது பாதுகாப்பிற்கு பாத்திரமாக மனிதன் நடந்துகொள்ளாத போது அவர் தமது பாதுகாப்பின் கரத்தை விலக்க, அசுத்தாவிகள் உடனே உட்புகுந்துவிடுகின்றன என்பது விளங்கும்.

மதிலிருக்கையில் தண்ணீர் அதின்மீது மோதி திரும்பியோடுகிறது. அதே தண்ணீர் மதிலுடைந்ததும் பாய்ந்து சென்று பாழ்படுத்துகிறது. இவ்வுலகம் முழுவதும் அசுத்த ஆவிகளால் நிறைந்திருக்கிறது. தேவகரம் நம்மைவிட்டு

விலகினால் தாக்கப்படுவோம். அவருக்குக் கீழ்ப்படிந்து நடந்தால் தீய ஆவிகள் வருவதில்லை வந்தாலும் தொடுவதில்லை.

கீழ்ப்படியாதவர்களிடத்தில் கிரியை செய்கிற ஆகாயத்து, பிரபுவாகிய ஆவி (எபே.2:2). வெளிச்சம் அணைந்தால் இருள் கவ்வும்! வரவிடுவதற்கும் அனுப்புதலுக்கும் வித்தியாசம் விளங்கிக்கொள்க.

D. ஏன் வரவிடுகிறார்? இது அவருடைய நியாயத்தீர்ப்பைக் காட்டுகிறது. மூன்று சம்பவங்களிலும் உள்ள நபர்கள் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் போகிறவர்கள் அவர்கள் தேவனை பற்றிக்கொள்ள சத்தியத்தைப் பின்பற்ற தவறுகிறார்கள். எனவே (2 தெச.2:10–11)ன் படி தமது தடையை தேவன் விலக்கிவிட அசுத்தாவிகள் வந்து தாக்கிட அனுமதி கேட்டிட அவரும் அவர்களை ஒப்புக்கொடுக்கிறார்.

சத்தியத்தை விசுவாசியாமல் அநியாயத்தில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக்குள்ளாக்கப்படும்படிக்கு அவர்கள் பொய்யை விசுவாசிக்கத் தக்கதாக கொடிய வஞ்சகத்தை தேவன் அவர்களுக்குள்ளே அனுப்புவார் (வரவிடுவார்).

எனவே தேவன் பரிசுத்தமானவர்; அவரிடத்தில் அசுத்த ஆவி ஒன்றுமில்லை. மனிதன் அவருக்குக் கீழ்ப்படிந்திராமல் விலகும்போது அசுத்த ஆவிகளிடத்தில் சிக்கிக்கொள்கிறான் என்பதையும், அந்த அசுத்த ஆவிகளை தேவன் அனுப்புவதில்லை என்பதையும் அவைகள் வர (வழி) விடுகிறார் – தமது பாதுகாப்பை விலக்கிவிடுகிறார் என்பதையும் நிச்சயமாக அறிந்திடுக.

40. கேள்வி:- எண்.25:9ல் இஸ்ரவேல் மக்களில் வாதையால் செத்தவர்கள் 24,000 பேர் எனவும், அதே சம்பவத்தை புதிய ஏற்பாட்டில் 1 கொரி.10:8ல் சொல்லும்போது 23,000 பேர் விழுந்து போனார்களென்றும் கூறப்பட்டுள்ளதே! இது முரண்பாடல்லவா?

பதில்:– எண்ணாகமத்தில் கூறப்பட்டுள்ளது அந்த வாதையினால் செத்தவர்களின் மொத்த எண்ணிக்கையாகும். ஆனால் கொரிந்தியரில் சொல்லப்பட்டது. அந்த வாதையினால் ஒரே நாளில் செத்தவர்களின் எண்ணிக்கை ஒரே நாளில் எனக் கொரிந்தியரில் தெளிவாய்க் கூறப் பட்டுள்ளது.

41. கேள்வி:- தீர்க்கதரிசன வரமெல்லாம் இப்போது கிடையாது ஒழிந்துவிட்டது என்று சிலர் சொல்கிறார்களே சரிதானா?

பதில்:- ஒழிந்துவிடவில்லை சபையில் ஒழித்துவிட்டார்கள். சபை என்பது ஐந்து ஊழியர்களாலானது. இன்று பாஸ்டர்கள் தவிர வேறு ஒருவரையும் பெரும்பாலான சபைகளில் காணமுடிவதில்லை. கேட்டால் கிடையாது. ஒழிந்துவிட்டது என்று பதில்கள் வேறு. எபேசியர் நான்காம் அதிகாரத்தை வாசித்துப்பாருங்கள். சபை நிறைவான வளர்ச்சியடையும்படி ஐந்து வித ஊழியங்களை சபையில் ஏற்படுத்தினார் என்று காணலாம்.

சபை எடுத்துக் கொள்ளப்படும் வரைக்கும் இவைகளில் ஒன்றும் ஒழிய வாய்ப்பில்லை. தவிரவும் ஐந்து விதமான ஊழியங்களால் கட்டப்படாத எந்த சபையும் உங்களைச் சீர்ப்படுத்தவோ, நிறைவான வளர்ச்சியடையச் செய்யவோ திராணியற்றவை. ஐந்து வகையான ஊழியங்களையும் அங்கீகரிக்கிற செயல்படுத்துகிற சபையே வருகையில் எடுக்கப்படும்.

42. கேள்வி:- துதிப்பதும், ஜெபம் பண்ணுவதும், அமைதியாகவா அல்லது சத்தமிட்டா?

பதில்:- ஜெபம் பண்ணுவதை அமைதியாகவும், சத்தமிட்டும் செய்யலாம். இது சூழ்நிலை, பிரச்சனை ஆகியவற்றைப் பொருத்தது.

அமைதியான ஜெபம்: (Calm Prayers)

1. ஆபிரகாம் (ஆதி.15:2,9; 17:18).
2. ஈசாக்கு (ஆதி.25:21)
3. யாக்கோபு (ஆதி.32:10)
4. மோசே (யாத்.10:18)
5. அன்னாள் (1 சாமு.1:13)
6. தாவீது (1 சாமு.23:2)
7. கொர்நேலியு (அப்.10:2).

இவர்கள் மேற்காணும் சந்தர்ப்பங்களில் சத்தமிட்டு ஜெபம் செய்தார்கள் என்பதற்கு ஆதாரம் இல்லை.

மிகுந்த சத்தமுள்ள ஜெபம் (Loud Prayers)

1. நெகேமியாவின் நாளில் இஸ்ரவேலர் (நெகே.9:4).
2. எலியா (1 இரா.18:38)
3. கிறிஸ்து (யோவா.11:41)
4. யோனா (யோவா.2:2)
5. ஸ்தேவான் (அப்.7:60)
6. தாவீது (சங்.6:8)
7. மனோவா (நியா.13:8–9).

எனவே சத்தமிட்டும், அமைதியாகவும் ஜெபிக்க வேதம் தடைசெய்ய வில்லை. ஆனால் துதித்தல் (Praising) பெரும்பாலும் சத்தமிட்டுத்தான் (வேதத்தில்) காணப்படுகிறது.

1. தாவீது (சங்.26:6; 66:8).
2. ஆதி விசுவாசிகள் (அப்.2:6)
3. பரலோகம் (எசே.3:12; ஏசா.6:3).
4. யோசுவாவின் சேனை (யோசு.6:5)
5. சாலமோன் பிரஜைகள் (2 நாளா.5:13).
6. எலிசபெத்து (லூக்.1:42,46)
7. வருங்காலம் (வெளி 5:9–12; 7:10).

மேலும் துதித்தல் தொழுகை இரண்டும் மாறுபட்டவை துதித்தல் சத்தமிட்டே பெரும்பாலும் இருந்தாலும் ஆராதனை (தொழுகை) மென்மையாக இருத்தல் வேண்டும். எனவே சபையிலும், குழுவிலும், வீட்டிலும், தனி அறையிலும், சத்தமுள்ள ஜெபம், அமைதியான ஜெபம், சத்தமுள்ள துதிகள்– அமைதியான ஆராதனை முதலியவை கலந்திருந்தால் நன்றாக இருக்கும்.

43. கேள்வி:- மணவாழ்வில் மனமுறிவு ஏற்படாமலிருக்க என்ன செய்யவேண்டும்?

பதில்:– பொதுவாக கணவன், தன் மனைவி தன்னைப் பாராட்டவேண்டு

மென்றும்; மனைவி கணவன் தன்னை பாராட்டவேண்டுமென்றும் விரும்புவர். இது இயற்கையே, இப்படி ஒருவருக்கொருவர் பராட்டப்பட வேண்டுமென்று விரும்புகையில் சூழ்நிலைகளின் நிமித்தம் இருவருமே ஒருவரையொருவர் குறைகூறிக் கொள்வதால் பாராட்டப்படவேண்டிய பகுதியில் பாதிக்கப்பட்டு இருவருமே ஏமாற்றமடைகின்றனர்.

குடும்பத்தைப் பொருத்தவரையில் மனைவி மந்திரி மாதிரி, மனைவி ஏதாவது தவறு செய்யும்போது அவளது படிப்பு, அறிவு இவைகளைக் குறை கூறித் திட்டுவதும், உரிமையற்ற உறவும் குடும்பத்தில் பிரிவினையை உண்டுபண்ணும்.

பிள்ளைகளைக் கண்டிக்கின்ற விஷயத்தில் கூட கணவன் மனைவி யிடையே கருத்து வேறுபாடு ஏற்படுவதுண்டு. பிள்ளைகளை கணவன் கண்டிக்கும்போது மனைவி குறுக்கிடுவதையும் மனைவி கண்டிக்கும்போது கணவன் குறுக்கிடுவதையும் தவிர்த்துவிட்டால் பிரிவினைக்கு அங்கு இடமே இல்லை.

சாதாரணமாக நடை, உடை, பாவனை, பழக்கவழக்கங்களிலும் கூட மனமுறிவுக்கு வழியுண்டு. கணவன் தனது மகள் நாகரீக உடை உடுத்துவதையும், சுதந்திரமான வாழ்க்கை வாழ்வதையும் விரும்புவான். ஆனால் மனைவியோ தமிழ் நாட்டிற்கும், தமிழ் பண்பாட்டிற்கும் ஒத்துவராத இவ்விஷயத்தில் மகளைக் கண்டிப்புடன் நடத்துவாள். பிள்ளையை நடத்த வேண்டிய வழியிலே நடத்த ஒருமனமற்ற கணவன் மனைவியினிடையே மனமுறிவு ஏற்பட வாய்ப்புண்டு.

குறிப்பாக பெண்கள் தனது கணவனை கனப்படுத்தக் கூடியவர்களாக இருக்கவேண்டும். எதிர்த்துப் பேசுதலும், மரியாதைக் குறைவாக நடத்துதலும் தாம்பத்திய வாழ்க்கையையும், ஆவிக்குரிய வாழ்க்கையையும் பாதிப்பதோடு, வாழ்க்கையை இயந்திரமாக்கிவிடும்.

ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து, ஆழமான அன்பிலே கட்டப் பட்டவர்களாய் வரவுக்கேற்ற செலவு செய்கிறவர்களாயிருப்பார்களானால், தினமும் குடும்பமாய் ஜெபித்து, வேதம் வாசித்து, உண்மையாய் தேவனை ஆராதித்து, எல்லாவற்றிலும் ஞானமாய் நடந்தால், குடும்பம் குட்டிப் பரலோகமாய் இருக்கும் அங்கே மன்முறிவுக்கு இடமேது.

44. கேள்வி:- சிலை வணக்கம் தவறு என்றால் கிறிஸ்தவர்களிலும் சிலை வழிபாடு உண்டே சரியா?

பதில்:– ஆம், கிறிஸ்தவர்களுக்குள்ளும் சிலை வணக்கம், சித்திர வழிபாடு இருப்பது வியப்பானது. சிலைவழிபாட்டை வேதாகமம் முதலிலிருந்து கடைசிவரைக் கண்டிக்கிறது. 10 கட்டளைகளை பிரதானமாக கருதும் இவர்கள் முதல் கட்டளையையே மீறிவிடுகின்றனர். ஏனெனில் முதல் கட்டளையே சிலைவணக்கம் கூடாது என்பதுதான்.

ஓர் உருவத்தையேனும் யாதொரு விக்கிரகத்தையேனும் நீ உனக்கு உண்டாக்கவேண்டாம். நீ அவைகளை வணங்கித் தொழவேண்டாம் என்பதே இக்கட்டளை (யாத்.20:4). சபையின் பழைய ஏற்பாட்டுக்காலம், கிறிஸ்துவின் காலம், சீடர்களின் காலம் ஆகிய காலத்தில் சிலைவழிபாடு இல்லவே இல்லை. அதன்பின் 1ம் நூற்றாண்டிலிருந்து 3ம் நூற்றாண்டு வரை திருச்சபையில் விக்கிரகம் வரவில்லை.

சிலை வணக்கம் கிறிஸ்தவத்திற்குள் எப்படி வந்தது?

அது விக்ரக தேசம்; அருக்களிப்பான சிலைகளின்மேல் மனமயங்கியிருக்கிறார்கள் (எரே.50:38) என்று பாபிலோனைப் பற்றி கூறப்பட்டுள்ளது.

பாபிலோனிய சரித்திரம் கூறுவது என்ன?

காமின் பேரன் நிம்ரோத் தலைமையில் பாபேல் கட்டப்பட துவங்கியது. இதனுள் பிரவேசிக்கத் தவறாக சட்டமொன்றிருந்தது. இதனுள் பிரவேசிக்க விரும்புவோர் வாசலில் வைக்கப்பட்ட சிலையொன்றை வணங்கிய பின்னரே வரவேண்டும். அது ஒரு பெண் சிலை. அப்பெண் கையில் ஆண் குழந்தை; அதன் கையில் கிட்டத்தட்ட சிலுவை வடிவ உருவம்! இது யார்? நிம்ரோத்தை ஒருவன் வெட்டிக்கொன்று விடுகிறான். அவன் மனைவி செமிராமிஸ் மகா ரூபவதி. அவள் ஜனத்திற்கு தலைவியாகிறாள். அவள் வேசித்தனத்தினால் ஒரு குழந்தையைப் பெறுகிறாள். அக்குழந்தையும் நிம்ரோத்தைப் போலிருக்க நிம்ரோத் திரும்பவும் தன் வயிற்றில் புகுந்து பிறந்தான் என்கிறாள். இவள் தன்னுருவச் சிலை செய்து வாசலில் வைக்கிறாள். குழந்தையின் பெயர் நினஸ், நினஸ், என்றால் சூரிய பகவான் என்று பொருள் "நி" என்ற எழுத்தின் வடிவும் சிலுவை வடிவம் போலிருந்தது.

இந்த நம்பிக்கையும் சிலைவழிபாடும் ரோமாபுரியிலும் பரவிகிறிஸ்துக் காலத்திலும் ராஜ்யமதமாக இருந்துவந்தது. கி.பி. 300ல் கான்ஸ்டன்டைன்

என்ற சக்கரவர்த்தி கிறிஸ்தவத்தை தழுவினார். இம்மதத்தை எங்கும் பரப்பிட விரும்பினான். கிறிஸ்துவின் உபதேசம் முழுவதையும் கூறுவது கடினமாக இருந்தபடியால், தானே அதனை எளிமையாக்கினான். பரிசுத்த வேதாகமம் மறைக்கப்பட்டது. அவன் கூறியதே மதச் சட்டமாயிற்று. பாபிலோனிலிருந்து வந்து ரோமையும் பிடித்திருந்த சிலை வழிபாடு, கிறிஸ்தவத்திற்கு பொருத்தமாக இருந்தபடியால் அந்த இடத்தைப் பிடித்துக்கொண்டது.

பாபிலோன்... விக்ரக தேசம் அருவருப்பான சிலைகளின்மேல் மனமயங்கியிருக்கிறார்கள் தற்காலத்திலும் விதவிதமான சிலைகளால் பாபிலோன் நிறைந்துள்ள நமது இந்தியாவைப்போல் என்று பாபேல் கோபுரத்தை ஆராய்ந்த **HERODOTUS** என்பவர் கூறுகிறார்.

காமின் பேரன் நிம்ரோத். இவன் தலைமையில் கோபுரம் கட்டும்பணி துவங்கிற்று. சுமார் 288 அடிக்குமேல் கட்டப்பட்டது 6, அடுக்குகளிருந்தன. அதற்குமேல் 41 அடி உயர மார்துக் என்ற தெய்வத்திற்குக் கோவில் கட்டப்பட்டிருந்தது.

எனவே விக்கிரக ஆராதிகளாகிய அவர்களை தேவன் சிதறடித்தார். நாமும் இன்று சிலைகளை ஆலயத்திற்குள்ளும், வீட்டிலும் வைத்திருப்பதை அவர் அருவருக்கிறார். இது கடவுள் நியமித்தது அல்ல. முதலாவது பாபிலோனிலிருந்தும், பின்பு கான்ஸ்டன்டைன் என்ற அரசனிடமிருந்தும் திருச்சபைக்குள் நுழைந்தது. நாம் பரிசுத்த வேதாகமத்திற்குத் திருப்புவோம். பாரம்பரியத்தை விட்டெறிவோம்.

இன்று பெரும்பாலான கத்தோலிக்க அன்பர்கள் சிலை வழிபாட்டிற்கு முழுக்கு போட்டிருப்பதைப் பார்க்கிறோம். பாராட்டத்தகுந்தது.

சிலை வழிபாட்டை கண்டிக்கும் வேத வசனங்கள்:-யாத்.20:4,23:24; லேவி.26:1; உபா.16:22; ஓசி.10:1; 1 கொரி.5:11, 6:9; 10:14; கலா.5:20; 1 பேது.4:3; சங்.115; ஏசா.44:10-20; எரே.51:17; வெளி 21:8, 12:15.

மேற்கண்ட வசனங்கள் வாசித்து விளங்கிக் கொள்க!

45. கேள்வி:- வாணிபத்தை உலக அளவில் ஒன்றுபடுத்தும் முயற்சி நடந்துகொண்டிருக்கிறதா? விளக்கம் தேவை.

பதில்:– சிதறிக்கிடக்கும் வாணிபங்களை ஒன்றுபடுத்தும் முயற்சி 1957ம் ஆண்டே துவங்கிவிட்டது. ஐரோப்பிய நாடுகள் பிரான்சிஸ், ஜெர்மனி, இத்தாலி, ஹாலந்து, லக்ஸம்பர்க், பெல்ஜியம் போன்ற நாடுகள் தங்களுக்குள் பொதுவான வாணிபத்தைக் கொண்டுவர (பிற நாடுகள் விரும்பினால் சேர்ந்து கொள்ளலாம்). 1957 மார்ச்சு மாதத்தில் ரோமில் கூடி ஒப்பந்தம் செய்தன.

இதற்கு "TREATY OF ROME" என்று பெயர். இது 1958ல் செயல்படத் துவங்கியது. பின்னர் 1973ல் இங்கிலாந்து, அயர்லாந்து, டென்மார்க் நாடுகளும், 1981ல் கிரீசும், அங்கத்தினராக சேர்ந்துகொண்டனர். இதன் தலைமையகம் பெல்ஜியத்திலுள்ள பிரஸ்ஸல்ஸ் (BRUSSELS) நகரில் உள்ளது. இதில் அங்கம் வகிக்கும் நாடுகளிடையே ஒரேவிதமான நாணயத்தை பயன்படுத்தும் திட்டத்தை 1970ல் தீட்டியுள்ளது.

இந்த பொதுச் சந்தை இன்று பல நாடுகளைக் கவர்ந்துள்ளது. 1975ல் இஸ்ரவேலும் இதனுடன் ஒப்பந்தம் செய்துள்ளது. இதன் அலுவலகத்தில் மூன்றடுக்குமாடி உயரமுள்ள கம்ப்யூட்டர் இருக்கிறது. இதில் உலகிலுள்ள 500 கோடி மக்களின் தகவல்களைக் கணக்கிடலாம். இதற்கு BEAST (மிருகம்) என்று பெயர் வைத்திருக்கிறார்கள்.

46. கேள்வி:- கடைசி காலத்தில் எல்லா சபைகளும் ஒருங்கிணையுமா?

பதில்:– நிச்சயமாக! இப்போதே நிறைவேறிக்கொண்டுமிருக்கிறது. 16ம் நூற்றாண்டில் கத்தோலிக்க சபையிலிருந்து பிரிந்த பிராட்டஸ்டன்டு சபையின் பல பிரிவுகள் ஒருங்கிணைந்து 1948ம் ஆண்டில் ஆர்மஸ்டர்டாம் நகரில் நிருவப்பட்டது. ஆங்கிலத்தில் இதற்கு "World Counsil of Churches" என்று பெயரிட்டுள்ளனர். இதில் சுமார் 85 நாடுகளைச் சேர்ந்த 250 சபைகள் அங்கம் வகிக்கின்றன. இதன் உறுப்பினர் எண்ணிக்கை 40 கோடிப்பேர். அனைத்துலக சபை இயக்கத்தின் (Eccum Enical Movement) தலைமை அலுவலகம் ஜெனீவாவில் உள்ளது.

47. கேள்வி:- சர்வமத ஒற்றுமைக் கூட்டங்களில் பங்குபெற அழைத்தால் போகலாமா?

பதில்:- சர்வமத நல்லிணக்கக் கூட்டம் என்பது மதங்களின்மேல் நம்பிக்கையுள்ளவர்களுக்காக, அவர்களை ஒற்றுமைப்படுத்த நடத்தப் படுகிறது. நாம் மத நம்பிக்கையற்றவர்கள். நாம் எந்தவொரு மதத்தையும் சார்ந்தவர்களல்ல; நாம் தேவனுடையவர்கள், கிறிஸ்துவை சார்ந்தவர்கள் நமக்கென்ன அங்கே வேலை.

48. கேள்வி:- யோபு மரிக்கும்போது அவரது வயது என்ன?

பதில்:- வேத ஆதாரப்படி யோபு நியாயப்பிரமாண காலத்துக்குமுன்பு வாழ்ந்தவர். இவர் ஊத்ஸ் தேசத்தில் வாழ்ந்தவர். இந்த தேசம் கிழக்கு ஏதோமும் (பெட்ரா) வடக்கு அரேபியாவும் சேர்ந்த பகுதி. ஒரு சில வேதபண்டிதர்கள், யோபு இஸ்ரவேலரின் தூரத்து உறவின் முறையில் தோன்றியவர் என்றும் வேறு சிலர், யாக்கோபுவின் குமாரனாகிய இசக்கார் 20 வயதாக இருந்தபோது அவருக்குப் பிறந்தார் என்றும் கருதுகிறார்கள்.

யோபு சோதனை அனுபவித்த ஆண்டு சுமார் கி.மு. 1845 என்று சரித்திராசிரியர்கள் கணக்கிடுகிறார்கள். அதே நேரத்தில் இஸ்ரவேலர் எகிப்தைவிட்டுப் புறப்படுவதற்கு 15 வருடங்களுக்குமுன்பு மரித்தார் என்று கூறுகிறார்கள். அப்படியானால் அவர் மரித்த ஆண்டு கி.மு. 1705 என்று கணக்கிடுகிறார்கள். அவர் சோதனையை அனுபவிக்கத் தொடங்கியபோது அவருக்கு 70 + 140 = 210. எனவே யோபு மரிக்கும்போது 210 வய்து உடையவராக இருந்தார் என்பது சரித்திர ஆசிரியர்களின் கணிப்பு.

49. கேள்வி:- விசுவாசிகள் சிரித்து மகிழலாமா?

பதில்:- இயேசுவினுடைய இரட்சிப்பினால் களிகூர்ந்து மகிழக்கடவோம் (ஏசா.25:9). துன்பத்திலும், துயரத்திலும், துக்கத்திலும், பாவம் எனும் அடிமைத்தனத்திலும், பிசாசின் கோரப்பிடியிலும் சிக்குண்ட நம்மை இயேசு கிறிஸ்து கிருபையாய் இரட்சித்தார். இதனால் நாம் களிகூர்ந்து மகிழ வேண்டும். இரட்சிப்பைக் கொண்டாட வேண்டும்.

எஸ்தரின் நாட்களில் யூதர்கள் மரணத்துக்கு நியமிக்கப்பட்டனர். மொர்தெகாய் மூலம் இரட்சிப்பு உண்டாயிற்று. இதனை அனுபவித்த இஸ்ரவேலர், மகிழ்ச்சியும், களிப்பும், விருந்துண்டு கொண்டாடும், நல்ல

நாளாகவும் பயன்படுத்திக்கொண்டனர். இவர்கள் வாய்பொத்தி மௌனமாகவா இருந்தனர். கொண்டாட்டம் என்பது ஒருவரோடு ஒருவர் பேசி மகிழ்ந்து சிரித்து துக்கம் மறந்து தேவச் செயலை நினைத்து துதித்துக் கொண்டிருப்பதைத்தான் குறிக்கிறது.

எனவே நாமும் இரட்சிப்பின் சந்தோஷத்தால் நிரம்பியிருக்கவேண்டும். பிறரோடு சேர்ந்து விருந்துண்பதுபோல் நாம் பெற்ற இன்பத்தை மற்றவர்களுடன் பகிர்ந்துகொண்டு தேவனை மகிமைப்படுத்த வேண்டும். இரட்சிக்கப்பட்டேன் என்று கூறி முகதுக்கமாக இருப்பதும், ஊமையாக இருப்பதும், தனித்து இருப்பதும் இன்னும் பூரண இரட்சிப்படையவில்லை என்பதையே காட்டும்.

ஆனால் கேலி, பரிகாசங்கள், அரட்டை, லௌகீக நகைச்சுவை, வீண் வார்த்தை முதலியவற்றைவிட்டு விலகவேண்டும். மிதமிஞ்சிய வார்த்தைகள் கூடாது. சொற்களின் மிகுதியால் பாவமிராமற்போகாது என்பதை எப்பொழுதும் நினைவிற்கொள்ளவேண்டும்.

ஆத்மபாரம்– மக்களின் இறுதி முடிவு இவைகளினால் மெய்யான பக்தன் தன் இரட்சிப்பின் கொண்டாட்டத்தின் நடுவில் துக்கப்படாமல், இருக்கமுடியாது. மணவறையில் மகிழ்ச்சியில் இருக்கும் பெண் திடீரென (வர இயலாமல் தூர தேசத்தில் இருக்கும் தன் அண்ணனுக்காக) அழுவதுண்டு.

அதுபோல் நமக்கும் ஆவிக்குரிய துக்கம் அவசியமே. அதற்காக எப்பொழுதும் விசுவாசிகள் அழுதுகொண்டே இருந்தால் மணவாளனை சந்தோஷப்படுத்த முடியாது. நம்முடைய துக்கங்களை இயேசு சுமந்து தீர்த்தார். எனவே இரட்சிப்பினால் மகிழ்ச்சியாயிருங்கள். சிரித்துப் பேசி முகமலர்ந்து இருங்கள். எப்போதும் சீரியஸாக இருக்கவேண்டாம். நம்மைக் காண்கிறவர்கள் இயேசுவை நம்மில் காணட்டும்.

50. கேள்வி:- யெப்தா தனது ஒரே மகளை நரபலி கொடுத்தானா?

பதில்:– யெப்தா இஸ்ரவேல் வம்சத்தைச் சேர்ந்தவன். அவன் பலத்த பராக்கிரமசாலியாகயிருந்தான். அம்மோனியர்கள் இஸ்ரவேலர்களுக்கு விரோதமாக யுத்தத்தை ஆரம்பித்தனர். அப்பொழுது இஸ்ரவேல் மூப்பர்கள் யெப்தாவை அணுகி தங்களோடு சேர்ந்து யுத்தத்தில் அம்மோனியரை முறியடிக்க உதவும்படி கேட்டனர். யெப்தாவும் ஒப்புக்கொண்டான். இஸ்ரவேலர் அவனைத் தலைவனும் சேனாபதியுமாக வைத்தார்கள் (நியா.11:11). அவன்

யுத்தத்திற்கும் புறப்படும் வேளையில் கர்த்தருக்கு ஒரு பொருத்தனை பண்ணினான். "தேவரீர் அம்மோன் புத்திரரை என் கையில் ஒப்புக் கொடுக்கவே ஒப்புக்கொடுத்தால்,

நான் அம்மோன் புத்திரரிடத்திலிருந்து சமாதானத்தோடே திரும்பிவரும் போது, என் வீட்டு வாசற்படியிலிருந்து எனக்கு எதிர்கொண்டு வருவது எதுவோ அது கர்த்தருக்கு உரியதாகும். அதைச் சர்வாங்க தகனபலியாகச் செலுத்துவேன் என்றான்" (நியா.11:30,31). யெப்தா தலைமையில் நடந்த யுத்தத்தில் அம்மோனியர்கள் தோற்கடிக்கப்பட்டனர். யெப்தா வீட்டிற்குத் திரும்பிவரும்போது அவனது வாலிப மகள் தம்புரு வாசித்து நடனஞ்செய்து தன் தகப்பனை வரவேற்க வீட்டிலிருந்து எதிர்கொண்டு சென்றாள். அப்பொழுதுதான் செய்த பொருத்தனையை எண்ணிக்கலங்கினான். ஐயோ! நான் என் பொருத்தனையை மாற்றமுடியாதே என்று கதறினான். எனினும் அவனுடைய மகள் கர்த்தர் உமக்கு ஜெயத்தைக் கட்டளையிட்டிருக்கிறார். உமது பொருத்தனையின்படியே செய்யுமென்று சொன்னாள் (வ.36). ஆனாலும் தன் தோழிகளுடன் மலைப்பிரதேசத்தில் இரண்டுமாதங்கள் செலவழித்துவிட்டுத் திரும்பிவர அனுமதி கேட்டாள். யெப்தாவும் அவள் கேட்டுக்கொண்டபடியே அனுமதித்தான். அவன் திரும்பி வந்தபின் "அவன் பண்ணியிருந்த தன் பொருத்தனையின்படி அவளுக்குச் செய்தான்" (வ.39).

யெப்தா தன் மகளை பலிசெலுத்தினானா? அல்லது அவன் கர்த்தருக்கு உரியவள் என்று கர்த்தருடைய பணிக்கென்று ஒப்புக்கொடுத்தானா? என ஒரு சர்ச்சயை எழுப்பி அவள் பலி செலுத்தப்படவில்லை. அவள் கர்த்தருடைய பணிக்கு ஒப்புவிக்கப்பட்டாள் என்ற இரு கருத்துகள் நிலவுகிறது. இதில் சரியானது எது என்பதை வேத ஆதாரத்தில் கண்டுகொள்ளவேண்டுமே தவிர நமது யூகத்தில் முடிவு செய்யக்கூடாது.

"சர்வாங்க தகனபலியாகச் செலுத்துவேன்" (வ.31) என்று யெப்தா செய்து கொண்ட பொருத்தனை அவனது அறியாமையே. ஏனெனில் இஸ்ரவேலின் பிரமாணத்தின்படி ஆசரிப்புக்கூடாரத்தின் பலிபீடத்தில் ஆடு, மாடுகள்தான் பலிப்பொருளாகப் பலியிடப்பட்டதே தவிர மனிதர்களை பலிப்பொருளாக ஆசாரியன் ஏற்றுக்கொள்ளமாட்டான். ஏனெனில் அது பிரமாணத்திற்கும் புறம்பானது. அப்படியானால் ஒரு சாரார் வாதிடுவதுபோல் ஆசரிப்பு கூடாரத்தில் கர்த்தருடைய பணிக்கென்று அவனுடைய மகளை ஒப்புக்கொடுத்தானா? அதையும் ஆசாரியர் ஏற்றுக்கொள்ளமுடியாது.

ஏனெனில் பிரமாணத்தின்படி ஆசாரிப்புக்கூடார பணிகளுக்கு ஆண்கள் தான் செய்யவேண்டும். ஆகவே இருவகையிலும் அது பிரமாணத்திற்கும் புறம்பானதே. அதை யெப்தா செய்யமுடியாது.

அப்படியானால் யெப்தா என்ன செய்திருக்கலாம்? ஆசரிப்புக் கூடாரத்தில் தன்னுடைய அறியாமையை அறிக்கைசெய்து முகங்குப்புற விழுந்துகிடந்து தான் அறியாமையால் செய்த பொருத்தனைக்கு மன்னிப்பு கேட்டிருந்தால் கர்த்தர் அவனை மன்னித்திருப்பார். மோசேயும் யோசுவாவும் தங்களுக்கு வந்த பிரச்சனைகளின் நெருக்கத்தில் ஆசரிப்பு கூடாரத்தில் முகங்குப்புற விழுந்து கிடந்ததையும் அதைத் தொடர்ந்து பிரச்சனை களிலிருந்து விடுதலை பெற்றுக்கொண்டதையும் வேதத்தில் வாசிக்கிறோம் (எண்.20:6; யோபு 7:8). கர்த்தர் எப்பொழுதும் மன்னிக்க ஆயத்தமா யிருக்கிறவர் (சங்.86:5) **(READY TO FORGIVE)** மன்னிக்க தயை பெருத்தவர். **(HE WILL ABUNDANTLY PARDON)** யெப்தா கர்த்தரை அறிந்திருந்தும் செய்யவேண்டியதைச் செய்யத் தவறிவிட்டான்.

யெப்தா "அவன் பண்ணியிருந்த பொருத்தனையின்படி அவளுக்குச் செய்தான்" என்று வாசிப்பதிலிருந்து "இதினிமித்தம் இஸ்ரவேலின் குமாரத்திகள் வருஷந்தோறும்போய், நாலுநாள் கீலேயாத்தியனான யெப்தாவின் குமாரத்தியைக்குறித்துப் புலம்புவது இஸ்ரவேலிலே வழக்க மாயிற்று" (வ.40) என்று வாசிப்பதிலிருந்தும் யெப்தா தன் மகளை ஆசரிப்புக்கூடாரத்திற்கும் புறம்பான இடத்தில் பலி செய்திருக்கவேண்டும் என்பதை வேத ஆதாரத்தின் அடிப்படையில் நாம் நம்ப இடமிருக்கிறது.

அப்படியானால் தேவன் ஏன் அனுமதித்தார்? ஈசாக்கு பலியாக்கப் படுவதை நிறுத்தியதுபோல ஏன் நிறுத்தியிருக்கக்கூடாது? என்பன போன்ற கேள்விகள் எழலாம். தேவன் ஏன் அப்படிச் செய்தார் என்று அவரைக் கேள்வி கேட்கவோ ஏன் இப்படிச் செய்திருக்கலாமே என்று அவருக்கு ஆலோசனை சொல்லவோ நமக்கு உரிமையில்லை. ஏனெனில் அவர் தவறு செய்கிறவரே அல்ல **(HE NEVER COMMITS A MISTAKE)** என்பதை எப்பொழுதும் நினைவில்கொள்ள வேண்டும். தேவன் தம்முடைய ஞானத்தை தமது பிள்ளைகளோடு பகிர்ந்துகொள்ளுகிறார் என்பது உண்மைதான். ஆனால் அதே சமயத்தில் அவருடைய "அந்தரங்க ஞானத்தை" (யோபு 11:7) அதன் ஆயுதத்தை நம்மால் அணிந்து கொள்ளமுடியாது. அந்த ஆராய்ச்சியில் நாம் இறங்கவேண்டிய அவசியமில்லை. "அவர் ஆலோசனையில் ஆச்சரியமானவர், செயலில் மகத்துவமானவர்" (ஏசா.28:29).

51. கேள்வி:- கிறிஸ்தவ மார்க்கம் வெள்ளையர் மார்க்கமா? தெளிவான பதில் தேவை.

பதில்:- இந்தியாவும், கிறிஸ்து மார்க்கமும்

இந்தியாவில் கிறிஸ்தவர்களை இயேசுவின் சீஷரான தோமா (தாமஸ்) என்பவர் இயேசுவின் மறைவிற்குப்பின் இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பின்னர் இந்தியாவில் நிலைநாட்டினார்.

ஆங்கிலோ லாக்ஸன் இனத்தார் தம் உடல்களில் வண்ணம் பூசிக் கொண்டு குகைகளில் உறைந்து வந்த நாகரீகமற்ற மனிதர்களாய் இருந்து வந்தபோது இந்தியாவில் இருந்த கிறிஸ்தவர்கள் முப்பது இலட்சம்பேர்.

(சுவாமி விவேகானந்தரின் ஞானதீபம் சுடர் 1 பக்கம் 409).

India, Esther 1:1; 8:9; ஆங்கில வேதாகமத்தில் இந்தியா என்றும் தமிழில் இந்து தேசம் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மத்திய ஆசியாவில் வாழ்ந்து வந்த கிரேக்கர்கள், ரோமர்கள் யூதர்கள் இவர்களின் கலப்பின மக்களே (ஆரியர்கள்) கைபர்போலன் கணவாய்கள் வழியாக இந்தியாவினுள் நுழைந்து அவர்கள் கலப்பு மொழியான சமஸ்கிரிதத்தில் வேதங்களையும், புராணங்களையும் படைத்துள்ளனர் என்பதை அறிந்துகொள்ள முடிகிறது.

இந்து என்ற பெயர்:- அந்நாட்களில் இந்து என்பது இந்தியாவை குறிக்கும் சொல்லாக இருந்ததேயன்றி ஒரு மதத்தையோ மார்க்கத்தையோ குறிக்கும் சொல்லாகக் கருதப்படவில்லை. தொடர்ந்து வந்த இஸ்லாமியரின் ஆங்கிலேயரின் ஆட்சிக்காலத்தில் இந்து என்ற இப்பெயர் ஒரு மதத்தின் பெயராக ஆக்கப்பட்டது. **(Page 270 Manorama Year Book 75)**

இந்தியாவில் முஸ்லீம் ஆட்சி

அராபியர் படையெடுப்பு (கி.பி.712 எட்டாம் நூற்றாண்டு) கி.பி. 570ல் மெக்கா நகரில் முகம்மதுநபி நாயகம் பிறந்தார். அராபியர் இந்தியாவின்மீது கி.பி.712 படையெடுத்து சிந்து பகுதியைத் தாக்கியது.

அராபியர் படையெடுப்பிற்கு முன்னரே இந்தியாவின் மேற்கு கடற் கரையில் அராபிய வர்த்தகர்கள் தொடர்பால் முஸ்லீம் இனம் தோன்றியிருந்தது.

இந்தியாவும், பாக்கிஸ்தானும் ஒன்றாக இருந்த காலத்தில் கிழக்கு வங்காளம், மேற்கு பஞ்சாப், சிந்து, பலுச்சிஸ்தானம் இவைகளில் முஸ்லீம் அதிகம் வாழ்ந்தார்கள். இது எப்படி இந்து நாடாகும்? 1947ம் ஆண்டு ஆகஸ்ட்

15ம் தேதி மௌண்ட்பேட்டன் பிரபுமூலம் இந்தியா பாக்கிஸ்தான் இரண்டாக பிரிந்தது.

கி.பி.712ல் இந்தியாவில் படையெடுத்து வந்த முகமதியர் கி.பி. 1858 வரை இந்தியாவை ஆண்டு வந்திருக்கிறார்கள்.

முதல் இந்திய சுதந்திர போருக்குப்பின் கி.பி.1858ம் ஆண்டு, முதல் கி.பி. 1947ம் ஆண்டுவரை இந்தியாவில் (கிறிஸ்தவர்கள்) பிரிட்டீஸ் அரசு ஆட்சி நடைபெற்றது. இந்தியாவை நெடுங்காலமாக முகமதியர்களும், கிறிஸ்தவர்களுமே அரசாண்டு வந்திருக்கிறார்கள். இந்தியாவில் இந்துக்கள், கிறிஸ்தவர்கள், முகமதியர்கள், இன்னும் பல வகுப்பினர் வசிக்கிறார்கள்.

கி.பி. 1947 முதல் இதுவரை இந்தியாவை அரசுபுரிந்த மகாத்மாகாந்தி, பண்டிதநேரு, ராஜாஜி, டாக்டர் ராதாகிருஷ்ணன், இந்திராகாந்தி அம்மையார், ராஜீவ்காந்தி இவர்களெல்லாம் கிறிஸ்தவ கல்லூரிகளிலே படித்து பட்டம் பெற்று கிறிஸ்துவையும் அவரது வேதத்தையும் அறிந்து அதை போற்றினார்களே அல்லாமல் அதை தூஷிக்கவும் இல்லை, எதிராக எழும்பவும் இல்லை.

உலகில் கிறிஸ்தவர்களின் நாடு–50

உலகில் முஸ்லீம்களின் நாடு –35

உலகில் இந்துக்களின் (ஒரே) நாடு–1 அது நேப்பாளம்

நேப்பாளம்:

சீனாவுக்கும் இந்தியாவிற்கும் இடையே உள்ளது. இந்நாட்டின் மக்கள் தொகை ஒரு கோடியே 70 லட்சம் 90 சதவிகிதத்தினர் இந்துக்கள். 5 சதவிகிதம் புத்த மதத்தினர் 3 சதவிகிதம் முஸ்லீம் மற்றும் சிலரும் கிறிஸ்தவர்களும் உண்டு. ஆனால் மதமாற்றம் செய்யக்கூடாது.

நேபாளம் அதிகாரப்பூர்வமான இந்து நாடு மன்னனும் இந்து. இது ஒரு பின்தங்கியநாடு 25 சதவிகித மக்களே கல்வி பயின்றனர். இன்னமும் மன்னர் ஆட்சி நடைமுறையில் உள்ளது. அத்தேசத்தின் மக்களுக்கு ஜனநாயக உரிமைகளும் மறுக்கப்பட்டுள்ளது. பிழைப்புக்காக பக்கத்து நாடுகளில் தோட்டவேலை செய்கிறார்கள். மன்னரின் சர்வாதிகார ஆட்சி இதுதான் இந்நாட்டின் சிறப்பு (தி.ம (நெ).4.8.89).

மகாத்மாகாந்தி:

இயேசுவின் மலை பிரசங்கம், நீதிமொழி இவைகளை பாராமல் மனப்பாடம் செய்தார்? அவ்வகளை போற்றியும், பேசி இருக்கிறார்.

விவேகானந்தர்:-

இந்தியாவிற்கு கிறிஸ்தவ ஞானபணியாளர்கள் வேண்டும். நூற்றுக்கணக்கிலும், ஆயிரக்கணக்கிலும் அவர்கள் இங்கே வந்து திரளட்டும். கிறிஸ்துவின் தூயவாழ்வின் வரலாற்றை எங்களுக்கு நன்கு எடுத்து ஓதுவீர்களாக. அவர் தந்த ஞானம், நல்மொழி எங்கள் சமுகத்தினர் இதயத்தை ஊடுருவி பாயட்டும், இயேசு நாதரைப்பற்றி ஒவ்வொரு சிற்றூரின் மூலை, முடுக்குகளிலும் பிரச்சாரம் செய்யுங்கள்.

(சுவாமி விவேகானந்தரின் ஞானசுடர் 1 பக்கம் 128; 129).

இந்தியாவிலுள்ள கேரளாவில் அப்போஸ்தலனாகிய தோமா வந்து பிரசங்கித்தபோது முதலில் பிராமணர்கள் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டார்கள். இதை அறியாத சிலர் கிறிஸ்தவ மதம் தாழ்த்தப்பட்ட ஜாதியின் மார்க்கம் என்று புலம்புவார்கள். வெள்ளையர்கள் இந்தியாவிற்கு வருவதற்கு எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பே இந்தியாவில் கிறிஸ்தவர்கள் இருந்து வருகிறார்கள். இதை அறியாத அநேக அறிவாளிகள் என்று எண்ணிக்கொள்ளுகிறவர்கள். இது வெள்ளைக்காரர்களுடைய மார்க்கம் என்று இழிவாய் பேசுவார்கள்.

இந்தியா என்ற பெயர் வேதபுத்தகத்திலே இருக்கிறது. இந்தியா, மிகுந்த தேவ பக்தியுள்ள நாடு. இந்தியா, மதசார்பு அற்ற நாடு இந்தியா, கிறிஸ்தவர்கள் வெள்ளையர்களுடையவர்கள் அல்ல. இந்தியா இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவினால் மேன்மை அடைந்த நாடு, இந்தியா இந்து தேசம் அல்ல. இந்தியா ஆசீர்வதிக்கப்பட்ட நாடு.

52. கேள்வி:- லஞ்சம் கொடுத்து வேலை வாங்கலாமா?

பதில்:- ஒரு கிறிஸ்தவனுக்கு லஞ்சம் வாங்குவதும் பாவம், லஞ்சம் கொடுப்பதும் பாவம். கர்த்தர் மேல் உன் பாரத்தை வைத்துவிடு அவர் உன்னை ஆதரிப்பார் (சங்.55:22) என்ற வசனத்தை முழுமையாக நம்பினால் லஞ்சம் கொடுத்து வேலை வாங்கமாட்டோம்.

வேதம் பரிதானத்தை எதிர்க்கிறது. நம் தேவன் பரிதானம் வாங்குபவரல்ல. அவரைப் போலாகும்படி வேதம் போதிக்கிறது. தேவனுக்குச் சித்தமானது அவரது கையினால் வாய்க்கும் லஞ்சம் கொடுக்காமலேயே வேலையை வாய்க்கப்பண்ணுவார். நமக்காக யாவும் செய்து முடிப்பார் (சங்.138:8). தம்மை கனப்படுத்துகிறவர்களை அவர் கனப்படுத்துகிறார். அவரை அசட்டை பண்ணுகிறவர்கள் கனவீனப்படுவார்கள்.

சங்.31:19; சங்.33:17–18–19; சங்.34:10. இந்த வசனங்களை வாசித்தோமானால் நிச்சயமாகவே லஞ்சம் கொடுத்து வேலை வாங்கமாட்டோம்.

இயேசுவைக் காட்டிக்கொடுத்தவனுக்கு 30 வெள்ளிக்காசு லஞ்சம் கொடுத்தனர். இயேசுவைக் கல்லறையில் காவல் காத்தவருக்குக் காசு கொடுத்து பொய்யைச் சொல்லச் சொன்னார்கள். காட்டிக்கொடுத்தால் இவ்வளவு காவல் புரிந்தால் இவ்வளவு என்று கேவலமான லஞ்ச லாவண்யத்தை வளர்த்து விட்டனர் பாவிகள்.

லஞ்சம் கொடுத்தால்தான் காரியம் நடக்கும் என்ற எண்ணம் பெருகி விட்டது. நம்மவரிடையே. இன்றைய அதிகாரிகளும், அரசியல்வாதிகளும், ஆன்மீகவாதிகளும் காசைக் கொடுத்து ஆசைக்காட்டி தேசத்தை நாசமாக்கி விட்டார்கள்.

எனவே லஞ்சம் கொடுத்து லாபத்தைப் பெற்று சாபத்தை வருவித்துக் கொள்ளவேண்டாம்.

53. கேள்வி:- வேதத்தில் பல இடங்களில் இரண்டாம் ஜாமம், மூன்றாம் ஜாமம் என்று குறிக்கப்பட்டுள்ளதே, இவையெல்லாம் எந்த நேரங்கள் தெரிவிப்பீர்களா?

பதில்:– அக்கால யூதர்களுக்கு ஒரு நாள் என்பது சூரிய அஸ்தமனத்திலிருந்து இன்னொரு சூரிய அஸ்தமனம் வரையுள்ள நேரமே. இந்த நேரத்தை 8 சமபாகங்களாகப் பிரித்து வைத்திருந்தனர். ஒவ்வொரு பாகத்திற்கும் ஜாமம் என்று பெயர். இதில் முதல் ஜாமம் என்பது சூரிய அஸ்தமனத்திலிருந்து இரவு ஒன்பது மணிவரை அதைப் பட்டியலாகக் கீழே காணலாம்.

முதலாம் ஜாமம் – சாயந்தரம் முதல் இரவு 9 மணிவரை

இரண்டாம் ஜாமம் – இரவு 9 மணி முதல் நள்ளிரவு வரை

மூன்றாம் ஜாமம் - 12 மணி முதல் 3 மணிவரை

நான்காம் ஜாமம் - 3 மணி முதல் சூரியோதயம் வரை

ஐந்தாம் ஜாமம் - காலை 9 மணிவரை

ஆறாம் ஜாமம் - 9 மணி முதல் மதியம் 12 மணிவரை

ஏழாம் ஜாமம் - நண்பகல் முதல் பிற்பகல் 3 வரை

எட்டாம் ஜாமம் - பிற்பகல் 3 மணி முதல் அஸ்தமனம் வரை

54. கேள்வி:- யோவான் ஸ்நானகனைச் சிறைவைத்த சிறைச் சாலை எங்கேயிருந்தது?

பதில்:- யோவானை சிறை வைத்தது மக்காரஸ் கோட்டையின் பாதாள அறை ஒன்றில், இந்தக் கோட்டை சவக்கடலின் வடக்கு கோடியில் சுமார் 1300 மீட்டர் உயரத்தில் உள்ளது. இதன் கீழே மோவாப் மலை உள்ளது. மனித சஞ்சாரம் வெகு குறைவாயுள்ள இந்தப் பகுதியிலுள்ள இந்த மக்காரயஸ் கோட்டைக்கு அரேபியாவின் காவற் கோபுரம் என்று சிறப்பு பெயரும் உண்டு.

55. கேள்வி:- பழைய ஏற்பாட்டில் புசிக்கவேண்டாம் என்று சொல்லப்பட்ட உணவு வகைகளை இப்போதுள்ள நாமும் புசிக்காமல் இருக்கவேண்டுமா?

பதில்:- பழைய ஏற்பாட்டில் சில உணவு வகைகள் அசுத்தமானவைகளாகக் கருதப்பட்டு அவை புசிக்கத்தகாதவை எனச் சொல்லப்பட்டுள்ளது. ஆனால் புதிய ஏற்பாட்டில் இயேசு கிறிஸ்து (மாற்.7:18)ல் மனுஷனுக்குப் புறம்பே இருந்து அவனுக்குள்ளே போகிறதொன்றும் அவனைத் தீட்டுப்படுத்த மாட்டாது எனக் குறிப்பிட்டுள்ளமையினால் இன்று நாம் எல்லாவற்றையும் புசிக்கலாம் என கருதப்படுகிறது. மேலும் (1 தீமோ.4:4)ல் ஸ்தோத்திரத் தோடே ஏற்றுக்கொள்ளப்படுமாகில் ஒன்றும் தள்ளப்படத்தக்கதல்ல என்றும் சொல்லப்பட்டுள்ளது.

எனவே பழைய ஏற்பாட்டுக் காலத்தில் தேவன் சிலவகையான பறவைகள் மீனினங்களைப் புசிக்க வேண்டாம் எனக் கட்டளையிட்டமைக்காக காரணத்தை நாம் ஆராய்ந்து பார்க்கவேண்டும். தேவன் புசிப்பதற்குத் தடை விதித்த உயிரினங்கள் அனைத்தும் அக்கால கானானிய பிரதேசத்தில்

அதிக அளவு நோய்கிருமிகளை தம் சரீரத்தில் கொண்டிருந்தவைகளாகும். லேவியராகமத்திலும் உபாகமத்திலும் கொடுக்கப்பட்டுள்ள உணவு சட்டத்தில் உலகில் உள்ள எல்லா உயிரினங்களும் குறிப்பிடப்படவில்லை என்பதனையும் நாம் நிதானிக்க வேண்டும். அச்சட்டங்களைக் கொடுக்கப் பட்ட கால கட்டத்தில் கானானிய பிரதேசத்தில் இருந்த உயிரினங்களிலேயே புசிக்கக்கூடாத அசுத்தமானவை எவை என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. புசிக்கக்கூடாதவையாகக் கருதப்பட்ட உயிரினங்களில் பெரும்பாலானவை மாம்ச பட்சிகளாகவும், குப்பைகள் மற்றும் அழுக்குகளை உண்பவை யாகவும் இருப்பதையும் நாம் அவதானித்திடலாம்.

தடை செய்யப்பட்ட உயிரினங்களின் மாமிசத்தில் அதிகளவு நோய் கிருமிகளும் நச்சுத்தன்மை வாய்ந்த மூலகங்களும் இருப்பதாக கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இவை உரிய முறையில் சமைக்கப்படாவிட்டால் மனிதனது ஆரோக்கியத்தைப் பாதிக்கும். அக்கால மக்கள் இறைச்சி வகைகளை நெருப்பினால் சுட்டு அல்லது அவித்தே சாப்பிட்டனர். எனவே நோய் கிருமிகள் அதிகமில்லாத மாமிசமே அக்கால மக்களது புசிப்புக்கு ஏற்ற உணவாயிருந்தது. பழைய ஏற்பாட்டு உணவு சட்டத்தின் முக்கிய நோக்கம் நோய்கள் ஏற்படுவதைத் தடுப்பதாகும்.

நவீன மருத்துவம் தன் ஆராட்சியில் பிரதேசத்துக்குப் பிரதேசம் மிருகங்கள் பறவைகளின் மாமிசத்தில் நோய் கிருமிகள் வேறுபட்டு காணப்படும் என்று கண்டுபிடித்துள்ளது. எனவே கானானிய் பிரதேசத்தில் வாழப்போகும் இஸ்ரவேல் மக்களுடைய சரீரத்திற்கு ஒத்துவராத உணவுகளே பழைய ஏற்பாட்டில் தடை செய்யப்பட்டுள்ளன. அதே சமயம் சில மிருகங்கள், பறவைகள், கானானிய மக்களது மத வழிபாடுகளோடு சம்மந்தப்பட்டிருந்தன.

கானானிய மக்களது அந்த வழிபாட்டு பழக்கவழக்கங்களை இஸ்ரவேல் மக்கள் பின்பற்றுவதை தடுப்பதே இதன் நோக்கமாகும். எனினும் நோய்கள் ஏற்படுவதை தடுப்பதே பழைய ஏற்பாட்டு உணவு சட்டத்தின் முக்கிய நோக்கமாக இருந்ததினால் இன்று நமது சரீரத்திற்கு ஒத்துவராத சரீரத்தைப் பாதிக்கும் உணவுகளைத் தவிர்த்துக்கொள்ளவேண்டும். எல்லாவற்றையும் சாப்பிடுவதற்கு நாம் அனுமதிக்கப்பட்டுள்ள போதிலும் தேவன் நம் சரீரத்தின் மீதும் கரிசனை உடையவராய் இருக்கின்றமையினால் நமது தேகாரோக்கியத்தைப் பாதிக்கும் உணவு வகைகளை நாம் சாப்பிடக் கூடாது. பழைய ஏற்பாட்டு உணவுச் சட்டம் இன்று நமக்கு கற்பிக்கும் பாடம் இதுவேயாகும்.

56. கேள்வி:- ஒரு விசுவாசி கர்த்தருக்கு எவ்விதத்திலெல்லாம் ஊழியஞ்செய்ய முடியும்?

பதில்:- உங்கள் ஆஸ்திகளால் பரிசுத்தவான்களுக்கு உதவி செய்வதன் மூலமாய், சாட்சியாய் ஜீவித்து நற்செய்தியை பிரசங்கிப்பதின் மூலமாய், ஊழியங்கள் மற்றும் ஊழியக்காரர்களுக்காய் ஜெபிப்பதின் மூலமாய், மற்ற விசுவாசிகளுடைய பாரத்தைச் சுமந்து அவர்களுக்கு உதவி செய்வதன் மூலமாய் ஊழியஞ் செய்யமுடியும் (லூக்.8:3; அப்.18:2; 2 தெச.3:12; கலா.5:13).

மேலும் கைப்பிரதிகள் கொடுத்தல், தெரு பிரசங்கம் செய்தல், மருத்துவமனை சந்தித்தல், சிறைச்சாலை ஊழியம், கிராமங்களுக்கு போகுதல் இன்னும் இதுபோன்ற பல ஊழியங்களை விசுவாசிகள் செய்யலாம்.

57. கேள்வி:- கோள் சொல்வதில் இன்று முதலிடம் யாருக்கு?

பதில்:- உன் ஜனங்களுக்குள்ளே அங்குமிங்கும் கோள் சொல்லித் திரியாயாக; பிறனுடைய இரத்தபழிக்கு உட்பட வேண்டாம்; நான் கர்த்தர் (லேவி.19:16). தேவனுடைய சித்தம் செய்யாமல் ஊழியம் என்கிற பெயரில் பலர் வீடுவீடாக சுற்றித்திரிந்து அங்குமிங்கும் கோள் சொல்லித் திரிகிறார்கள். இவர்களுடைய வேலையே இதுதான். இங்குள்ளதை அங்கும், அங்குள்ளதை இங்கும் சொல்லாவிட்டால் இரவில் தூக்கம் வராது. இதில் முதலிடம் இந்த ஊர் சுற்றிகளுக்குக் கொடுக்கலாம்.

இழிவான ஆதாயத்திற்காக காதில் கேட்டதை எல்லாம் வீடுவீடாக சொல்லி குடும்பங்களிலும் ஊழியங்களிலும் குழப்பங்களை உண்டாக்கி சாபத்தை வருவித்துக்கொள்ள வேண்டாம். நீ எதை விதைக்கிறாயோ அதையே திரும்ப ஒரு நாள் நீ அறுக்கவேண்டியதாயிருக்கும். இன்றே கோள் சொல்லுவதை விட்டுவிடு.

58. கேள்வி:- உலகம் உண்டாவதற்கு முன்னால் பரம பிதாவானவர் எவ்வாறு தோன்றி இருக்கலாம்?

பதில்:- அவர் அல்பாவும் ஒமேகாவுமானவர். அவருக்கு ஆதியும் இல்லை அந்தமுமில்லை. என்றென்றைக்கும் அவர் இருக்கிறவராகவே இருக்கிறார். அவரது ஆரம்பத்தைக் குறித்து சற்று நேரம் சிந்தித்தால் நமக்கு மூளை குழம்பும். இது மனுஷீக அறிவுக்கு அப்பாற்பட்ட தெய்வீக சக்தி.

59. கேள்வி:- ஊழியத்திற்கு பயிற்சி அவசியமா?

பதில்:– 1) மோசேயின் ஊழியக்காரனாயிருந்து மோசேயினால் பயிற்சி பெற்று மோசே மரித்தபின் தேவனுடைய ஊழியக்காரன் என்று பெயர் பெற்ற யோசுவா பயிற்சி பெற்றவர் அல்லவா!

2) எலியாவின் கைக்கு தண்ணீர் வார்த்த எலிசா எலியாவின் காலம் முடியும்வரை பயிற்சி பெற்று ஊழியம் செய்தார்!

3) இயேசுவோடு கூட இருந்த 12 சீஷர்களும் 3 1/2 வருஷம் இயேசுவினால் பயிற்சி பெற்றார்கள்.

4) 3 1/2 வருஷம் ஊழியம் செய்த இயேசு 30 வருஷம் பெற்றோருக்குக் கீழ்ப்படிந்திருந்து பயிற்சி பெற்றார். எத்தனை அழைப்பும் எத்தனை வரங்களும் இருந்தாலும் பயிற்சி அவசியம் தேவை.

60. கேள்வி:- ஸ்தோத்திரம் எப்போதும் சொல்லலாமா?

பதில்:– பரலோகத்தில் செய்யப்படுவதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக என்று அனுதினமும் ஜெபிக்கிறார்களே (மத்.6:10). பரலோகத்தில் என்ன செய்யப்படுகிறது. பரலோகத்தில் பலத்த இடி முழக்கம் போலவும், பெரு வெள்ள இரைச்சல் போலவும் அல்லேலூயா, அல்லேலூயா, என்ற இடைவிடாமல் சொல்லப்படுகிறதே. பழைய ஏற்பாட்டு கால சங்கீதக்காரனே எப்பொழுதும் ஸ்தோத்தரிப்பேன் என்று சொல்லியிருக்கிறார் (சங்.145:1).

உம்முடைய வீட்டில் வாசமாயிருக்கிறவர்கள் எப்பொழுதும் உம்மை துதித்துக்கொண்டிருப்பார்கள் (சங்.84:4). வம்பும் புத்தியீனமான பேச்சும், பரியாசமும் தகாதவைகள் ஸ்தோத்திரம் செய்தலே தகும் (எபே.5:4). எப்போதும் ஸ்தோத்திரம் செய்யலாம் கீழ்க்காணும் வசனங்களை வாசித்துப் பாருங்கள்.

கொலோ.1:5; எபே.2:16; சங்.50:23; பிலி.1:6; 1 தெச.1:4; 2 தெச.1:3 1 கொா.1:6; சங்.40:3; 103:1,2; 115:17,18; 145:1.

61. பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்கள் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைப் பற்றி அறிந்திருந்தனரா?

பதில்:– ஆம் சீயோனிலிருந்து (எருசலேம்) ஜாதிகளை நியாயந்தீர்க்கவும்

பூமியின் குடிகளை ஆளவும் கடைசி நாட்களில் இயேசுகிறிஸ்து உலகத்திற்கு வருவார் என்று மனசாட்சி காலப் பரிசுத்தவான்கள் உட்பட, அநேக பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்கள் வெளிப்படுத்தலினால் அறிந்திருந்தனர். ஆயினும் அவர்கள் சபையைப் பற்றிய பொதுவான இரகசியத்தையோ அல்லது தெரிந்துகொள்ளப்பட்ட சபையின் எடுத்துக்கொள்ளப்படுதலைப் பற்றிய குறிப்பான இரகசியத்தையோ விளங்கிக்கொள்ளக் கூடாதவர்களாயிருந்தனர்.

மனசாட்சி காலத்துப் பரிசுத்தவான்கள் உட்பட பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பூமியின்மேல் ஆளுகை செய்ய வருவதைப்பற்றிக் கொடுத்த சாட்சிகள் இவைகளே.

ஏனோக்கு: "ஆதாமுக்கு ஏழாந்தலைமுறையான ஏனோக்கும் இவர்களைக்குறித்து... ஆயிரமாயிரமான தமது பரிசுத்தவான்களோடு கூடக் கர்த்தர் வருகிறார் என்று முன்னறிவித்தான்" (யூதா 14,15).

யோபு: என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும், அவர் கடைசி நாளில் பூமியின்மேல் நிற்பார் என்றும் நான் அறிந்திருக்கிறேன் (யோபு 19:25).

சங்கீதக்காரன்: "அவர் பூமியை நியாயந்தீர்க்க வருகிறார். பூலோகத்தை நீதியோடும் ஜனங்களை நிதானத்தோடும் நியாயந்தீர்ப்பார்" (சங்.98:9).

ஏசாயா: "இதோ பூமியினுடைய குடிகளின் அக்கிரமத்தினிமித்தம் அவர்களை விசாரிக்கும்படி கர்த்தர் தம்முடைய ஸ்தானத்திலிருந்து புறப்பட்டு வருவார்" (ஏசா.26:21). "மீட்பர் சீயோனுக்கும், யாக்கோபிலே மீறுதலை விட்டுத் திரும்புகிறவர்களுக்கும், வருவார் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (ஏசா.59:20).

தானியேல்: "இரா தரிசனங்களில் நான் பார்த்துக்கொண்டு இருக்கையில், இதோ மனுஷ குமாரனுடைய சாயலான ஒருவர் வானத்து மேகங்களுடன் வந்தார். அவர் நீண்ட ஆயுசுள்ளவர் இடமட்டும் வந்து, அவர் சமீபத்தில் கொண்டு வரப்பட்டார். சகல ஜனங்களும், ஜாதியாரும். பாஷைக்காரரும் அவரையே சேவிக்கும்படி அவருக்கு கர்த்தத்துவமும், மகிமையும், ராஜரீகமும் கொடுக்கப்பட்டது. அவருடைய கர்த்தத்துவம் நீங்காத நித்திய கர்த்தத்துவமும் அவருடைய ராஜ்யம் அழியாததுமா யிருக்கும்" (தானி.7:13,14).

62. தூரா சமவெளியில் நேபுகாத்நேச்சார் நிறுத்திய மாபெரும் சிலையை பணிந்துகொள்ள வேண்டுமென்ற பரீட்சையை மூன்று எபிரெயர் எதிர்ப்பட்டபோது தானியேல் எங்கே இருந்தார்?

பதில்:– இதைப்பற்றி பைபிள் ஒன்றும் சொல்வதில்லை. ஆகவே அந்த பரீட்சையின் போது தானியேல் எங்கே இருந்தார் என்பதை இன்று எந்த மனிதனும் நிரூபிக்க முடியாது.

தானியேல் வகித்த உயர் பதவியின் காரணமாக அல்லது சாத்ராக், மேஷாக், ஆபேத் நேகோ போன்றவர்களைவிட தானியேலிடம் நேபுகாத் நேச்சார் விசேஷித்தப் பொறுப்புகளை ஒப்படைத்திருந்ததன் காரணமாக அவர் தூரா சமவெளிக்குச் செல்லவேண்டிய அவசியம் ஏற்படவில்லை என சிலர் கருத்துத் தெரிவித்திருக்கின்றனர். தன்னுடைய மூன்று நண்பர்களை விட அவர் மேலான ஸ்தானத்தை வகித்தார் என்பதை (தானி. 2:49) சுட்டிக்காட்டுகிறது. இதனால் மற்றவர்களோடு அவரும் சிலைக்குமுன் வந்து நிற்கவேண்டிய அவசியம் இல்லாமல் போய்விட்டது என நாம் திட்டமாக சொல்லமுடியாது.

அவர் ஏதாவது அலுவலக வேலையின் காரணமாக வெளியே போயிருந்திருக்கலாம் அல்லது வியாதியாக இருந்ததால் வரமுடியாமல் போயிருக்கலாம் என மற்றவர்கள் கூறியிருக்கிறார்கள். இருந்தாலும், பைபிள் இதைப்பற்றி ஒன்றும் சொல்வதில்லை. எப்படியாயினும், தானியேலின் நடத்தை மற்றவர்களுடைய விமர்சனத்திற்கு வராமல் இருந்திருக்காது. ஏனென்றால் மற்றவர்களுடைய கவனத்திற்கு வந்திருந்தால், பொறாமை கொண்ட பாபிலோனிய அதிகாரிகள் அவர் மீது குற்றம் சாட்டுவதற்கு இதைப்பயன்படுத்தி இருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. (தானி.3:8) இந்தச் சம்பவத்திற்கு முன்பும் சரி பின்பும் சரி, தானியேல் உத்தமத்தை காத்துக்கொள்பவராகவே தன்னை நிரூபித்தார். எந்தச் சோதனையை எதிர்ப்பட்டபோதிலும் தேவனுக்கு உண்மையுள்ளவராகவே இருந்தார். (தானி.1:8; 5:17; 6:4, 10,11). தூரா சமவெளியில் ஏன் தானியேல் இல்லை என்பதற்குரிய காரணத்தைப்பற்றி பைபிள் ஒன்றும் சொல்லாவிட்டாலும் யெகோவா தேவனுக்கு பற்றுமாறா விசுவாசத்தைக் காண்பித்தார் என்பதில் நாம் நம்பிக்கையோடு இருக்கலாம். (எசே.14:14; எபி.11:33).

63. யாத்திராகமம் புத்தகத்தில் பல தடவைகள் தேவன் பார்வோனின் இதயத்தைக் கடினப்படுத்தியதாகச் சொல்லப் பட்டு உள்ளது. தேவன் இப்படி ஒரு காரியத்தைச் செய்யலாமா?

பதில்:- தேவனைப் பற்றிய விவரங்களில் கிறிஸ்தவர்களை அதிகமாகக் குழப்பியுள்ள விஷயம், அவர் பார்வோனின் இதயத்தைக் கடினப்படுத்தினார் என்னும் விளக்கமாகும். யாத்திராகமம் 4 முதல் 14 வரையிலான அதிகாரங்களில் 20 தடவைகள் பார்வோனின் இதயம் கடினப்பட்டதைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் 10 தடவைகள் தேவனே பார்வோனின் இதயத்தைக் கடினப்படுத்தியதாக எழுதப்பட்டுள்ளது.

பார்வோன் தன் இதயத்தைக் கடினப்படுத்துவான் என்றும் தேவன் முன்னறிவித்தார் (யாத்.4:21, 7:3). இவை எதிர்காலத்தில் தேவன் செய்யவிருப்பதைப் பற்றிய முன்னறிவித்தலாகும். எனினும், தேவன் பார்வோனின் இதயத்தைக் கடினப்படுத்துவதற்கும் முன்பே, அவன் தன் இதயத்தைக் கடினப்படுத்திக்கொண்டான். எகிப்தின் மீதான வாதைகளில் முதல் 5 வாதைகளின்போது பார்வோன் 10 தடவைகள் தன் இதயத்தைக் கடினப்படுத்தியுள்ளான் (யாத்.7:13,14,22, 8:15,19,32, 9:7,34,35, 13:5). அவ்வாதைகளின்போது இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரே உண்மையான தெய்வம் என்பதை ஏற்றுக்கொள்ள விரும்பாதவனாகப் பார்வோனே தன் இதயத்தைக் கடினப்படுத்திக் கொண்டான். பார்வோனின் மந்திரவாதிகள் இது தேவனுடைய விரல் என்று அறிக்கையிட்டும் அவன் அதை அலட்சியப் படுத்திவிட்டான். எகிப்தின்மீது வந்த வாதைகள் இஸ்ரவேல் மக்களது தேவனே உண்மையான தெய்வம் என்பதை எகிப்தியரில் அநேகருக்கு உணர்த்தியிருந்தமையால், இஸ்ரவேலர் எகிப்தைவிட்டு வெளியேறியபோது அவர்களும் இஸ்ரவேலரோடு சென்றுள்ளனர் (யாத்.12:38). ஆயினும், அவ்வாதைகள் பார்வோனின் இதயத்தை அசைக்கவில்லை. முதல் 5 வாதைகளின்போதும் பார்வோன் தன் இதயத்தைக் கடினப்படுத்தியதினால், அதன்பின்னர் அவனுடைய இதயக்கடின நிலையிலேயே அவன் இருக்கும் படி, அவனது இதயத்தை தேவன் கடினப்படுத்தினார். இதன்மூலம் (யாத்.9:12, 10:1, 10, 27, 11:10, 14:4, 8:17). பார்வோன் தன் இதயத்தைக் கடினப் படுத்தியதைத் தேவன் உறுதிப்படுத்தியுள்ளார்.

தேவன் பார்வோனின் சுயசித்தத்திற்கு முரணாக அவனது இதயத்தைக் கடினப்படுத்தினார் என்று நாம் கருதுவது தவறாகும். தேவன் மோசேயைப்

பார்வோனிடம் அனுப்புவதற்கும் முன்பே நான் பார்வோனுடைய இருதயத்தைக் கடினப்படுத்துவேன் என அவர் மோசேயிடம் கூறியது உண்மை. ஆயினும் தேவனுடைய இத்தகைய முன்னறிவிப்புகள் நிபந்தனையுடனான தீர்க்கதரிசன வகையைச் சேர்ந்ததாகும். அழிவையும் நியாயத்தீர்ப்பையும் பற்றிய தீர்க்கதரிசனங்கள் எப்போதுமே நிபந்தனையையும் கொண்டிருப்பதை நாம் வேதாகமத்தில் காணலாம். அதாவது, ஒரு மனிதனை அல்லது தேசத்தை அழிப்பதாக தேவன் அறிவித்தால் அத்தோடு 'மனந்திரும்பாமற் போனால்' என்னும் விஷயமும் சோக்கப்பட்டிருக்கும். மக்கள் மனந்திரும்பினால் தேவன் வரவிருப்பதாகச் சொல்லும் அழிவு வராது என்பதற்கு வேதாகமத்தில் பல உதாரணங்கள் உள்ளன. இன்னும் 40 நாட்களில் அழிவுவரும் என்று நினிவே நகர மக்களுக்கு அறிவிக்கப்பட்டது. யோனாவின் செய்தியில் மனந்திரும்புதல் பற்றிய கூற்று இடம் பெறாதபோதிலும் பாவத்திலிருந்து மனந்திரும்பினால் அழிவு வராது என நினைத்த மக்கள் மனந்திரும்பினார்கள். இதனால்தான் அவர்களுக்குச் செய்வேன் எனச் சொல்லியிருந்த தீர்ப்பைக் குறித்து மனஸ்தாபப்பட்ட தேவன், அவ்வாறு செய்யாதிருந்தார் (யோனா. 3:10). இதேவிதமாக, பார்வோனும் தேவனுடைய வார்த்தைக்குச் செவி கொடுத்திருந்தால் தேவன் அவனுடைய இருதயத்தைக் கடினப்படுத்தி யிருக்கமாட்டார். ஆனால், பார்வோன் தேவனுடைய செயல்களைக் கண்டும் 10 தடவைகள் தன் இருதயத்தைக் கடினப்படுத்தியபடியால், அதன்பின்தான் சொல்லியிருந்தபடியே தேவன் பார்வோனின் இருதயத்தைக் கடினப் படுத்தினார். எனவே, பார்வோனின் இதயத்தைத் தேவன் கடினப்படுத்தக் காரணமாயிருந்தது பார்வோனே தவிர தேவன் அல்ல.

64. 2 சாமுவேல் 18:10 இல் அப்சலோம் என் பேரை நினைக்கப் பண்ணும்படியாக எனக்கு குமாரன் இல்லை என்று சொல்லி, ராஜாவின் பள்ளத்தாக்கிலே தனக்கென்று ஒரு தூணை நிறுத்தி, அந்தத் தூணுக்குத் தன் பேரைத் தரித்தான் என்று சொல்லப்பட்டு உள்ளது. ஆனால் 2 சாமுவேல் 14:27 அப்சலோமுக்கு மூன்று குமாரர்கள் இருந்தார்கள் என்று கூறப்பட்டுள்ளதே?

பதில்:– இதற்கு இருவகையான விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஒன்றில் அப்சலோமின் மூன்று பிள்ளைகளும் இளவயதிலேயே மரணமடைந் திருக்கவேண்டும் . இல்லையெனில், அவர்களில் எவரும் அப்சலோமின்

பெயரை நினைக்கப்பண்ணும்படியாக அவனுடைய பிள்ளையாக இருக்க விருப்பமற்றவர்களாக இருந்திருக்க வேண்டும். இவ்விரு விளக்கங்களில் முதலாவது விளக்கமே இன்று பெரும்பாலான வேத ஆராய்ச்சியாளர் களினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

65. யாத்.4:24ல் வழியில் மோசேயை கர்த்தர் கொல்லப் பார்த்தார் என்று எழுதியுள்ளதே. அது ஏன்?

பதில்:- மோசே, கர்த்தருடைய அன்றைய கட்டளைபடி விருத்தசேதனம் செய்யப்பட்டவன். ஆனால் மோசே இஸ்ரவேல் கோத்திரத்தில் தனக்கு பெண்ணை தெரிந்துகொள்ளாதபடி மீதியான் தேசத்துப் பெண்ணை தனக்கு மனைவியாகத் தெரிந்துகொண்டான். இவர்களுக்கு பிள்ளைகள் பிறந்தது பிள்ளைகளுக்கு உரிய வயது வந்தபோது சிறு குழந்தைகளாக இருக்கும் போதே கர்த்தரின் கட்டளையின்படி பிள்ளைகளை விருத்தசேதனம் செய்ய மோசே சொல்லியிருக்கவேண்டும். ஆனால் மோசேயின் மனைவியின் குடும்பத்தில் அல்லது அவள் ஜாதியில் அப்படிப்பட்ட வழக்கமில்லையாத லால் மோசேயுடன் வாதாடியிருக்கவேண்டும். இருவருக்கும் இந்த விஷயத்தில் போராட்டமும், வாக்குவாதமும் உண்டாகியிருக்கவேண்டும். அதன்பிறகு மோசே அதைக் கட்டாயப்படுத்தவில்லை என்று யூகிக்கலாம்.

ஆனால் இப்போது எகிப்திலுள்ள இஸ்ரவேல் மக்களை வழிநடத்தும் பெரும் பொருப்பு மோசேக்கு உண்டாகி அதற்காக பயணப்படும்போது மற்ற மக்களை வழிநடத்தவேண்டிய ஒரு தலைவனான மோசேயின் குடும்பமே விருத்தசேதனம் செய்யாமல் கர்த்தரின் கட்டளையை மீறிவிட்டால் மற்ற இஸ்ரவேல் மக்களை நோக்கி எல்லாரும் விருத்தசேதனம் செய்தாக வேண்டும் என்று கட்டளையிடுவது எப்படி?

ஆகவே கர்த்தர் மோசேயின் மனைவியை உணர்த்த வேண்டி மோசேயை கொல்லுவதைப்போல் பயமுறுத்தினார். கர்த்தர் மோசேயைதான் கொல்லப் பார்த்தார். ஆனால் மோசேயின் மனைவி உடனே கருகலான கல்லை யெடுத்து தன் மகனின் நுனித்தோலை அறுத்து கர்த்தரின் கட்டளையை நிறைவேற்றினேன். என்ற அர்த்தத்தில் அந்த நிகழ்ச்சி நடைபெறுகிறது. உடனே கர்த்தர் எதை எதிர்பார்த்து என்ன காரணத்துக்காக மோசேயை கொல்லுவதுபோல் செயல்பட்டாரோ அதை அவள் உணர்ந்து செயல்பட்ட உடனே கர்த்தர் அவ்விடத்தைவிட்டு போய்விட்டார்.

66. நாங்கள் ஏழாம்நாள் ஓய்வுநாள் சபையைச் சேர்ந்தவர்கள். சனிக்கிழமைதான் ஓய்வுநாளாக ஆராதிக்கவேண்டும் என்ற கட்டளை வேதத்தில் இருக்க, பின் ஏன் ஞாயிற்றுக் கிழமை யில் நீங்கள் ஆராதிக்கிறீர்கள்?

பதில்:– பழைய ஏற்பாட்டின் நியாயப்பிரமாணத்தின்படி வாரத்தின் ஏழாம்நாள் அதாவது சனிக்கிழமைதான் ஓய்வு நாளாக அன்று அனுஷ்டித்து வந்தனர். ஆனால் கிறிஸ்து உயிர்த்தெழுந்தபின் வாரத்தின் முதல் நாளாகிய அந்த ஞாயிற்றுக்கிழமையில் சீஷர்களும், ஆதிமுதல் சபையும் கூடி ஆராதித்து வந்தது. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் கிறிஸ்தவர்களுக்கு மிக முக்கிய மானது. கிறிஸ்து மட்டும் உயிரோடு எழாமல் போயிருந்தால் இன்று கிறிஸ்தவம் இல்லை. ஆகவே உயிர்த்தெழுந்த கிறிஸ்துவை ஆராதிக்கும் வகையில் வாரத்தில் முதல்நாள் கூடி ஆராதித்தனர்.

பழைய ஏற்பாட்டின் கட்டளைகளில் ஒன்றான ஓய்வுநாள் நியாயப் பிரமாண சட்டமாக கைக்கொள்ளப்பட்டது. அவைகள் வருங்காரியங்களுக்கு நிழலாக இருக்கிறது (கொலோ.2:17). இதே வசனம் இவைகளில் பொருள் கிறிஸ்துவைப் பற்றினது என்று கூறுகிறது. (ரோம.10:4)ல் கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாக இருக்கிறார் என்று எழுதியுள்ளது. ஆகவே,

நியாயப்பிரமாணம் –நிழல்

இயேசு கிறிஸ்து – பொருள்

பொருள் வந்தபின் நிழலுக்கு அவசியமில்லையே.

நியாயப்பிரமாண சடங்குகள் இயேசுவின் உயிர்த்தெழுதலின்பின் பெரும் மாற்றம் கொண்டுவிட்டது.

நாட்கள் பிரதானமல்ல, நாட்களின் நோக்கம்தான் முக்கியம். ஒருவன் ஒரு நாளை, மற்றொரு நாளிலும் விசேஷமாக எண்ணுகிறான். வேறொருவன் எல்லா நாட்களையும் சரியாக எண்ணுகிறான். அவனவன் தன் தன் மனதிலே முழு நிச்சயத்தை உடையவனாயிருக்கக்கடவன் என்று (ரோம.14:5)ல் பவுல் கூறுகிறார்.

குறிப்பாக எந்த நாளில் ஆராதித்தாலும் குற்றமில்லை. அரேபியா போன்ற முகமதியர்களின் நாடுகளில் வெள்ளிக்கிழமைதான் அரசாங்க விடுமுறை அன்றுதான் கிறிஸ்தவர்களும் ஆராதிக்கவேண்டும் என்பது அரசாங்க கட்டளை.

உலகம் உருண்டை வடிவமானது ஒரு பக்கம் சனிக்கிழமையானால் மறுபக்கம் ஞாயிற்றுக்கிழமையாக இருக்கும். ஒரே சமயம் ஒரே குறிப்பிட்ட நாளில் உலகமெல்லாம் ஆராதிக்க இயலாது.

இன்று கர்த்தருடைய பெரும் கிருபையினால் உலகமெல்லாம் ஞாயிற்றுக் கிழமை விடுமுறை உண்டாகி ஆராதிக்க வசதிகள் கிடைக்கும் இந்நாட்களில் சனிக்கிழமைதான் ஆராதிப்பேன் என்று பிடிவாதம் செய்தால் என்னவென்று கூறுவது. SEVENTH DAY ADVENTISTS என்ற இச்சபையின் இக்குறிப்பிட்ட கொள்கையின் பிடிவாதம் மட்டும் இல்லாதிருந்தால் இவர்கள் சபை மிக அதிகமாக எல்லா இடங்களிலும் பெருகியிருக்கும்.

67. ஆதியாகமம் 46:27ல் எகிப்துக்குப்போன யாக்கோபின் குடும்பத்தினர் 70பேர் என்றும் அதே விஷயம் அப்போஸ்தலர் 7:14ல் குறிப்பிடப்படும்போது எகிப்துக்குப்போன யாக்கோபின் குடும்பத்தினர் 75 பேர் என்றும் உள்ளதே இந்த வித்தியாசத் திற்கான காரணம் என்ன?

பதில்:– பழைய ஏற்பாட்டில் (ஆதி.46:26; யாத்.1:5; உபா.10:22) போன்ற வசனங்களில் எகிப்துக்கு சென்ற யாக்கோபின் குடும்பத்தினர் 70 பேர் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், எபிரேய மொழியில் எழுதப்பட்ட பழைய ஏற்பாடு கிரேக்க மொழியில் மொழி பெயர்க்கப்பட்டபோது, (எண். 26:29–36)ஐ அடிப்படையாகக்கொண்டு (ஆதி.46:20)ல் யோசேப்பின் குமாரர்களின் 5 பிள்ளைகளின் பெயர்களும் சேர்க்கப்பட்டன. புதிய ஏற்பாட்டுக்காலக் கிறிஸ்தவர்கள் பழைய ஏற்பாட்டின் மொழி பெயர்ப்பையே உபயோகித்தமையால் (அப்.7:14)ல் 75 பேர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்பில் (யாத்.1:5; உபா.10:22)லும் 70 பேர் என்றே உள்ளது.

68. இஸ்ரவேல் மக்கள் சித்தீம் என்னுமிடத்தில் இருக்கையில் மோவாபியப் பெண்களோடு வேசித்தனம் பண்ணியமை யினால் ஏற்பட்ட வாதையில் 24,000பேர் மரித்ததாக எண்ணாகமம் 25:9 கூறுகிறது. ஆனால், 1 கொரிந்தியர் 10:8 இல் அவ்வாதையில் மரித்தவர்கள் 23,000பேர் என்றே சொல்லப்பட்டுள்ளது இது ஏன்?

பதில்:– (1 கொரி.10:8)ல் ஒரே நாளில் 23,000 பேர் மரித்ததாகவே பவுல் கூறுகிறார். அதாவது, அவ்வாதையினால் ஒரு நாளில் மரித்தவர்கள் 23,000. ஆனால் (எண்.25:9)ல் அந்நாளுக்குப்பின்னர் மரித்தவர்களின் எண்ணிக்கையையும் சேர்த்து மொத்தமாக மரித்தவர்கள் 24,000 பேர் எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிகமாக இந்த 1000 பேரில், கர்த்தருடைய கட்டளையின்படி தூக்கிவிடப்பட்ட தலைவர்களும் அடங்குவர் (எண்.25:4).

69. பழைய ஏற்பாட்டின் ஆகமங்களை யார் யார் எழுதினார்கள்? புதிய ஏற்பாட்டில் காணப்படும் புஸ்தகங்களை, நிரூபங்களை யார் யார் எழுதினார்கள்?

பதில்:– வேத புத்தகத்தின் முதல் ஐந்து புஸ்தகங்கள் ஆதியாகமம் முதல் உபாகமம் வரை மோசேயால் நமக்குக் கிடைக்கப்பட்டது. அவைகளை மோசே தான் எழுதியிருக்க வேண்டும் என்று வேத சாஸ்திரிகள் கணிக்கிறார்கள்.

யோசுவா எழுதியவர் யோசுவா

நியாயாதிபதிகள் எழுதியவர் சாமுவேல்

ரூத் (யாரோ அறியப்படவில்லை)

சாமுவேல் (1,2) ஆக்கியோன் யாரோ (அறியப்படவில்லை)

இராஜாக்களின் புஸ்தகம் (1,2) ஆக்கியோன் எரேமியா (யூகிக்கப் படுகிறது)

நாளாகமம் (1,2) ஆக்கியோன் எஸ்றா

எஸ்றா ஆக்கியோன் எஸ்றா

நெகேமியா ஆக்கியோன் நெகேமியா

எஸ்தர் ஆக்கியோன் மொர்தேகாய்

யோபு ஆக்கியோன் யாரோ (அறியப்படவில்லை)

சங்கீதம் ஆக்கியோன் இப்புஸ்தகத்தில் 150 சங்கீதங்களில் 10 சங்கீதங்களை எழுதியது யார் என அதிலேயே எழுதப்பட்டுள்ளது.

தாவீது	73
கோராகின் புத்திரர்	10

ஆசாபின் புத்திரர்	12
சாலமோன்	2
தேதான்	1
ஏமான்	1
மோசே	1

மீதி 50 சங்கீதங்கள் யார் இயற்றியது என்று அறியப்படமுடியவில்லை.

நீதிமொழிகள் ஆக்கியோன் சாலொமோன்

பிரசங்கி ஆக்கியோன் சாலொமோன்

உன்னதப்பாட்டு ஆக்கியோன் சாலொமோனாக இருக்கலாம் என்று பலரால் யூகிக்கப்படுகிறது. ஆனால் நிறைவான தெளிவில்லை.

ஏசாயா ஆக்கியோன் ஏசாயா

எரேமியா ஆக்கியோன் எரேமியா

புலம்பல் ஆக்கியோன் எரேமியா

எசேக்கியேல் ஆக்கியோன் எசேக்கியேல்

தானியேல் ஆக்கியோன் தானியேல்

ஓசியா ஆக்கியோன் ஓசியா

யோவேல் ஆக்கியோன் யோவேல்

ஆமோஸ் ஆக்கியோன் ஆமோஸ்

ஒபதியா ஆக்கியோன் ஒபதியா

யோனா ஆக்கியோன் யோனா

மீகா ஆக்கியோன் மீகா

நாகூம் ஆக்கியோன் நாகூம்

ஆபகூக் ஆக்கியோன் ஆபகூக்

செப்பனியா ஆக்கியோன் செப்பனியா

ஆகாய் ஆக்கியோன் ஆகாய்

சகரியா ஆக்கியோன் சகரியா

மல்கியா ஆக்கியோன் மல்கியா

பழைய ஏற்பாட்டுக்கும் புதிய ஏற்பாட்டுக்கும் இடையில் மொத்தம் 14 புஸ்தகங்கள் கத்தோலிக்க வேத புஸ்தகத்தில் இருந்தது. இவைகள் இடைசொருகலாக சேர்க்கப்பட்டது. மார்டின் லூத்தர் புரட்சி மாற்றங்கள் செய்தபோது இப்புத்தகங்கள் தேவ வார்த்தையல்ல என்று தீர்மானித்து தள்ளப்பட்டது. ஆகவேதான் இதற்குத் தள்ளுபடி ஆகமம் என்று பெயர் கொடுக்கப்பட்டது.

புதிய ஏற்பாடு

சுவிசேஷ புஸ்தகங்கள் மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் ஆகியவைகள் அந்தந்த புஸ்தகத்தின் பெயருக்குரியவர்களே அவைகளை எழுதினார்கள்.

அப்போஸ்தல நடபடிகள் ஆக்கியோன் லூக்கா

ரோமர் ஆக்கியோன் பவுல்

கொரிந்தியர் (I,II), கலாத்தியர், எபேசியர், பிலிப்பியர், கொலோசெயர், தெசலோனிக்கேயர் (I,II), தீமோத்தேயு (I,II), தீத்து, பிலேமோன் ஆகிய நிரூபங்கள் பவுல் எழுதியதாகும்.

எபிரெயர் ஆக்கியோன் யார் எழுதியது என்பதற்கு தெளிவில்லை (பவுல், அப்பொல்லோ, லூக்கா, பர்னபா இவர்களில் யாரோ ஒருவர் எழுதியிருக்கலாம் என்பது யூகம்)

யாக்கோபு ஆக்கியோன் யாக்கோபு

பேதுரு (I,II) ஆக்கியோன் பேதுரு

யோவான் (I,II,III) ஆக்கியோன் யோவான்

யூதா ஆக்கியோன் யூதா

வெளிப்படுத்தின விசேஷம் ஆக்கியோன் யோவான்

நம் வேத புஸ்தகத்துக்காக ஒவ்வொரு நாளும் நன்றி சொல்லுங்கள். தினம் வேதம் வாசித்து தியானியுங்கள். வேத புஸ்தகம்தான் நமக்கு வழி,

வெளிச்சம். கர்த்தர் நம்மோடு பேசும் வழிகளில் மிக முக்கியமானது வேத புஸ்தகமாகும்.

70. விசுவாசிகள் சீட்டு ஆடுவது பாவமா?

பதில்:– சீட்டு விளையாட்டு என்பது கேரம்போர்டு, கூடைப்பந்து ஆகிய விளையாட்டு போன்றதுதான். அது பாவம் அல்ல. ஆனால் பணம் வைத்து அல்லது அந்த விளையாட்டிலேயே பைத்தியமாக இருந்து நேரத்தை செலவழிப்பது நிச்சயமாக பாவத்தை உண்டுபண்ணும்.

மேலும் நீங்கள் விசுவாசிகள் என்பவர்கள். விசுவாசிகளுக்கு இப்படிப்பட்ட ஆத்துமாவுக்கு பிரயோஜனமில்லாத விளையாட்டுக்கள் விளையாட நேரம் ஏது?

உண்மையான விசுவாசி தனக்கு கிடைக்கும் ஒய்வான நேரத்தை ஆவிக்குரியக் காரியங்களை ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்வதிலும், ஆவிக்குரிய புஸ்தகங்களை படிப்பதிலும், வேத புஸ்தகத்தில் உள்ள விஷயங்களைப் பற்றியும், ஆவிக்குரிய விஷயங்களைப்பற்றியும் பேசி பகிர்ந்துகொள்வதில்தான் சந்தோஷம் அனுபவிப்பார்கள். நேரத்தை செலவழிப்பார்கள்.

71. அப்போஸ்தல நடபடிகளை எழுதியது யார்?

பதில்:– லூக்கா, காரணம் லூக்கா 1:லும், அப்போஸ்தலர் 1:1லும் அந்த புத்தகங்கள் தெயோப்பிலு (Thephilus) என்பவருக்கு எழுதப்பட்டதாகக் காணப்படுகிறது. அப்போஸ்தலர் நடபடிகளில் 'நாங்கள்' என்று குறிப்பிடும் இடங்களிலெல்லாம் நடைபெற்ற சம்பவங்களில் பவுலுடன் இருந்தவர் லூக்காதான். (அப்.13:28) வரையுள்ள அதிகாரம் குறிப்பிடும் சம்பவங்களிலும் பவுலுடன் சென்றவர் லூக்காதான். எனவே, லூக்காதான் இதை எழுதினார் என்று நிரூபிக்கப்பட்டுள்ளது.

72. பவுலின் ஆசிரியர் கமாலியேல் பற்றி வேதம் விளக்கமாக ஒன்றும் கூறவில்லையே?

பதில்:– பவுல்தான் தேவையானவர். கமாலியேல் நமக்குத் தேவையில்லையே! எனவேதான் வேதம் இவரைப்பற்றி நிறைய ஒன்றும் சொல்லவில்லை. இந்த கமாலியேல் சீமோன் என்பவருடைய குமாரன். இல்லேல் என்ற பரிசேய

ஆசாரியனின் பேரன். கமாலியேல் இஸ்ரவேலில் புகழ்பெற்ற நியாய சாஸ்திரி சனகெரீப் சங்கத்தின் முக்கிய ஆலோசகர் 'என் ஆசிரியர்' என்ற பொருளுடைய 'ரபி' என்ற பட்டத்தையும் 'எங்கள் ஆசிரியர்' என்று பொருள் கொண்ட மிக உயரிய பட்டமான 'ரபான்' என்ற பட்டத்தையும் பெற்றவர்.

73. 'இசை' பாடல் தேவையா?

பதில்:– சபையில் இசைக்கருவிகளை பயன்படுத்தலாமா எனக் கேள்விகள் இந்நாளில் எழும்புகிறது. புதிய ஏற்பாட்டில் இதற்கு இடமில்லை என்று தவறாக நினைக்கக்கூடாது. பொதுவாக வேதாகமத்தில் ஆரம்பத்திலிருந்து கடைசிவரை இசையுடன் பாடல் வெளிப்படுகிறது. துதித்தல், இசைக்கருவி இசைத்தல் முதலியவை தேவன் விரும்புவதுதான்.

1. பழைய ஏற்பாடு ஒழிந்துவிட்டது. புதிய ஏற்பாட்டுக் காலமிது என்று சொல்வோரைக்குறித்து எச்சரிக்கையாக இருக்கவேண்டும். பழைய ஏற்பாட்டில் தேவன் நிறைவேற்றி தீர்த்தவைகள் போன மீதியானவைகள் இன்னும் நீடிக்கின்றன.

நியாயப்பிரமாணம் நிறைவேறிவிட்டது. சங்கீதக்காரரின் பாடல்கள் பரிசுத்தாவியானவரால் இயற்றப்பட்டு இசையோடு பாடப்பட்டு வருகிறது.

2. கிறிஸ்துவானவர் கெட்டகுமாரனின் உதாரணம் கூறுகையில் தகப்பன் அவனுக்காக விருந்து செய்து, இசை மீட்ட ஆணையிடுகிறான். இதனைக் கண்ட, கேட்ட மூத்தவன் மூர்க்கமாகி உள்ளே 'வரமாட்டேன்' என்கிறான் (லூக்.15:28).

இன்றும் இரட்சிக்கப்பட்டவன் ஆடிப்பாடி தேவனை துதிக்கிறான். இரட்சிக்கப்படாத பழமைவாதிகளும், இரட்சிப்பின் சந்தோஷம் புரியாதவரும் தேவனைத் துதித்துப்பாடி, இசைகருவிகளை மீட்டி போற்றி ஆராதித்து, நடனம் பண்ணி இரட்சிப்பின் கொண்டாட்டத்தை விழாவெடுக்கும் சபைக்குள் வரவே விரும்பமாட்டார்கள்!

3. பரிசுத்தாவியை பெற்றுக்கொள்ள அப்போஸ்தலர் காலத்தில் எங்கும் டிரம் அடித்துக்கொண்டிருக்கவில்லை என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்!

74. கிறிஸ்துவின் சரீரமான சபையில் பெண்களின் ஊழிய பங்கு என்ன? பெண்கள் பிரசங்கிக்கலாமா?

பதில்:– புதிய ஏற்பாட்டுச் சபையில் சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரை சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும், போதகராகவும் ஏற்படுத்தினார் என்பதில் பெண்களின் ஊழியம் என்ன என்பது அநேகருடைய கேள்வி. பெண்களும் ஊழியஞ்செய்யலாம், பிரசங்கிக்கலாம் என்றால் நமது ஆண்டவர் பன்னிரண்டு அப்போஸ்தலரை தெரிந்துகொண்டபோது ஒரு பெண்ணையாவது ஏன் தெரிந்து கொள்ள வில்லை?

அப்போஸ்தலராக ஒரு பெண்ணையும் நமது ஆண்டவர் தெரிந்து கொள்ளவில்லை என்பது உண்மை. எனவே மற்ற ஊழியங்களை (ஆண்களை) ஆளுகை செய்யக்கூடிய பொறுப்பை தேவன் பெண்களுக்கு கொடுக்க வில்லை என்பது தெளிவாயிருந்தாலும் புதிய ஏற்பாட்டுச் சபையில் ஊழியத்தில் பெண்களுக்கு முக்கிய பங்குண்டு என்பதை மறுக்கமுடியாது; கடைசி நாட்களில் என்னுடைய ஊழியக்காரர்மேலும் என்னுடைய ஊழியக்காரிகள் மேலும் அந்நாட்களில் என் ஆவியை ஊற்றுவேன் என்று வாக்குப்பண்ணி யிருக்கிறார் (அப்.2:18). கர்த்தருக்குள் ஸ்திரீயில்லாமல் புருஷனுமில்லை, புருஷனுமில்லாமல் ஸ்திரீயுமில்லை (1 கொரி.11:11). கிறிஸ்துவுக்குள் ஆணென்றும் பெண்ணென்றுமில்லை. நீங்கள் எல்லாரும் இயேசு கிறிஸ்து வுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள், அவர்களை விசேஷித்தவர் களாக்குவது அவர்கள்மேல் கர்த்தர் கொடுத்துள்ள அபிஷேகமே.

எனவே திருமணமான பெண்கள் புருஷனுக்குக் கீழ்ப்படிந்து அவருடைய அனுமதியோடு தன் குடும்பத்தைக் கவனிப்பதோடுகூட தங்களால் இயன்ற ஊழியத்தைச் செய்யலாம். திருமணமாகாத பெண்களும், முழுநேரமாக ஊழியம் செய்கிறவர்கள் ஊழியர்களின் கண்காணிப்போடு ஆலோசனை யோடும் ஒரு சபைக்குத் தங்களை ஒப்புக்கொடுத்து ஊழியஞ்செய்ய வேண்டும். சபையில் பெண்கள் தீர்க்கதரிசனம் சொல்லலாம் என்றால் (1 கொரி.11:4). சுவிசேஷ சத்தியத்தைப் பெண்களும் பிரசங்கிக்க அழைக்கப் பட்டால் செய்யலாம். பெண்கள் மத்தியில் பெண்கள் பிரசங்க ஊழியமும் செய்யலாம். கெங்கிரேயா சபைக்கு ஊழியக்காரியாகிய நம்முடைய சகோதரி பெபேயாளை என்று பவுல் அப்போஸ்தலன் எழுதுகிறதாக வாசிக்கிறோம். மேலும் கிறிஸ்துவுக்குள் என் உடன் வேலையாட்களாகிய பிரிஸ்கில்லா ளையும், ஆக்கிலாவையும் வாழ்த்துங்கள் என்கிறார் (ரோம.16:1,3).

எனவே ஞானஸ்நானம் கொடுப்பது, ஊழியர்களை ஏற்படுத்துவது, சபைகளை கண்காணிப்பது, ஆண்களின்மேல் ஆளுகை செய்வதுபோன்ற ஊழியம்செய்ய பெண்களை ஏற்படுத்தாவிட்டாலும் ஆண்களின் அதிகாரத்திற்குட்பட்டு அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட கிருபையின்படி ஊழியஞ்செய்யலாம், பிரசங்கிக்கலாம்.

75. கைகளை உயர்த்தலாமா? கைகொட்டி ஆராதிக்கலாமா?

கைகளை உயர்த்துதல்:

பதில்:– தாவீது சொல்லுகிறார் "என் விண்ணப்பம்" உமக்கு முன்பாக தூபமாகவும், என் கையெடுப்பு அந்திப்பலியாகவும் இருக்கக்கடவது (சங்.141:2). உங்கள் கைகளை பரிசுத்த ஸ்தலத்திற்கு நேராக எடுத்து கர்த்தரை ஸ்தோத்தரியுங்கள் (சங்.134:2) இயேசுவும் தன் சீடர்களை ஆசீர்வதிக்கும் போது தம் கரங்களை உயர்த்தினார். லூக்.24:50 பரிசுத்தமான கைகளை உயர்த்தி எல்லா இடங்களிலும் ஜெபிக்கும் 1 தீமோ.2:8 கைகளை உயர்த்தி ஆராதிப்பது வேதத்தின்படி சரியாகும்.

கைகளைத் தட்டுதல்:

தாவீது கூறுகிறார் "சகல ஜனங்களே கைகொட்டி" தேவனுக்கு முன்பாக கெம்பீர சத்தமாய் ஆர்ப்பரியுங்கள் (சங்.47:1). கைகளைத் தட்டுவதுபற்றி கென்னத் ஆகின் என்னும் பரிசுத்தவான் தேவன் தமக்கு இப்படியாகச் சொன்னார் என்று எழுதுகிறார். "கைத்தட்டுதல்" துதியும் அல்ல. ஆராதனையும் அல்ல. அது மற்றவர்களை ஊக்குவிக்கச் (APPRECIATE) செய்வதாகும். உலக மக்கள் அரசியல் மேடைகளிலும் நடன சாலைகளிலும் கைத்தட்டி மகிழ்கின்றனர். அது உண்மையான துதி ஆகாது. அவ்விதமாக கர்த்தரை நாம் கைத்தட்டி துதிக்கும்போது அவரை மனிதர்களுக்கு சமமாகக் கொண்டு வந்துவிடுகிறோம். நாம் ஆராதனை நேரங்களில் தேவனுக்கு கைத்தட்டக் கூடாது. நாம் அவரை பயபக்தியோடு மதித்து அவரைத் துதிக்கவேண்டும்.

ஆராதனைகளில் பாட்டுப் பாடும்போதும் மற்ற ஊழியர்களை வரவேற்கும் போதும், மற்றவர்களை ஊக்குவிக்கும்போதும் நாம் கைத்தட்டி வரவேற்பது தவறு அல்ல.

நம்முடைய உள்ளத்தின் ஆழத்தில் மகிழ்ச்சியினாலும் நன்றியினாலும்

நிறைந்த நமது உதடுகளின் வழியாக வழிந்தோடும் துதியே உண்மையான துதியாகும். தாவீது கூறுகிறார் "நான் பாடும்போது என் உதடுகளும்" நீர் மீட்டுக்கொண்ட என் ஆத்துமாவும் கெம்பீரித்து மகிழும் (சங்.71:23). அவரால் மீட்கப்பட்டவர்கள் மட்டுமே தேவனை உண்மையாக ஆராதிக்கமுடியும். பயத்துடனே கர்த்தரை சேவியுங்கள், நடுக்கத்துடனே களிகூருங்கள் (சங்.2:11) என்று வேதம் கூறுகிறது.

76. கிறிஸ்து சமாதானத்தை உண்டாக்க வந்தாரா? பிரிவினையை உண்டாக்க வந்தாரா?

பதில்: இயேசு, "சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன். என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்" (யோவா.14:27) என்று கூறினார்.

இயேசு தாம் சிலுவையில் சிந்திய இரத்தத்தின் மூலமாக சமாதானத்தை உண்டு பண்ணினார் என்று பவுல் கூறுகிறார் (கொலோ.1:20). ஆனால் கர்த்தராகிய இயேசுவே பின்வரும் வார்த்தைகளையும் கூறியிருக்கிறார் "பூமியின்மேல் சமாதானத்தை அனுப்ப வந்தேன் என்று எண்ணாதிருங்கள்; சமாதானத்தையல்ல, பட்டயத்தையே அனுப்பவந்தேன்" (மத்.10:34).

இதில் எது சரி? இயேசு சமாதானத்தை உண்டாக்க வந்தாரா? அல்லது பிரிவினையை உண்டாக்க வந்தாரா? இயேசு சமாதானத்தையும் பிரிவினையையும் உண்டாக்கவே வந்தார் என்று வேதம் தெளிவாகக் கூறுகிறது. கிறிஸ்து சமாதானத்தை உண்டாக்க வந்தார்:

1. கிறிஸ்துவுக்கு முன் சகரியா, தீர்க்கதரிசனமாக அவரைக்குறித்து, "நமது கால்களை சமாதானத்தின் வழியில் நடத்துவார்" என்று உரைத்தான் (லூக்.1:78,79).

2. அவர் தமது சிலுவை மரணத்தின்மூலமாக தேவனுக்கும், மனிதனுக்கும் இடையே சமாதானத்தை உண்டாக்கினார் (ரோம.5:1; கொலோ.1:20).

3. உலகம் தரக்கூடாத பெரிய சமாதானத்தை தம்மை விசுவாசிக்கிறவர்களுக்கு கிறிஸ்து கொடுக்கிறார் (யோவா.14:27).

4. கிறிஸ்து தமது அடிச்சுவட்டைப் பின்பற்றும்படி நம்மை அழைத்து, "சமாதானம் பண்ணுங்கள்" மத்.5:9). உங்களை அடிக்கிறவர்களுக்கு "இன்னொரு கன்னத்தையும் திருப்பிக் காட்டுங்கள்" (மத்.5:39).

“சத்துருக்களை சிநேகியுங்கள்” (மத்.5:44) போன்ற கட்டளைகளையும் கூறுகிறார்.

கிறிஸ்து பிரிவினை உண்டாக்க வந்தார்:

1. கிறிஸ்து மக்களை தம்மை ஏற்றுக்கொண்டவர்களென்றும், தம்மை ஏற்றுக்கொள்ளாதவர்களென்றும் இரண்டாகப் பிரிக்கின்றார் (யோவா.1:11–13).

2. அவரை வெறுத்துத் தள்ளுகிறவர்கள் அவரை விசுவாசிப்பவர்களையும் பகைப்பதினால், கிறிஸ்து அடிக்கடி குடும்ப உறவுகளில் சமாதானத்திற்கு பதிலாக பட்டயத்தையே தருகிறார் (மத்.10:34–36).

3. தன்னை பின்பற்றுபவர்கள் உலகத்தாராயிராதபடியும், தானும் உலகத்தால் பகைக்கப்படுவதாலும் தன்னைப் பின்பற்றுகிறவர்களை உலகம் பகைக்கும் என்று இயேசு கூறுகிறார் (யோவா.15:18,19, 17:14).

4. தம்மை விசுவாசிக்கின்றவர்கள், நம்மை விசுவாசிக்காதவர்கள் ஆகிய இவ்விரு தரத்தாருக்குமிடையே ஒரு நித்தியப் பிரிவை கிறிஸ்து கொண்டுவருவார் (யோவா.5:28,29).

தேவனோடு சமாதானமுடையவர்களாகவும், தேவனுடைய சமாதான முடையவர்களாயும் இருப்பதற்கு இயேசு கிறிஸ்து நமக்கு பாதை உண்டாக்கிவிட்டார். ஆனால் அவரைப் பின்பற்றுகிறவர்களுக்கு அவரைப் பின்பற்றாதவர்கள் மூலம் வரும் எதிர்ப்பின் நிமித்தம் பிரிவினையும் போராட்டங்களும் உருவாகும்.

77. 1 கொரிந்தியர் 15:29 ற்கான விளக்கம் என்ன?

பதில்:– மேலும் மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், மரித்தவர்களுக்காக ஞானஸ்நானம் பெறுகிறவர்கள் என்ன செய்வார்கள்? மரித்தவர்களுக்காக ஏன் ஞானஸ்நானம் பெறுகிறார்கள்? என்று பவுல் 1 கொரி.15:29ல் குறிப்பிடுகிறார். மேற்கூறிய வசனத்திற்கு இறையியல் நூல்களைப் படித்தால் குறைந்தது முப்பது அல்லது நாற்பது விளக்கங்கள் இருப்பதாகக் காணலாம். (1 கொரி.15ம்) அதிகாரத்தில் உயிர்த்தெழுதல் உண்டு என்பதை பவுல் பல கோணங்களிலிருந்து நிறுவ முயற்சி செய்கின்றார்.

உயிர்த்தெழுதலில் நம்பிக்கையில்லாத தவறான போதனைகளைக் கொண்ட ஒரு பிரிவினர் இருந்தனர் (கி.பி. இரண்டாம் நூற்றாண்டிலும்

இப்படி ஒரு பிரிவு இருந்ததாக சரித்திர ஏடுகள் கூறுகின்றன). அவர்கள் ஞானஸ்நானம் எடுக்காமல் மரித்துப்போன தங்கள் நண்பர்கள் சார்பில் வேறு உயிருள்ள ஒருவரை மரித்தவருக்காக ஞானஸ்நானம் எடுக்கச் செய்தனர். இது தவறுதலான பழக்கமே. அவர்களுடைய தவறுதலான பழக்கமும் உயிர்த்தெழுதல் இல்லை என்றால் அர்த்தமற்றதாகிறது என்று பவுல் கூறிப்போகின்றார். உயிர்த்தெழுதல் இல்லையென்றால் மரித்தவர்களுக்காக செய்விக்கப்படும் இந்த ஞானஸ்நானம் என்ன பலனை அளிக்கக்கூடும் என்று பவுல் அவர்களிடம் கேட்கிறார். மரித்தவர்கள் உயிருடன் எழப் போவதில்லை என்றால் ஏன் வீணாய் இதைச் செய்கிறீர்கள் என்று அவர்களை உயிர்த்தெழுதல் பற்றி சிந்திக்கும்படி பவுல் செய்கிறார்.

இது பவுலின் எழுத்து நடை. தவறான பழக்கவழக்கங்களை சுட்டிக்காட்டி அதிலிருந்து நல்லதொரு பாடத்தை வரைந்து காட்ட முற்படுவது பவுலின் முறை. 1 கொரி.8:10ல் விக்கிரகக் கோவிலில் பந்தியிருப்பது பற்றி இதைப்போலவே பவுல் பேசுகிறார். (1 கொரி.10:21ல் பேய்களின் பாத்திரத்தில் பங்குகொள்ளக்கூடாதே என்பதை எடுத்துரைக்கிறார். ஆகவே மரித்தோர்களின் (ஹியூப்பர் என்ற சொல் கிரேக்கத்தில் வருகிறது) ஞானஸ்நானம் என்பது ஒன்று கிடையாது. அதை பவுல் ஒப்புக்கெண்டார் என்றும் அர்த்தம் ஆகாது. மரித்தவர்களைக் குறித்து அக்கறை கொண்டு அவர்கள் சார்பில் உயிருள்ளவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்க முற்படுவதைவிட இவர்கள் உயிருடன் உள்ள ஆத்துமாக்களின் உயிரில் அக்கறை கொண்டு அவர்களில் மனந்திரும்புதல் ஞானஸ்நானம் பெறல் போன்றவைகளில் ஈடுபடுவார்களானால் நலமாயிருக்கும்.

இரத்த சாட்சியாய் மரித்தவர்களின் கல்லறையின்மேல் இருந்து ஞானஸ்நானம் பெறுவதை இது குறிக்கின்றது என்று ஒரு விளக்கம் சொல்லப்படுகிறது. ஆனால் பவுல் இந்தக் கடிதத்தைக் கொரிந்து திருச்சபைக்கு எழுதுகின்ற வேளையில் சபை கொடுந்துன்பத்திற்கு முந்திய காலச் சம்பவமாக இது கூறப்பட்டிருப்பதால் இந்த விளக்கம் ஒப்புக்கொள்ள முடியாததாக இருக்கிறது.

மேலும் சபையில் ஒருவர் பல முக்கியப் பொறுப்புகள் வகிக்கின்றார். அவர் வயது முதிர்ச்சியால் மரணம் அடைகிறார். அந்த சபையில் அந்தப் பொறுப்புகளைக் கவனிக்க ஆள் இல்லாததால் அங்கு ஒரு வெற்றிடம் ஏற்படுகிறது. அதை நிரப்ப வேறு ஒருவனை ஞானஸ்நானம் கொடுத்து அந்தப்

பொறுப்புகளை அவனை ஏற்றுக்கொள்ளும்படி செய்வதை இது குறிக்கிறது. அப்படிப்பட்ட வழக்கம் இருந்தது என ஒரு விளக்கம் அளிக்கப்படுகிறது. சபைக்கு புதிய தலைமுறையினர் தேவையே. இந்த வசனத்திற்குச் சரியான விளக்கமாக இதை எடுத்துக்கொள்ளலாமா இல்லையா என்பதைவிட இப்படிப்பட்ட காரியம் தேவையானதொன்றாகப்படுகிறது.

மரித்த தேவனுடைய பக்தர் ஒருவர் மேல் கொண்ட மதிப்பினாலும் அன்பினாலும் ஒருவர் அவர் மரணவேளையில் உள்ளத்தில் தொடப்பட்டு தன்னை திருமுழுக்கிற்கு ஒப்புக்கொடுத்ததை இது குறிக்கப்படும் என்னும் விளக்கத்தையும் தமது விளக்கவுரையில் திரு. வில்லியம்ஸ் பார்கிளே சேர்த்துக்கொள்கிறார். இப்படி ஒருவரின் தெய்வீக மரணம் அநேகரை விசுவாசத்திற்குள் நடத்துவது சரீரத்தில் பல காலகட்டத்தில் காணப்பட்ட உண்மையாக இருக்கிறது. இதுவும் சிந்தனைக்கு எடுத்துக்கொள்வதற்கு ஏற்றதொரு காரியமாக உள்ளது.

பெரும்பாலும் நான் கருதுவது ஞானஸ்நானம் எடுப்பதற்குமுன்பு அதன் போதனைகளைப்பெற்று அதனை எடுக்காமல் மரணம் அடைந்தவர்களின் சார்பில் வேறு ஒருவர் அவருக்காக திருமுழுக்கு எடுக்கும் பழக்கம் நிலவி வந்துள்ளது. இது தவறான பழக்கமாக உயிர்த்தெழுதலை நம்பாத மக்களால் பின்பற்றப்பட்டு வந்திருக்கிறது. யோசியுங்கள். உயிர்த்தெழுதல் முற்றிலும் இல்லையானால் இப்படி மரித்தவர்களுக்கும் செய்யப்படும் காரியத்தால் என்ன பயன் என்று பவுல் கேட்கிறார். இப்பழக்கத்தை இங்கு வெளிப் படையாக மறுக்கவும் இல்லை, ஏற்றுக்கொள்ளவும் இல்லை. அவரது கருப்பொருளான உயிர்த்தெழுதலைப் பற்றியே பேசுகிறார். புதிய ஏற்பாட்டுக் காலத்தில் இந்த இடம் தவிர வேறு எந்த இடத்திலும் இது குறிக்கப்பட வில்லை.

இங்கு ஞானஸ்நானம் என்னும் வேத கோட்பாடு பற்றி எந்த விளக்கமும் விமரிசனமும் நான் கொடுக்க முற்படவில்லை. (1 கொரி.15:29)ல் பவுல் கூறியுள்ள ஒரு காரியத்திற்கு விளக்கம் கூற முற்பட்டேன். இது இந்த வசனத்தில் சிலருக்குள்ள சந்தேகத்தைத் தீர்த்து வைக்குமென்று எண்ணுகிறேன்.

78. புத்தர், காந்தி, முகமது போன்ற மகான்களோடு இயேசுவையும் ஒப்பிட்டு பேசுவதும், எழுதுவதும், ஓவியம் வரைவதும் தவறா?

பதில்:– ஆம்! முற்றிலும் தவறு! புத்தர், காந்தி, முகமது, இயேசு ஆகிய இவர்களில் இயேசுவானவர் எந்த ஒரு மனிதனோடும் ஒப்பிடத்தக்கவர் அல்ல. அவர் ஒப்பற்றவர்; அவர் இணையில்லாதவர்; அவர் தன்னிகரற்றவர்:

உலகத்தினால் மகான் என்று போற்றப்படும் அனைவரும் மண்ணிலிருந்து தோன்றி, மண்ணின்மீது புகழடைந்து, வாழ்ந்து, மண்ணுக்கே திரும்பிய வர்கள். இயேசுவானவரோ விண்ணிலிருந்து வந்த கர்த்தர் அவர் மண்ணுருவாகி, மண்ணின்மீது வாழ்ந்து, பின்பு மண்ணுக்குள் திரும்பாமல் மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்து விண்ணுக்கே சென்றவர் விண்ணி லிருந்து தோன்றி விண்ணுக்கேத் திரும்பிய தெய்வ அவதாரமாகிய இயேசுவை எந்த ஒரு மனிதரோடும் சமமாக்கி ஒப்பிடுவது சரியல்ல. வேதவாக்கியங்களின்படி தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டார். காணக் கூடாதவரும், ஒருவராலும் கண்டிராதவருமாகிய அரூபியான தேவனுடைய காணக்கூடிய அவதாரப் புருஷன் இயேசுவே. அவர் அதரிசனமான தேவனுடைய தற்சுரூபம் மனுக்குலத்தைப் பாவத்திலிருந்து மீட்டு பரலோகம் சேர்க்க சிருஷ்டிகரே இரட்சகரானார். அவரே கர்த்தராகிய இயேசு கிறிஸ்து.

இயேசுவானவர் இவ்வுலகில் வாழ்ந்த வாழ்க்கை ஒப்பற்றது. பாவ மில்லாமல் பிறந்து, பாவமில்லாமல் வாழ்ந்து, பாவமில்லாமல் மறைந்த ஒரே அவதாரப்புருஷன் இயேசுகிறிஸ்துவே. அவர் பேசிய வார்த்தை ஒப்பற்றவை வானமும் பூமியும் ஒழிந்துபோனாலும் ஒழியாததும், அழியாததுமாகிய தெய்வீக வார்த்தைகளையே அவர் கேட்பார் வியக்கும்படி பேசினார். அவர் செய்த செயல்கள் ஒப்பற்றவை ஒருவரும் ஒருக்காலும் செய்திராததும் ஒருவராலும் எண்ணக்கூடாததும், எழுதக்கூடாததுமான அற்புத அடை யாளங்களைத் தம்முடைய குறுகிய காலத்தில் ஊழியம் செய்து முடித்தார். அவர் செய்த தியாகமும் அவர் அடைந்த வெற்றியுங்கூட ஒப்பற்றவை. அவர் ஒரு தேசத்துக்காகவோ, ஒரு கொள்கைக்காகவோ, ஒரு மதத்துக்காகவோ தம் உயிரைத் தியாகம் செய்யாமல் சர்வ உலகத்தின் மானிடருடைய பாவ நிவிர்த்திக்காக தம்முடைய ஜீவனைத் தந்தார். அத்தோடு அவர் நின்று விடாமல் மரணத்தை ஜெயமாக வென்று இன்றும் உயிருள்ளவரும், மாறாதவருமாகிய தேவனாக விளங்குகின்றார். எனவே ஒப்பற்ற தெய்வமும்,

இணையற்ற இரட்சகரும், தன்னிகரற்ற தனி புருஷனுமாகிய இயேசுவை நாம் எந்த மனிதரோடும் ஒப்பிடக்கூடாது.

79. தானியேலின் 70 வாரங்கள்-விளக்கம்

பதில்: இங்கு வாரங்களைப்பற்றி பேசப்பட்டுள்ளது. ஒரு வாத்திற்கு ஏழுநாட்கள். ஒரு நாள் என்பது வேதத்தில் ஒரு ஆண்டைக் குறிக்கும் படியான வசனம் இரண்டு இடங்களில் வருகிறது (எசே.4:6; எண்.14:34). யூதர்களின் கணக்குப்படி ஒரு ஆண்டிற்கு 360 நாட்கள் ஆகும். ஆகவே 69 வாரங்கள் 69x7=483 வருடங்களை குறிக்கும் அல்லது 173880 நாட்களைக் குறிக்கும். எருசலேமைத் திரும்ப எடுத்துக்காட்டுகிறதற்கு கி.மு.445 நிசான் மாதம் முதலாம் நாள் கொடுக்கப்பட்டது. (B.C.445March 14th)இத்துடன் 173880 நாட்களைக் கூட்டினால் ஏப்ரல் 6ம்தேதி வருகிறது. இந்த நாள் இயேசுகிறிஸ்து மரணத்தை சந்திக்கும்படி கழுதையின் மேல் ஏறி எருசலேமிற்கு பவனி சென்ற நாள் 62x7=69 வாரங்களுக்கு பின்பு மேசியா சங்கரிக்கப் படுவார் என்பது நிறைவேறிவிட்டது. நாம் இப்பொழுது கிருபையின் காலத்தில் இருக்கிறோம். தானி.9:27ல் வரும் ஒரு வாரம் மகா உபத்திரவக்காலம். அந்த உபத்திரவக் காலத்திற்கு தப்பித்துக் கொள்ள இன்றே அவரை சந்திக்க ஆயத்தப்படுங்கள்.

80. ஆதி.61,2ல் சொல்லப்பட்ட தேவபுத்திரர்கள் தேவ தூதர்களா? யோபு 38:7ன்படி தேவ புத்திரர்கள் தேவ தூதர்கள் என்றால் அவர்கள் மனுஷ குமாரத்திகளோடு சேர்ந்து இராட்சதர்களைப் பெற்றார்களா?

பதில்:- ஆதி.6:1,2ல் சொல்லப்பட்டது தேவதூதர்கள் என்றால் அவர்கள் எப்படி மனுஷகுமாரத்திகளோடு சேரமுடியும்? தேவ தூதர்கள் மத்.22:30ல் சொல்லப்பட்டபடி கொள்வினையும் கொடுப்பினையும் இல்லாதவர் களாயிற்றே. பலுகிப் பெருகும் அதிகாரம் மனிதனுக்குத்தானே உண்டு (ஆதி.1:28; 9:1,2). தேவ புத்திரர் என்றால் யோவா.1:12ல் சொல்லப்பட்டபடி விசுவாசமுள்ள மார்க்கத்தார். மனுஷ குமாரத்தி என்றால் அவிசுவாசக் கூட்டப்பெண்கள். விசுவாசமுள்ளவன் அவிசுவாசியோடு சேர்ந்தான்; அந்நிய நுகத்தோடு சேர்ந்தான் (2 கொரி.6:14). இது தேவ பார்வையிலே விக்கிரக ஆராதனை. எனவேதான் தேவன் மனஸ்தாபப்பட்டார் (ஆதி.6:3-6). தேவ பிள்ளைகள் அந்நிய நுகத்தோடு சேர்ந்ததால் இராட்சதர்

பிறக்கவில்லை. அதற்கு முன்பே இராட்சதர் இருந்தார்கள் என்று (ஆதி.6:4)ல் சொல்வதைப் பாருங்கள். (யோபு 38:7ல்) சொல்லப்பட்ட தேவபுத்திரர்களும் (எபி.1:4)ல் சொல்லப்பட்ட தேவதூதர்களும் ஒன்றே என்று மூலபாஷையினால் அறியப்படுகிறது.

81. ஒருவன் அதிகாலையிலே எழுந்து உரத்த சத்தத்தோடே தன் சிநேகிதனுக்குச் சொல்லும் ஆசீர்வாதம் சாபமாக எண்ணப் படும் (நீதி.27:14) ஏன்? எதற்காக? எப்படி? எதனால்?

பதில்:– ஆசீர்வதிக்கிறவன் உரத்த சத்தத்தோடே ஒருக்காலும், சொல்ல மாட்டான். அதிகாலையில் எழுந்த உடன் ஆசீர்வாதம் ஏன்? தூங்கும்போது தன் சிநேகிதன் தனக்கு ஏதாவது செய்தானென்றா? ஆசீர்வதிக்கிறான். எப்போதும் உரத்த சத்தத்தோடு புகழும் எதையும் நம்பக்கூடாது. அது ஆசீர்வாதத்திற்காக சொல்வதல்ல. அதன்மூலம் சாபம் தான் வரும். எப்போது? அதை நீ அனுமதித்து ஏற்றுக்கொள்ளும்போது “அதிகப்படியான புகழ்ச்சி சந்தேகத்திற்குரியது” என்று ஒரு ஆங்கிலப் பழமொழி உள்ளது. ஒருவன் நீ நன்றாகப் பாடுகிறாய்; நன்றாய் பாடுகிறாய் என்று பார்க்கும் போதெல்லாம், பலர் மத்தியிலும் தொடர்ந்து சொன்னால் இது ஆசீர்வாத மல்ல. ஒரு பாடகன் பாடிக்கொண்டிருந்தான். பாடி முடித்த பின் அனைவரும் மறுபடியும் பாடு என்றனர். மறுபடியும் பாடினான்; இன்னும் பாடுங்கள் என்றனர். இன்னும் பாடினான். இப்படியாய் சொல்லிக்கொண்டே இருந்தனர். பாடகன் தன் பாட்டை ரசித்துக் கேட்கிறார்கள் என்று எண்ணினான். அவர்கள் தொடர்ந்து சொல்ல, சொல்ல, இவனும் பாடப்பாட தொண்டை கம்மி விட்டது; பாடவே முடியவில்லை. ஆனால் அவர்கள் விட்ட பாடில்லை. ஏன் இப்படி தொல்லை பண்ணுகிறீர்கள் என்று பாடகன் கேட்டான். “உன் பாட்டு சரியாக இல்லை” நீ சரியாக பாடவேண்டும் என்று தான் இப்படிச் சொன்னோம்” என்றார்கள். எனவே அதிக புகழ்ச்சியில் எச்சரிக்கையாயிருக்கவேண்டும். அது நமக்கு தீமையாகவும் மாறலாம்.

82. இயேசு நாதர் பிறந்து இரண்டாயிரம் ஆண்டுகள் தான் ஆகியிருக்கிறது. இப்படியிருக்க அவர் உலகத்தை எப்படி படைத்தார்?

பதில்:– இயேசு கிறிஸ்துவுக்குத் தொடக்கமும் முடிவும் இல்லை. அவர் தான் தொடக்கமும் முடிவும் (வெளி 1:8) ஆதியிலே வார்த்தை இருந்தது. அந்த

வார்த்தை தேவனிடத்திலிருந்தது. அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அந்த வார்த்தையாகிய தேவன் மனுவுருவாகி கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய் நமக்குள்ளே வாசம் பண்ணினார் (யோவா.1:1,14). அவர்தான் இயேசுகிறிஸ்து. அவர் ஆதியிலே தேவனோடிருந்தார். சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று. உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை (யோவா.1:2,3) என்று வேதம் கூறுகிறது. பிதாவாகிய தேவன் தொடக்கமும் முடிவும் அற்றிருப்பதுபோல் குமாரனாகிய இயேசு பிதாவாகிய தேவனுக்கு சமமாயிருக்கிறார் (பிலி.2:6). பிதாவாகிய தேவன் இயேசு கிறிஸ்துவைக் கொண்டு உலகத்தையும் அதிலுள்ள யாவையும் உண்டாக்கினார் (கொலோ.1:14–17). ஆனால் தொடக்கமற்ற இயேசு மனித உருவில் இந்த உலகத்திற்கு வெளிப்பட்டு 2000 ஆண்டுகள் ஆகிறது. இயேசு இவ்வுலகில் பிறந்த நாளை மையப்படுத்தி, சரித்திரம் கிறிஸ்து பிறப்பதற்கு முன் என்றும் கிறிஸ்து பிறப்பதற்குப்பின் என்றும் இரண்டாகியது. இயேசுவுக்கு முடிவு இல்லை. அவர் மரித்தபோது அவரது கதையே முடிந்தது என்று யூதர்கள் முழங்கினார்கள். ஆனால் அதுவே ஒரு சகாப்தத்தின் தொடக்கமாகியது. அவர் மரித்த 3–ம் நாள் உயிரோடு எழுந்தார். மரித்தேன் ஆனால் இதோ சதாகாலமும் உயிரோடிருக்கிறேன் (வெளி 1:18) என்று வீரச்சவாலோடு விண்ணேற்படைந்து பிதாவின் வலது பக்கத்தில் வீற்றிருக்கிறார். அவரது சிங்காசனம் நிலையானது.

83. சமாரியா ஸ்திரீ விபச்சாரியா?

பதில்:– யோவான் 4 வது அதிகாரத்தில் காணப்படும் சம்பவத்தில் சமாரியாவைச் சேர்ந்த பெண் விபச்சார வாழ்க்கை வாழ்ந்தவள் என்று அநேகர் நினைக்கிறார்கள். இது சரியா? சமாரிய பெண் விபச்சாரியல்ல.

அந்நாட்களிலே, குறிப்பாக யூதர்களில் ஒரு பெண் விதவையாகி விட்டால், அவளுக்கு இன்னொருவனைத் திருமணம் செய்து கொடுப்பார்கள். அவனும் மரித்தால், இன்னொருவனைத் திருமணம் செய்து கொடுப்பார்கள். இப்படிச் செய்வது வழக்கம் (மத்.22:25,26 வாசிக்கவும்). மேலும் நிச்சயம் பண்ணி ஒரு வருடம் கழித்துதான் திருமணம் இருக்கும். ஏற்கனவே, சமாரியப் பெண்ணுக்கு 5 கணவர்கள் இருந்து (ஒருவர் பின் ஒருவராக) இப்போது 6 வது நபர் நிச்சயம் மட்டுமே செய்யப்பட்டிருந்தாள். திருமணம் நடக்கவில்லை. இந்த சந்தர்ப்பத்தில் அவளை சந்திக்கும் இயேசு, தெளிவாக அவளிடம், 'எப்படி யெனில் உனக்கு 5 புருஷர்கள்' இருந்தார்கள் என்றார்.

'புருஷர்கள்' என்பது நியாயமான திருமணப்படி வந்தவனைக் குறிக்கிற தேயன்றி, கள்ளக் காதலர்களை அல்ல. ஆங்கிலத்திலும், மூல பாஷையிலும் கணவர் என்கிற பொருள் வருகிறது.

அவள் ஒருவேளை விபச்சாரியாக இருந்தால், அவள் பேச்சைக் கேட்டு ஊரே திரண்டு வருமா? அவளைக் காரி உமிழ மாட்டார்களா? அவள் தண்ணீர் எடுக்க வந்த நேரம் மதியம் 12 மணியாக இருக்கலாம் (இந்திய நேரப்படி). ஆனால் அதற்காக தன்னந்தனியாக தண்ணீர் எடுக்க வந்தாள் என்றோ, அவள் விபச்சாரி என்றோ, கற்பனைசெய்வது வேதத்தின்படியான தல்ல. எனவே, தயவு செய்து திருத்திக் கொள்ளுங்கள். சமாரியப் பெண் விபச்சாரியல்ல.

84. தாடி, மீசை வைப்பதா? மழித்து விடுவதா?

பதில்:– என்னதான் மருந்து தடவினாலும் பெண்ணுக்கு முளைக்க வைக்க முடியாது.

ஏன் மீசை தாடியை மக்கள் சவரம் செய்கிறார்கள் என்றுத் தெரிய வில்லை. பெண்களைப் போல் (அழகாக) இருக்க விரும்பிச் செய்கிறார்களோ என்றும் கர்த்தருடைய சிருஷ்டிப்பின் வித்தியாசத்தை மாற்றக்கூடாது என்றும் இயேசு கிறிஸ்து, மோசே, ஆரோன், தாவீது போன்றோர் வைத்திருந்தார்கள் என்றும் கூறி கட்டாயம் இரண்டையும் வளர்க்கவேண்டும் என்று வாதிடும் ஓர் கூட்டம் உண்டு.

மீசை வைத்திருக்கிறான் இவன் தேவபிள்ளையா? தாடி வளர்க்கிறான். இவன் நாடக நடிகனா, தலையில் சற்று முடி நீளமாக வளர்த்து இருக்கிறான். இவன் சினிமாக்காரனா என்று பிறரைக்குறித்து இடறலடைந்து இப்படித்தானிருக்க வேண்டும் என்று ஒரு குறிப்பிட்ட சைஸ்ஸிற்கு வந்துவிட்ட விசுவாசிகளும் உண்டு. இவர்கள் தங்கள் மார்க்க கொள்கையை (தாடி, மீசை சவரம்) தீவிரமாக பரப்புகிறார்கள் ஐயோ! கிறிஸ்தவமே இதற்காகவா கிறிஸ்து உன்னை அழைத்தார்? தேவையில்லாத காரியத்தில் நேரத்தை வீணடிக்கும்படி சாத்தான் உன்னை வளைக்கிறான் என்பது கூடவா விளங்கவில்லை?

இந்த இரண்டு கூட்டமும் மனந்திரும்ப வேண்டும். இல்லையெனில் மனிதர் பேசும் வீணான வார்த்தைகளுக்கு கணக்கு கொடுக்கும் நியாயத்தீர்ப்பு நாளில் வெட்கம் காத்திருப்பது நிச்சயம்.

இவ்விஷயத்தில் வேதம் வலியுறுத்திக் கூறுவது ஆண்கள் நீளமாக தலைமுடி வளர்க்கக்கூடாது என்பதையே அதை நாம் கட்டாயம் கடைபிடிக்க வேண்டும். மற்றபடி மொட்டையடித்தாலும் (பவுல்–அப்.18:8). முகச்சவரம் செய்தாலும் (யோசேப்பு ஆதி.41:14), தாடிமீசை வளர்த்தாலும் (தாவீது 1 சாமு. 21:13). எல்லாம் கர்த்தர் அனுமதிக்கிறார். இது தவறு என்றால் எவரும் இனி நகம் வெட்டக்கூடாது. பல்துலக்கக்கூடாது இதற்கெல்லாம் வேதத்தில் ஆதாரம் இல்லை. பக்திக்கும் பரிசுத்தத்திற்கும் தாடி மீசைக்கும் எள்ளளவும் சம்பந்தமில்லை. இந்த வீண் வாக்குவாதத்திலிருந்து குற்றம் காணும் கண்ணிலிருந்து விடுபடுவது ரொம்ப நல்லது!

85. கிறிஸ்தவன் ஒருவன் கட்டாயமாக பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்றிருக்க வேண்டுமா?

பதில்:– கிறிஸ்து என்கிற பதத்தின் பொருள் அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்பதாகும். எபிரேய பதம் ஆகிய 'மேசியா' என்பதும் கிரேக்க பதமான 'கிறிஸ்ட்டோஸ்' என்பதும் இதே பொருளைத் தருகின்றன. கிறிஸ்து என்றால் அபிஷேகம் பண்ணப்பட்டவர். அப்படியானால் கிறிஸ்தவர்கள் என்றால் கட்டாயம் 'அபிஷேகம்' பண்ணப்பட்டவர்கள் என்றுதானே பொருள். எனவே ஒரு கிறிஸ்தவன் என்பவன் கட்டாயம் அபிஷேகம் பண்ணப்பட்டவனாக இருக்கவேண்டும் (யோவா.3:3–5).

86. 2 நாளா.24:21ல் உள்ள சகரியா, யோய்தாவின் குமாரன் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் மத்.23:25ல் பரகியாவின் குமாரன் என்றுள்ளது. இருவரும் ஒருவரா? வெவ்வேறு நபர்களா?

பதில்:– இருவரும் ஒருவர்தான் என்றும், (2 நாளா.24:21)ல் சொல்லப்பட்ட யோய்தா என்பவர் சகரியாவின் தாத்தா என்றும், இவர் சகரியா ஊழியத்திற்கு வரும் முன்னரே தனது 130வது வயதில் மரித்துப்போனார் எனவும் கருதவாய்ப்புண்டு. இயேசு கிறிஸ்துவை அவரின் யூதபரம்பரையில் புகழ்வாய்ந்த "தாவீதின் குமாரன்" என்று சொன்னதுபோல, சகரியாவை, யோய்தாவின் குமாரன் என்று போடப்பட்டதாய் நிதானிக்கலாம். அதே நேரத்தில், இரண்டு சகரியாவும், வெவ்வேறு ஆள்தான் என்றும், (மத்.23:35)ல் சொல்லப்பட்ட சகரியா என்பவர், சகரியா என்ற தீர்க்கதரிசனப் புத்தகத்தை எழுதினவர் என்றும், இவருடைய அப்பா பரகியாதான் என்றும்,

இவரும் (2 நாளா.24)ல் சொல்லப்பட்ட சகரியா போல தேவாலயத்திலே கொல்லப்பட்டார் என்றும் கருத வாய்ப்புண்டு என்போரும் உண்டு. இதற்கு ஆதார வசனம் (சக.1:1). எனவே இருவரும் ஒருவர் அல்ல என்றும், (மத்.23:25)ல் உள்ளவர் சகரியா புத்தகத்தை எழுதியவர் என்றும் நான் நிதானிக்கிறேன்.

87. தவறு செய்தால் மனசாட்சியில் பாதிக்கப்படுவது கிறிஸ்தவர்களுக்கு மட்டுமல்ல; புறஜாதிகளுக்கும் உண்டே. இந்த உணர்வில் கிறிஸ்தவர்கள் எவ்விதம் மேலானவர்கள்?

பதில்: ஆம், மனசாட்சி என்பது அனைவருக்கும் அளித்துள்ள பொதுவான கிருபை ஆகும். ஒரு கிறிஸ்தவனல்லாதவன் தன் தவறுக்காக மனச்சாட்சியில் குத்தப்படுகையில், சிறிது வருந்தினாலும் பிறகு அப்படியே கடந்து விடுகிறான். ஆனால் ஒரு தேவ பிள்ளையோ, மனசாட்சியில் வாதிக்கப்பட்டு, அப்படியே கடந்துவிடாமல், பரிசுத்த ஆவியானவரின் உணர்த்துதலுக்கு கீழ்ப்படிந்து, முழங்கால் படியிட்டு அதை அறிக்கைப் பண்ணி மனம் திரும்பி சரி செய்துகொள்கிறான். எனவே நியாயத்தீர்ப்பிற்கு தப்பிக்கொள்கிறான். வேதமும் இதை ஆமோதிக்கிறது. 'நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந்தீர்க்கப்படோம்' (1 கொரி.11:31).

88. மத்தேயு 1:16ல் இயேசுவின் வளர்ப்புத் தந்தையாகிய யோசேப்பின் தந்தை யாக்கோபு என்றும் லூக்.3:23ல் யோசேப்பின் தந்தை ஏலி என்றும் உள்ளதே. எது சரி?

பதில்: மத்தேயு ஆபிரகாம் முதல் எழுதுகிறார். லூக்கா ஆதாம் முதல் எழுதுகிறார். இருவர் எழுதுவதிலும் ஆபிரகாம் முதல் தாவீது வரை பரம்பரை சரியாக உள்ளது. தாவீது முதல் மத்தேயு சாலமோன் வழியாய் எழுதுகிறார்; லூக்காவோ நாத்தான் வழியாய் எழுதுகிறார். மத்தேயு யோசேப்பின் வம்சாவழியை எழுதுகிறார்: லூக்கா மரியாளின் வம்சாவழியை எழுதுகிறார். சட்டப்படியான வம்சாவழி மத்தேயு எழுதியது அப்படிப் பார்க்கும்போது யாக்கோபின் மகன் யோசேப்பு யோசேப்பின் மகன் இயேசு என்பது சரி. ஆனால் இயேசு யோசேப்பின் மகனல்லவே! மேலும் (மத்.1:11)ஐப் பார்க்கும் போது எகோனியா என்ற ஒருவன் வருகிறான். அவன் (எரே.22:24–30)ன்படி சபிக்கப்பட்டவன் அவன் பரம்பரை ராஜ்யபாரத்திற்கு உட்பட்டதல்ல. இதை வைத்துப் பார்த்தால் அந்த சட்டப்படியான மத்தேயுவின் வம்சாவழிப்படி வரும்

இயேசு ராஜ்ய பாரம்பரியத்திற்கு ஏற்றவராக மாட்டார். அதனாலேயே தேவன் மனுஷரைப்போல அந்த பாரம்பரியத்தில் இயேசுவைப் பிறப்பிக்காமல் பரிசுத்த ஆவியினாலே பிறப்பிக்க வைத்தார். இப்படியிருக்க ராஜ்ய பாரம்பரியத்திற்கு இயேசுவின் வம்சாவழி ஒத்துப்போகும் வகையில் மரியாளின் வகையில் லூக்கா எழுதுகிறான். ஏல் என்பவன் மரியாளின் அப்பா: ஆக யோசேப்பு ஏல் என்பவனின் மருமகன் சட்டப்படி இயேசு யோசேப்பின் மகனாய் இருந்தாலும் உண்மையிலேயே இயேசு மரியாளின் மகன்தான் (அதாவது மரியாளுக்கு தேவனால் பிறந்தவர்) யோசேப்பு உண்மையிலேயே யாக்கோபின் வாரிசு என்று மத்தேயு எழுதுகிறார். ஆனால் லூக்காவோ யோசேப்பு ஏலியின் **Legal Son** என்ற அடிப்படையில் எழுதுகிறார். மத்தேயு சொன்னதுபோல யாக்கோபு யோசேப்பை பெற்றான் என்று லூக்கா எழுதவில்லை. ஆக, மத்தேயு எழுதிய வம்சாவழி பரம்பரைப்படியும், லூக்கா எழுதிய மரியாளின் வகையில் வரும் சட்டப்பரம்பரைப்படியும் இயேசு தாவீதின் குமாரனே என்று உலகிற்கு தேவன் குறை சொல்ல முடியாமல் எடுத்துக் காட்டவே இப்படியாய் எழுத வைத்தார்.

89. பிசாசால் அற்புதம் செய்யமுடியுமா? எப்படி?

கீழ்க்காணும் வேத வசனங்களைக் கவனமாய் வாசியுங்கள்:

பதில்:– 1. அவைகள் அற்புதங்களைச் செய்கிற பிசாசின் ஆவிகள் வெளி. 16:14.

2. கள்ளக் கிறிஸ்துக்களும், கள்ளத் தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாக பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள் மத்.24:24.

மேற்கண்ட வசனங்களிலிருந்து பிசாசுகள் கூட அற்புதம் செய்ய முடியும் என்று தெளிவாக அறிகிறோம். ஒரு சம்பவத்தைக் கவனியுங்கள். நாங்கள் ஜெபம் பண்ணுகிற இடத்துக்குப் போகையில் குறிசொல்ல ஏவுகிற ஆவியைக் கொண்டிருந்து, குறி சொல்கிறதினால் தன் எஜமான்களுக்கு மிகுந்த ஆதாயத்தை உண்டாக்கின. ஒரு பெண் எங்களுக்கு எதிர்பட்டாள் அவள் பவுலையும் எங்களையும் பின்தொடர்ந்து வந்து இந்த மனுஷர் உன்னதமான தேவனுடைய் ஊழியக்காரர், இரட்சிப்பின் வழியை நமக்கு அறிவிக்கிறவர்கள்" என்று சத்தமிட்டாள். இப்படி அநேக நாள் செய்து வந்தாள். பவுல் சினம் கொண்டு திரும்பிப் பார்த்து நீ இவளைவிட்டு புறப்படும்படி இயேசு

கிறிஸ்துவின் நாமத்திலே உனக்கு கட்டளையிடுகிறேன் என்று அந்த ஆவியுடனே சொன்னான். அந்நேரமே அது புறப்பட்டு போயிற்று (அப்.16:16–18). குறிசொல்லும் ஆவியை விரட்டியவுடன் போய்விட்டது. குறி சொல்லு தலை தொழிலாகக் கொண்டிருப்பவர்கள் ஒரு ஆவியால் பிடிக்கப்பட்டிருக் கிறார்கள். இதிலிருந்து உண்மையாகவே தெய்வ ஆவியல்ல. ஆனால் அது கூறுவதை மக்கள் தெய்வவாக்காக எடுக்க காரணம். அது உண்மையாக இருப்பதால்தான். இதிலிருந்து பிசாசுக்கு கூட அற்புதம் செய்யும் வல்லமை உண்டு என்பதை அறிகிறோம். மனிதன், கடவுள் இல்லை என்று கூறுகிறான். காரணம், பிசாசு, நாத்திகனுடைய மனக்கண்களை குருடாக்கி வைத்திருக்கிறான் (2 கொரி.4:4). ஆனால் கடவுள் உண்டு என்பது பிசாசுக்கு நன்றாகத் தெரியும் (யாக்.2:19). அவருடைய பெயர் 'இயேசு' என்றும் பிசாசுக்குத் தெரியும். எல்லா அதிகாரத்திற்கும் மேலான அதிகாரம் இயேசுவிடம் இருப்பதால்தான் அவருடைய நாமத்தில், "வெளியே போ" என்று கூறும்போது வெளியேறுகிறது. ஆதியில் சகல ஆராதனையையும், புகழையும், மகிமையையும் தேவன் பெற்றுக்கொண்டிருந்தபோது அந்த சுதந்திரத்தை தான் சுதந்தரிக்க, ஆராதனை தூதன் லூசிபர் விரும்பினான். அப்படி விரும்பிய உடனேயே விழுந்து பிசாசானான் (ஏசா.14). அன்று முதல் தன்னை வணங்கும் மக்களுடைய எண்ணிக்கையை உயர்த்துவதிலேயே சாத்தான் குறியாயிருக்கிறான். அதில் வெற்றியடைய இந்தியர்கள் பெரிதும் உதவினார்கள். ஆங்காங்கே தெய்வங்கள் என்ற பெயரில் மக்களை ஏமாற்றி ஆராதனையை உறிஞ்சுகிறான். அப்பாவி மக்கள், சாத்தான் என்று தெரியாமல் தங்களை அவனுக்கு அடிமையாக்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இன்று லட்சக்கணக்கான மக்கள் அவற்றை பிசாசுகள் என்று அடையாளம் கண்டுகொண்டே இருக்கிறார்கள். பிசாசின் அஸ்திபாரங்கள் நடுங்குகின்றன. பூசாரிகளும், மந்திரவாதிகளும், தர்மகர்த்தாக்களும் மீட்கப்படுகிறார்கள். இந்த ஊற்று நீரை யாரும் அடைக்கமுடியாது. தடுக்கமுடியாது. ஒரு பெண் இந்தியாவில் பேய் பிடித்து ஆடுகிறதென்றால், ஒரு கிறிஸ்தவ ஊழியர், "நீ யார் என்று கேட்டால், அவள் வழிபட்ட தெய்வத்தின் பெயரையே சொல்கிறது. அவள் ஏன் அந்த பேயை வழிபட்டாள்? அந்த பேய் அற்புதம் செய்த ஒரே காரணம்தான். மோசேயும் ஆரோனும் பார்வோனிடத்தில் போய் கர்த்தர் தங்களுக்கு கட்டளை இட்டபடி செய்தார்கள். ஆரோன் பார்வோனுக்கு முன்பாகவும், அவன் ஊழியக் காரனுக்கு முன்பாகவும் தன் கோலைப்போட்டான். அது சர்ப்பமாயிற்று.

அப்பொழுது பார்வோன், சாஸ்திரிகளையும், சூனியக்காரரையும் அழைப்பித்தான். எகிப்தின் மந்திரவாதிகளும் தங்கள் மந்திரவித்தையினால் அப்படி செய்தார்கள். அவர்கள் ஒவ்வொருவனாக தன் கோலை போட்டபோது, அவைகள் சர்ப்பங்களாயின. ஆரோனுடைய கோலோ அவர்களுடைய கோல்களை விழுங்கிற்று" (யாத்.7:10–12). மேற்கண்ட சம்பவத்தினின்று பிசாசுக்கு அற்புதங்கள் செய்யும் வல்லமை உண்டு என்றும் அதன் வல்லமையைவிட ஆண்டவருக்கு அதிக வல்லமை உண்டு என்றும் அறிகிறோம். எனவே இதை யோசித்து விழிப்புணர்வடையுங்கள். பிசாசு அற்புதம் செய்தாலும் முடிவில் அவனை நம்பும் மனிதனை நரகத்திற்கே இழுத்துச் செல்கிறான்.

90. அப்.1:13ல் யூதா யாக்கோபின் சகோதரன் என தமிழிலும், SEOFIELD பைபிளில் யூதா யாக்கோபின் மகன் எனவும் எழுதப்பட்டுள்ளது ஏன்?

பதில்:– கிறிஸ்தவ சபைகள் அனைத்தும் ஒப்புக்கொண்டது KING JAMES VERSION மட்டுமே. அதிலே யூதா, யாக்கோபின் சகோதரன் என்று உள்ளது. அதற்கு ஆதாரமாய் (லூக்.6:16)லும் யூதா, யாக்கோபின் சகோதரன் என்று உள்ளது. தமிழிலும் (அப்.1:13) மற்றும் (லூக்.6:16)லும் யாக்கோபின் சகோதரன் என்றே உள்ளது. ஆனால் SEOFIELD பைபிளில் இரண்டு வசனத்திலும் யாக்கோபின் மகன் என்று எழுதப்பட்டுள்ளது. நாம் ஏற்றுக்கொள்வது நல்லது.

91. வரப்போகும் அந்தி கிறிஸ்து 'மைத்ரேயா' என்ற பெயரில் தான் தன்னை வெளிப்படுத்துவானாமே, உண்மையா?

பதில்: சமீபகாலமாக தங்களைக் கடைசிகால அவதாரங்கள் என்று சொல்லிக்கொண்ட, கொள்கிறவர்களில் பலரும் தங்களை 'மைத்ரேயா' என்று சொல்லிக்கொள்வது உண்மைதான். தற்காலத்தில் தமிழ்நாட்டில் பரபரப்பாக பேசப்படும் கல்கி இயக்கத்தின் ஸ்தாபகர் கூட தன்னை 'மைத்ரேயா' என்று கூறிக்கொள்ளுகிறதை அறிந்திருப்பீர்கள். 1982ம் ஆண்டு 'கிறிஸ்து இங்கே இருக்கிறார்' என்று உலகப்பத்திரிக்கை எல்லாவற்றிலும் (நம் இந்தியன் எக்ஸ்பிரஸ் உள்பட) விளம்பரம் தந்து கலக்கின பெஞ்சமின் கிரிம், இன்னும் சில நாட்களில் தன்னை வெளிப்படுத்தப்போகும்

கிறிஸ்துவின் பெயர் 'மைத்ரேயா' என்றார். இந்த 'மைத்ரேயா' என்பது ஏதோ புதிதாக தோன்றிய பெயரல்ல. என்சைக்ளோபீடியா பிரிட்டானிகாவில் 6,15 ஆகிய பாகங்களில் இப்பெயர் காணப்படுகிறது. இது புத்த மதம் சார்ந்த பெயர் உலகம் சீரழியும் கடைசி காலத்தில் போதி சத்துவர் மீண்டும் அவதாரமெடுத்து புதிய ஆட்சியமைத்து உலகை செம்மையாக்குவார் என்கிறார்கள். இந்த அவதாரத்தின் பெயர்தான் மைத்ரேயா. இது திபெத்திய மொழியில் 'மைத்ரி' என்றும் சீன மொழியில் 'மி–லோ–போ' என்னும் ஜப்பானிய மொழியில் 'மிரோகு' என்றும் மங்கோலிய மொழியில் 'மித்தரீ' என்றும் சொல்லப்படுகிறது. பொதுவாகவே கடைசிகாலம் பற்றியும், கடைசிகால அவதாரம் பற்றியும் எல்லா உலக மதங்களுமே கூறுகின்றன. இந்துமதம் 'கல்கி' அவதாரம் பற்றியும் புத்தமதம் 'மைத்ரேயா' பற்றியும் கூறுகின்றன. எனவே இப்போது தங்களை கடைசிகால அவதாரங்கள் என்று கூறிக்கொள்கிறவர்கள் எல்லா மதத்தாரும் தன்னை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற நோக்கத்தில் நானே 'கல்கி' நானே 'கிறிஸ்து' நானே 'மைத்ரேயா' என்று கூறிக்கொள்கின்றனர். இதுபோலத்தான் அந்தி கிறிஸ்து வந்தாலும் ஒரு குறிப்பிட்ட மதத்திலுள்ள பெயரை மட்டும் வைத்துக்கொள்ளமாட்டான். தவிரவும் இவையெல்லாம் பட்டப்பெயர்கள் தான். எனவே வரப்போகும் அந்திகிறிஸ்து தனிப்பட்ட ஏதாவது பெயரில் பிறந்து பிறகு தன்னை 'கல்கி' என்று அழைத்துக்கொள்வான்.

92. இயேசுவின் இரத்தம் ஜெயம் என்று அநேகர் பிரசங்கிக்கிறார்கள். இயேசுவின் நாமத்திலேதானே ஜெயம் ! ஏன் இன்னும் இப்படி பிரசங்கம்?

பதில்:– இயேசுவின் நாமத்திலே ஜெயம் கிடைப்பது அவருடைய இரத்தத்தின் மகிமையால்தான். பஸ்கா ஆட்டின் நாமம் இயேசுதான். ஆனால் இந்த ஆட்டின் இரத்தம் பூசப்பட்ட வீடுகளை சங்கார தூதன் நெருங்கவில்லை (யாத்.12:13,23) இதுதான் ஜெயம்.

மாத்திரமல்ல, (வெளி 12:11)ன்படி இயேசு என்ற நாமமுடையவரின் விலையேறப்பெற்ற இரத்தத்தினால்தான் ஜெயமுண்டு. நம் எல்லோருடைய பாவத்திலிருந்தும் வெற்றி கொடுப்பது இயேசுவின் இரத்தம்தான் (மத்.26:28).

93. போதகர்கள் விமர்சனத்துக்கு அப்பாற்பட்டவர்களா? ஊழியக்காரர் களை விமர்சிக்கலாமா? பிரசங்கிமார்களை விமர்சிக்கலாமா? பிரசங்கங்களை அப்படியே ஏற்றுக் கொள்ளலாமா?

பதில்: எப்போதுமே கர்த்தரால் அபிஷேகம் செய்யப்பட்ட போதகர்களின் வார்த்தைகளை அப்படியே கர்த்தரின் செயல்பாடுகளாக விமர்சனத்துக்கு அப்பாற்பட்டவைகளாகக் கருதுவது கிறிஸ்தவர்களின் எண்ணமாக இருக்கிறது. வேதத்தின்படி பார்த்தோமானால் (1 கொரி.14:29)ன்படி தீர்க்கர்கள் சொல்லுவதை நிதானிக்குமாறு கூறப்பட்டுள்ளது. (யூதா 1:3) வசனத்தின்படி என்னதான் புகழ்பெற்ற போதகர்கள் வேதத்தின்படி எழுதப்பட்டுள்ள வார்த்தைக்கு விரோதமாக பேசினால் விசுவாசத்திற்காக அதை எதிர்த்து தைரியமாக போராட வேண்டுமென்பது பரிசுத்தவான் களாகிய விசுவாசிகளுக்கு விதிக்கப்பட்டதாயிருக்கிறது. "ஒரே ஆத்துமா வினாலே சுவிசேஷத்தின் விசுவாசத்திற்காகக் கூடப் போராடி எதிர்க் கிறவர்களால் ஒன்றிலும் மருளாதிருக்க வேண்டுமென்று பவுல் பிலிப்பியருக்கு எச்சரிக்கிறார்" (பிலி.1:27,28). கலாத்தியருக்கு சத்தியத்தைப் புரட்டுகிறவன் சபிக்கப்பட்டவனென்று பவுல் நினைவு படுத்துகிறார்.

பொதுவாகப் பார்த்தால் புதிய ஏற்பாட்டின்படி பெரும்பகுதி வேதத்தைத் தவறாகப் போதிப்பவர்களை எச்சரிப்பதற்காகவே எழுதப்பட்டுள்ளது. கொரிந்தியருக்கு எழுதப்பட்ட இரண்டாம் நிரூபமானது பவுலைப் போலி அப்போஸ்தலர் என்றும் வருமானத்தை தவறாக பவுல் பயன்படுத்துகிறாரென வேத எதிர்ப்பாளர்கள் கூறுவதை மறுத்து பவுல் அடியாரால் எழுதப்பட்டதைக் காணலாம். யூத கோத்திரத்தாரால் வைராக்கியமாகக் கடைபிடிக்கப்பட்ட பழைய ஏற்பாட்டின் பரிமாணங்களான விருத்தசேதனம் போன்றவை விசுவாசிகளுக்கு விதிக்கப்பட்ட பிரமாணம் என்பதைக் கலாத்தியருக்கு எழுதிய நிரூபத்தில் பவுல் வன்மையாகக் கண்டிக்கிறார்.

கொலோசேயர் நிரூபமோவெனில் மனித வாழ்வியல் நடைமுறைகளை வேதக் கருத்துக்களோடு கலந்து வாழும் ஒரு சமரச சன்மார்க்கம் என்று உபதேசிப்பவர்களை மிகவும் கடுமையாக சாடுகிறது.

பிரபஞ்சமானது முழுவதுமாக கெட்டுப் போனதென்றும் சரீரம் மிகுந்த பிரயாசப்படுகிறது என்பவைகளை பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும்போது வன்மையாகக் கண்டிக்கிறார். இதேபோன்று பொய்யைப் பிரசங்கிப்பவர்களை

பேதுரு இரண்டாம் நிரூபத்தில் கண்டிக்கிறார். கிறிஸ்துவின் மனித நேயத்தை மறுப்பவர்களை 1 யோவான் கண்டிக்கிறது. இயேசுகிறிஸ்துவின் அளவற்ற கிருபையானது பாவ வாழ்க்கை வாழ அனுமதிக்கும் ஒரு உரிமம் என்று சொல்லும் உபதேசிமார்களை நேரடியாகக் கண்டித்து இதுபோன்ற தவறான வழியில் போதிப்பவர்களை ஆதியில் இருந்தே கண்டித்துணர்த்தும் சம்பவங்களை வேதம் உரைத்தபோதிலும் இந்த இருபதாம் நூற்றாண்டின் இப்போதைய பிரசங்கிமார்கள் வேதத்தைத் தவறாக உபதேசித்தாலும் விமர்சனத்துக்கும், கண்டித்தலுக்கும் அப்பாற்பட்டவர்கள் என்பதை இன்னும் நம்புகிறீர்களா?

இப்படிப்பட்ட வேதப்புரட்சி செய்பவர்களை பின்பற்றும் கூட்டத்தார் (சங்கீதம் 105:15) ஆம் வசனத்தைத் தங்களுக்கு ஆதாரமாக எப்போதும் கூறிக்கொள்வார்கள். அதாவது அபிஷேகம் பண்ணப்பட்டவர்களைத் தொடாமலும் இருங்கள் என்பதையே அவர்கள் வாதமாக வைப்பார்கள். இந்த வேதப்பகுதியானது தீர்க்கர்களை உடலளவில் தொடாதிருங்கள் என்பதைப் பற்றியது தானே தவிர அவர்கள் வார்த்தையைப் பற்றியல்ல. தாவீதும் கூட சவுலின் செயல்பாடுகளைத்தான் விமர்சித்தானேயன்றி சவுலை சரீரப் பிரகாரமாக வருத்தப்படுத்துவதை அவன் நோக்கமாகக் கொண்டிருக்க வில்லை.

பரிசேயர்களைக்கூட இயேசு பலமுறை குறை கூறியுள்ளார் என்பதை நினைவில் கொள்ளுங்கள் (மத்.15:1–14) மற்றும் (யோவா.9:40,41) இதற்குச் சான்று ஆகும்.

மத்தேயு 23ல் கூட இயேசு பரிசேயர்களின் மாய்மாலங்களை எவ்வாறு தைரியமாக வெளிப்படுத்துகிறார் பாருங்கள்.

பொய்யை அம்பலப்படுத்தி வெளியரங்கமாக்குவதற்கு கிறிஸ்து இயேசுவே நமக்கு முன்மாதிரியாக வைக்கப்படுகிறார்.

இத்தகைய தவறான போதனைகள் வெளிப்படுத்தப்படும்போது சம்பந்தப்பட்ட போதகர்கள் இதனை சுமுகமாக எதிர்கொண்டு நிதானித்து அறியவேண்டும்.

நாத்தான் போன்ற தீர்க்கதரிசிகூட தவறுகள் செய்யக்கூடும். தாவீது அரசன் ஆலயம் கட்டலாம். நாத்தான் தீர்க்கதரிசி உரைத்தபோது, அன்றிரவே கர்த்தர் தாவீதுக்கு தரிசனமாகி அது அவரது சித்தமல்ல என்று

உரைத்ததை (2 சாமுவேல்.1:17) வரையிலான வசனங்களைத் தியானிக்கும் போது அறியலாம். இதனை அறிந்த நாத்தானும் தன்னைத் திருத்திக் கொண்டான்.

அந்தப்படியே சாதாரண தம்பதிகளான ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாவும் கர்த்தரின் வழியை சுட்டிக்காட்டியபோது அப்போதைய புகழ்வாய்ந்த போதகரான அப்பல்லோ தன்னைத் திருத்தியதை (அப்.18:18,28)ல் வாசிக்கலாம்.

ஆனாலும் பரிசுத்த பவுல் பேதுருவுக்கு கண்டித்து உணர்த்தும் செய்தி யாதெனில் பேதுரு யூதமதத்தவரல்லாதவர்களுக்கு சுவிசேஷம் பிரசங்கிக்கப் படலாகாது என்பதை தெளிவாக மறுத்து கலாத்தியருக்கு எழுதும்போது குறிப்பிடுகிறார். இதனை (கலா.2:11) கூறுகிறது. இதன் பின்பு பேதுரு யூதரல்லாதவர்களுக்கும் சுவிசேஷம் கூற ஒப்புக்கொள்ளுகிறார்.

இவ்வாறாக ஒரு தீர்க்கதரிசியின் வார்த்தைகள் எவ்வாறு நிதானிக்கப் படலாம், தவறு உண்டு என்று காணப்படுமாயின் அதனையும் கண்டித்து உணர்த்தலாம் என்பதை வேதத்தின் வெளிச்சம் கொண்டு கிறிஸ்துவின் சரீரமாகிய சபையின் நன்மைக்காக ஒருவருக்கொருவர் செய்யும் இம்மாதிரியான ஆரோக்கியமான மறுப்புகளை ஏற்பது அவசியமும் அவசரமுமாக உள்ளது.

94. தோமா இந்தியாவிற்கு வந்து ஊழியம் செய்ததாக கூறுகிறார்கள். ஆனால் வேதத்தில் அவர் உலக ஆசை கொண்டு பிரிந்து போய்விட்டதாகக் கூறப்பட்டுள்ளது!

பதில்: வேதத்தைப் படிக்கும்போது கொஞ்சம் கவனமாக படிக்க வேண்டும். இந்தியாவிற்கு வந்தவர் தோமா (Thomas) பின்மாறிப் போனவர் தேமா (Demas) துணையெழுத்தை கவனிக்கவும்: இந்த தேமா (Demas) பவுல் முதன்முறையாக காவலிலிருந்தபோது அவருக்கு துணையாயிருந்தவர். (கொலோ.4:14, பிலே.24). ஆனால் பின்பு இவர் பின்வாங்கிப் போய் விட்டதாகக் கூறப்பட்டுள்ளது (2 தீமோ.4:10).

95. ஓசியா 3:4ல் சொல்லப்பட்டுள்ள தேராயீம் என்பது என்ன?

பதில்: 'தேராயீம்' என்ற வார்த்தை தமிழில் "சுரூபங்கள்" என்று திருப்பப் பட்டுள்ளது. (ஓசி.3:4)ல் மட்டும் தேராபீம் என்றே குறிக்கப்பட்டுள்ளது. மனித

ரூபத்திலும், மிருக ரூபங்களிலும் செய்யப்பட்ட சிறு சிறு சிலைகள் அக்கால வீடுகளில் பாதுகாவல் தெய்வங்கள் என்ற பெயரில் வைத்து வணங்கப் பட்டன. இந்த சொரூபங்களின் எபிரேயே பதம்தான் தேராபீம் (TERAPHIM).

96. கர்த்தர் ஆபேலின் காணிக்கையை அங்கீகரித்தார். காயீனின் காணிக்கையை அங்கீகரிக்கவில்லை? ஆதி.4:4-5.

பதில்: காயீனின் காணிக்கையை தேவன் அங்கீகரிக்காததற்கு காரணம் என்ன? சில பெந்தெகொஸ்தெ பாஸ்டர்மார்கள் கூட இதற்கான காரணத்தை தப்பிதமாய் வியாக்கியானம் பண்ணுகிறார்கள். அவர்கள் சொல்லும் காரணம் என்னவென்றால் காயீன் இரத்தம் சிந்துகிற பலியை செலுத்த வில்லை என்பதே. அது சரியான காரணமே அல்ல. ஆபேலும், காயீனும் ஆண்டவருக்கு செலுத்தினது காணிக்கையே தவிர பலி அல்ல என்பதை நாம் முதலில் அறியவேண்டும். (4:3–4) வேதாகமத்தில் ஆண்டவருக்கு பலி செலுத்தின முதல் மனுஷன் செலுத்தியது காணிக்கையை தவிர பலி அல்ல. அப்படியானால் (எபி.11:4)ல் பலி என்றல்லவா வருகிறது எனக் கேட்போரும் உண்டு. ஆங்கிலத்தில் offering என்றுதான் எழுதப்பட்டுள்ளது. சரி உங்கள் வாதத்தின்படியே வைத்துக்கொண்டாலும் காயீனின் பலி என்றல்லவா அதே வசனத்தில் கூறப்பட்டுள்ளது. அப்படியானால் காயீன் செலுத்தியது பலியா? இல்லையே ஆதாமுக்கும் ஏவாளுக்கும் தோல் உடைகளை உண்டு பண்ணினார். அந்த தோல் உடை அடிக்கப்பட்ட ஒரு மிருகத்தின் தோல் என்பதாக (ஆதி.3:21) கூறுகிறது. ஆனால் அந்த மிருகம் பலி செலுத்து வதற்காய் அடிக்கப்பட்டது என்பதாக எழுதப்படவில்லை. இரத்தம் சிந்துதலில்லாமல் பாவமன்னிப்பு இல்லையே என்பதாக சிலர் இந்த இடத்தில் வாதிடக் கூடும். சரி நானும் அதை ஒப்புக்கொள்ளுகிறேன். அப்படியானால் பாவ மன்னிப்பைப்பெற்ற அவர்களை ஆண்டவர் தோட்டத்தை விட்டு வெளியே ஏன் துரத்த வேண்டும்? சாபத்தையும் போட்டல்லவா துரத்துகிறார். ஆக பாவமன்னிப்புக்காய் அல்ல. தோல் உடையை உண்டு பண்ணவே மிருகம் அங்கே அடிக்கப்பட்டது. உலகத்தோற்றத்திற்கு முன்பாகவே அடிக்கப் பட்ட தேவாட்டுக்குட்டி ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு முன் அடையாளமான ஒன்று என்பதை இரத்தம் சிந்துதலாகிய பலியை செலுத்த தவறினான் என்பதை ஏற்றுக்கொள்ள இயலாது. ஆபேல் ஆட்டு மந்தைகளை உடையவனாய் இருந்தான். காயீனோ பயிர் தொழில் செய்கிறவனாய்

இருந்தான். இவ்விருவரும் தங்கள் தங்களுக்குரியவைகளையே அதாவது தங்கள் கைகளின் பிரயாசம்மூலம் சவதரித்ததையே ஆண்டவருக்கு காணிக்கையாகக் கொண்டு வருகிறார்கள். ஆண்டவரும் அதைத்தான் அவர்களிடம் எதிர்பார்த்தார். ஆனால் அங்கே நடைபெற்ற தப்பிதம் என்னவென்றால் ஆபேல் மந்தையின் தலையீற்றையும் கொழுத்தவைகளை யும் கர்த்தருக்கு காணிக்கையாக செலுத்தினான். ஆனால் காயீன் செலுத்திய காணிக்கையை முதற்பலன் என்றோ நல்லவைகள் என்றோ எழுதப்படவில்லை. தேவனுடைய அங்கீகரிப்புக்கு அவன் அபாத்திரவானாய் தீர்ந்தான். அது மாத்திரமல்ல. ஆடுமாடுகளையும் மந்தைகளையும் உடையவனுக்குரிய பிரமாணம் (யாத்.13:12)லும் பயிர் மற்றும் கனி வர்க்கங்களை பயிரிடுகிறவனுக்குரிய பிரமாணம் (யாத்.23:19)லும் திட்டவட்டமாய் தெளிவுபடுத்தப்படுகிறது. அதன்படி தன்னிடம் இல்லாத ஒன்றை கடனாக அல்லது இலவசமாக வேறொருவனிடம் கேட்டு வாங்கி அதை தேவனுக்கு பலி செலுத்துவதோ, காணிக்கையாக வைப்பதோ மனப்பூர்வமாய் செய்யப்படுகிற ஒன்றாய் கருதப்படமாட்டாது. ஆண்டவரும் அதை ஒருபோதும் விரும்புகிறதில்லை. இதை (2 கொரி.8:12) அருமையாய் விளக்கிக் காட்டுகிறது. ஒருவனுக்கு மனவிருப்பமிருந்தால் தன்னிடம் இல்லாததை அல்ல. அவனிடம் உள்ளதையே மனப்பூர்வமாய் செலுத்தக் கடவன். அது தேவனால் அங்கீகரிக்கப்படும். ஆக முதற்பலன், கொழுமை யானவைகள் என்பது தான் ஆண்டவருக்கு பிரதானமானதே தவிர கழித்துப் போட்டவைகளை இரண்டாம் தரம், மூன்றாம் தரம் என்பவைகளை அவர் ஒருபோதும் விரும்புகிறவர் அல்ல.

97. மரித்தவர்களின் கல்லறையைப் பிரதிஷ்டை பண்ணுவதும் கல்லறையில் மாலை போடுவதும், அங்குபோய் ஜெபம் பண்ணுவதும் கர்த்தர் விரும்பும் காரியமா?

பதில்: "சகல ஜீவாத்துமாக்களுக்கும் குறிக்கப்பட்ட தாபரமாகிய மரணம்" (யோபு 30:23) என்று பார்க்கிறோம். "மரித்தவர்களும் மவுனத்தில் இறங்குகிற அனைவரும் கர்த்தரைத் துதியார்கள்" (சங்.115:17) என்று வேதம் சொல்லுகிறது. மேலும், "மரித்தவர்களுக்கு அதிசயங்களைச் செய்வீரோ? செத்துப்போன வீரர் எழுந்து உம்மை துதிப்பார்களோ?" (சங்.88:10) என்று பார்க்கிறோம். [Do you work wonders for the dead? Do the shades rise up to praise you? -NRSV] "பாதாளம் உம்மைத் துதியாது. மரணம் உம்மைப்

போற்றாது; குழியில் இறங்குகிறவர்கள் உம்முடைய சத்தியத்தை தியானிப்பதில்லை" (ஏசா.38:18).

(1) "மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள்; இனி அவர்களுக்கு ஒரு பலனுமில்லை, அவர்கள் பேர்முதலாய் மறக்கப்பட்டிருக்கிறது" (பிர.9:5). [**The dead know nothing; They have no more reward, and even the memary of them is lost-NRSV].**

(2) "அவர்கள் சிநேகமும், அவர்கள் பகையும், அவர்கள் பொறாமையும் எல்லாம் ஒழிந்து போயிற்று" (பிர.9:6). [**Their love and their hate and their envy have already Perished-NRSV].**

(3) "சூரியனுக்குக் கீழே செய்யப்படுகிறதொன்றிலும் அவர்களுக்கு இனி என்றைக்கும் பங்கில்லை" (பிர.9:6). **[Never again will they have any share in all that happens under the sun -NRSV].**

பாரம்பரிய முறைப்படி, கிறிஸ்தவர்களில் சிலர் கல்லறை பிரதிஷ்டை என்றும் சொல்லுவதைப் பார்க்கிறோம். மரித்த நாட்களில், ஆண்டுதோறும் கல்லறைக்கு மாலைபோடுவதும், அங்கு போய் ஜெபிப்பதும், மெழுகுவர்த்தி ஏற்றி வைப்பதும் கர்த்தர் அருவருக்கிற காரியம். அநேக ஆண்டுகளுக்கு முன்பு, திருமணமாகாத வாலிப மகள் ஒருவர் கல்லறை வழியாக போகப் பயப்படுவார்களாம். ஒருநாள் அவரோடு சென்ற முதியவர், 'பயப்படாதே மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள்' என்று சொன்னாராம். அன்றிலிருந்து மரித்தவர்களைக் குறித்த பயம் நீங்கினதாம். அன்பானவர்களே, நாம் சிந்திக்கவேண்டும். நாம் செய்கிற காரியங்கள் நற்பலனை தருகிறதா? இல்லையென்றால் வேதனையை உண்டாக்குகிறதா? என்று சிந்திக்க வேண்டும்.

சிலர் மனபாரம் உண்டாகும்போது, தங்களுக்கு அருமையானவர்களின் கல்லறையில் போய், என்னைத் தனியாக விட்டுவிட்டுப் போய்விட்டீர்களே என்று சொல்லுகிறார்கள். இதில் என்ன பிரயோஜனம்? இவர்கள் சொல்லுவதை மரித்தவர்கள் கேட்பார்களா? சிந்திப்போம். இவைகளெல்லாம் நீக்கப்படவேண்டும். ஆவிக்குரிய வளர்ச்சிக்கு இவைகள் தடையாகி விடுகின்றன. வேதத்தின் வெளிச்சத்தில் சிந்திப்போமாக!

98. ஜாதி வித்தியாசத்தை வேதாகமம் போதிக்கவில்லையா?

பதில்: இல்லை இல்லைவே இல்லை. அப்படியானால் இஸ்ரவேலர் என்ற குறிப்பிட்ட மக்களை நேசித்தும் மற்ற ஜாதிகளை புறஜாதிகள் என்று

புறக்கணித்தும் வேதாகமம் கூறுவதாக தோன்றக் காரணமென்னவோ?

(1) மனிதருக்குள்ளே தோற்றத்தில் வித்தியாசமிருக்கும்படி தேவன் படைக்கிறது உண்மையே. ஆனால் தோற்ற வித்தியாசங்கள் ஜாதி வித்தியாசங்களாக உருவெடுத்தது, மனிதன் உண்டாக்கிக் கொண்டதேயன்றி வேறல்ல. அதாவது ஜாதிகளை இறைவன் உண்டாக்கினார். ஜாதி வித்தியாசத்தை மனிதன்தான் உண்டாக்கிக்கொள்கிறான்!

(2) ஜாதி வித்தியாசத்தை அல்ல ஆண் பெண் என்ற வித்தியாசத்தையே இறைவன் உண்டாக்கியுள்ளார். ஆனால் அவர்களுக்குள்ளும் ஏற்றத் தாழ்வுகளை அவர் விரும்பவில்லை என்ற உயரியக் கொள்கையை வேதம் போதிக்கின்றது. உலகப்பழமொழி: ஜாதி இரண்டொழிய வேறில்லை (ஆண்–பெண்).

வேத பொன்மொழி: கிறிஸ்துவுக்குள் ஆண் என்றுமில்லை பெண் என்றுமில்லை (கலா.3:28).

(3) யூதர் என்றும் கிரேக்கர் என்றும் மக்கள் தங்களை பிரித்துக் கொள்கிறார்கள். ஆனால் இச்செயலை வேதம் கண்டிக்கிறது. கிறிஸ்துவுக்குள் யூதனென்றும் இல்லை கிரேக்கனென்றும் இல்லை. (கலாத்.3:28).

(4) வேதாகமத்தின் படியேயும் இரண்டு ஜாதிகள் உண்டு! அவை நீதிமான்–துன்மார்க்கன் என்பன. ஆம் நீதியுள்ள புனிதர் உயர்ந்த ஜாதி, பாவம் நிறைந்த தீயோர் மட்டமான ஜாதி.

ஆனால் இவ்வித்தியாசத்தைகூட இயேசு விரும்பாமல் பாவிகளை மனந்திரும்ப அழைத்து அவர்கள் தண்டனையை தான் ஏற்றுக்கொண்டு அவர்களையும் நீதிமானாக்கி இரண்டுபேரையும் ஒரே ஜாதியாக்கிடவே பூமிக்கு வந்தார் அதனை செய்தும் முடித்தார்.

நீதிமான்களையல்ல பாவிகளையே அழைக்க வந்தேன் (மாற்.2:17).

99. யோனாவை மீன் விழுங்கியது, பிறகு கக்கினது, நம்ப கூடியதா?

பதில்: 19–ஆம் நூற்றாண்டில் சர்ஹென்றிலெயார்டு என்ற தொல்பொருள் ஆராய்ச்சியாளர் 35–40 அடி ஆழத்திற்கடியில் நினிவேயின் இடிபாடுகளைக் கண்டுபிடித்து இவைகள் பரிசுத்த வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் நினிவே

நகர்தான் என்று ஊர்ஜிதப்படுத்தும் வரைக்கும் அப்படி ஒரு நகரமே இருந்ததில்லை என்று வாதாடினர்.

ஒரு மனிதன் மீன் வயிற்றில் மூன்று நாள் இருந்து, உயிரோடே வெளியே வந்திருக்க முடியுமா?

பரிசுத்த வேதாகமத்தில் யோனாவை விழுங்கும்படி ஒரு பெரிய மீனைக் கர்த்தர் ஆயத்தப்படுத்தியிருந்தார் என்று காண்கிறோம். ஆண்டவர் ஆயத்தப்படுத்தின மீன் வகை ஏதாவது இருக்குமா என்று ஆராய்ச்சியாளர் தேடினார். கடைசியில் கண்டு பிடித்தனர். இந்தவித மிருகம் திமிங்கல–ஷார்க் என்று அழைக்கப்படுகிறது எழுபது அடி நீளம் வரையுள்ள இவ்வகை மீன்கள் மனிதனை முழுவதும் சேதமில்லாமல் விழுங்கக்கூடியவை.

இப்படிப்பட்ட மீன் ஒன்று ஒரு சமயம் இங்கிலாந்து வளைகுடாவில் மீனவர்களால் கண்டுபிடிக்கப்பட்டு அதைப் பிடிக்கப் பிரயாசம் எடுக்கும் போது ஒரு மீனவர் தவறி கடலுக்குள் விழுந்துவிட்டார். உடனே அந்த மீன் அவனை விழுங்கிவிட்டு கடலுக்குள் மறைந்துவிட்டது. மற்றமீனவர்கள் 48மணி நேரங்களுக்குப்பின் வடகடலில் அதைக் கண்டுபிடித்து சுட்டு அம்மீனை கரைக்கு இழுத்து வந்து தங்கள் சிநேகிதனுக்கு ஒரு கிறிஸ்தவ அடக்கம் செய்ய வேண்டும் என்று எண்ணி அதன் வயிற்றைக் கிழித்து பார்த்தபொழுது அவனுடைய உடல் ஒரு சேதமில்லாமல் இருந்ததோடு அவனுக்கு உயிரும் இருப்பதாகத் தெரிந்தது.

உடனே அவனை அவசரமாக மருத்துவமனைக்குக் கொண்டு போனபோது, அவன் அதிர்ச்சியில்தான் இருக்கிறான் என்று முதலுதவி சிகிச்சை கொடுத்து அனுப்பிவிட்டார்கள். அவனை சில நாட்கள் லண்டன் பொருட்காட்சி சாலையில் இருபதாவது நூற்றாண்டு யோனா என்று வர்ணித்து அவனைப் பார்ப்பதற்கு ஒரு ஷிலிங் கட்டணம் வசூலித்தனர் களாம். வேதத்திற்கும், விஞ்ஞானத்திற்கும் ஒற்றுமை என்ற புத்தகத்தை எழுதிய ஹாரி ரிம்மா என்ற அமெரிக்க எழுத்தாளர் சில ஆண்டுகள் கழித்து அந்த மனிதனை சந்தித்து அம்மனிதன் நல்ல சுகத்துடன் காணப்பட்ட தாகவும், ஆனால் அவன் சரீரத்தில் முடியே இல்லாமல் காணப்பட்டதாகவும், அவன் நிறம் மஞ்சள் கலந்த பழுப்பு நிறமாக மாறியிருந்ததாகவும் தன் புத்தகத்தில் கூறியிருக்கிறார்.

சாதாரண விபத்துமூலம் ஒரு மனிதன் ஒரு மீன் வயிற்றில் 2 நாள் உயிரோடு இருக்கக்கூடுமானால், கர்த்தர் ஆயத்தப்படுத்திய ஒரு பெரிய

மீனின் வயிற்றில் யோனா இரவு பகல் மூன்று நாள் உயிரோடு இருந்தது. முடியாத காரியமா?

அது மட்டுமல்ல சில மீன்கள் சாதாரணமாக 95அடி நீளமுள்ளவைகளாகவும் இருக்கின்றனவாம். இவைகள் திமிங்கல இனத்தைச் சேர்ந்தவைகளாதலால் இவைகளுக்குச் சுவாசிக்க செவிகள் கிடையாது. ஆனால் காற்றை சேமித்து வைத்துக்கொள்ள அவைகளின் தலையில் சில சமயம் 14 அடி நீளம். 7அடி அகலம், 7அடி உயரம் கொண்ட அறைகள் இருக்கின்றனவாம். இவ்வித திமிங்கலங்கள் தாங்கள் விழுங்க முடியாத பெரிய சாதானங்கள் வாய்க்குள் நுழைந்துவிட்டால் அவைகளை இந்த காற்று அறைகளுக்குள் தள்ளிவிட்டு அப்புறம் கரைப்பக்கம் வந்து அவைகளை துப்பி வெளியேற்றி விடுகின்றனவாம்.

686 கன அடி அளவுள்ள ஓர் அறையில் ஒரு மனிதன் மூன்று நாட்கள் ஒரு சேதமும் இல்லாமல் இருந்திருப்பதில் ஒரு வியப்புமில்லை காற்று அறையில் ஒரு மனிதன் நடமாடும் பொழுது அச்கூச்சம் தாங்கமுடியாமல் அந்த மீன் அவனை கரையில் கொண்டு வந்து கக்கியத்தில் வினோதம் ஒன்றுமில்லை.

100. இயேசுவுக்கு ஏன் இரண்டு வம்சவரலாறுகள் விவரம்?

பதில்:– நம் நாதர் இயேசு கிறிஸ்துவின் வம்சவரலாறு நம் வேதாகமத்தில் மத்.1:1–16. மற்றும், லூக்.3:23–38 ஆகிய மொத்தம் இரண்டு இடங்களில் காணப்படுகின்றன. இந்த இரண்டுமே மிகவும் தேவையானவைகள்.

மத்தேயு கூறும் வம்சவரலாற்றை எடுத்துக்கொள்ளுங்கள். இந்த வம்ச வரலாற்றில் தாவீதின் பின்வரும் (தாவீது வம்ச) ராஜாக்கள் பட்டியல் கொடுக்கப்படுகிறது. 2 சாமு.7:12ல், கர்த்தர் தாவீதினிடத்தில், உன் நாட்கள் நிறைவேறி, நீ உன் பிதாக்களோடே நித்திரை பண்ணும்போது, நான் உனக்குப்பின்பு உன் கர்ப்பப்பிறப்பாகிய உன் சந்ததியை எழும்பப்பண்ணி, அவன் ராஜ்யத்தை நிலைப்படுத்துவேன் என்று வாக்குத்தத்தம் கொடுக்கிறார். எனவே, இயேசு யூதாவின் ராஜாவாக இந்தத் தாவீதின் ராஜ வம்சத்தில் பிறக்கவேண்டும். மத்.1:11ல் இந்த ராஜ வம்சத்தில், வரும் (யோயாக்கீமின் குமாரனான) எகொனியாவுக்கு, யோயாக்கீன் (2 நாளா.36:9) மற்றும் கோனியா (எரே.22:24) என்ற மறுபெயர்கள் உண்டு என்று வேதத்திலிருந்து அறிகிறோம். இவனுடைய வம்சத்தில் யாரும் யூதாவின் சிங்காசனத்தில் வீற்றிருந்து ஆளப்போவதில்லை என்று

ஆண்டவரால், எரே.22:30ல் எகொனியா சபிக்கப்படுகிறான். எனவே இந்த வம்சத்தில் யூதாவின் நிலையான ராஜாவாகிய இயேசு பிறக்க முடியாது. இது ஒரு சிக்கல் (Paradox) அல்லவா? இந்தச் சிக்கலை அளவிடப்படாத ஞானம் உடைய நம் ஆண்டவர் எப்படி சரி செய்கிறார். (Solves) என்பதை அடுத்த வம்ச வரலாறு (லூக்.3:23–38) காட்டுகிறது.

இயேசுவின் தாயாகிய மரியாள் லூக்.3:23ல் வரும் ஏலியின் மகள். இதை எருசலேம் தல்மூது என்ற யூத நூல் நமக்குத் தெளிவாகக் கூறுகின்றது. ஏலி (லூக்.3:23) (ராஜாவாய் இராத) தாவீதின் ஒரு குமாரனான நாத்தான் (2 சாமு.5:14) வம்சத்தில் பிறப்பவன். யூதர்களின் மத்தியில் மருமகனை, மகனாகக் கொள்ளும் வழக்கம் இருந்தது. இந்த வழக்கத்தினால், மரியாளின் கணவனான யோசேப்பு ஏலியின் குமாரன் ஆகிறான். நம் நாட்டில் தத்துப் பிள்ளைகளுக்கு சட்டப்படி, தாய் தகப்பன்மாராக தத்தெடுப்பவர்களே ஆகிவிடுவார்கள் அல்லவா? அதைப்போல, யோசேப்பின் உண்மைத் தகப்பனாகிய யாக்கோபுக்குப் (மத்.1:16) பதிலாக, நாத்தானின் வம்சத்தில் பிறந்த ஏலியே யேசேப்பின் தகப்பன் ஆகி விடுகிறான். பாவி ஒருவன் இயேசுவை ஏற்றுக்கொண்டு அவருடைய குமாரனாகின்றபோது, அவனுடைய பாவம் நீங்கிப்போவது நாம் அறிந்தது அல்லவா? இதற்கு ஒப்பாக எகோனியாவின் வம்சத்தில் சாபத்துக்குரியவனாக பிறந்த யோசேப்பு, சாபம் எதுவும் இல்லாத தாவீதின் இன்னொரு குமாரனான நாத்தான் (2 சாமு.5:14) வம்சத்தில் போய்ச் சேர்ந்து, ஏலியின் மகனாகி விடுவதால் சாபம் நீங்கப் பெறுகிறான்.

இதனால் யோசேப்பினுடைய குமாரனாக இயேசு பிறப்பதில் இருந்த சிக்கல் தீர்க்கப்படுகிறது. இவன் மகனாக இயேசு பிறந்ததன் மூலம், தாவீதின் ராஜ்யம் நிலைப்படுத்தப்படுகிறது. யோசேப்புக்கு இருந்த சாபம் நீங்கி, ஆசீர்வாதம் கிடைக்கிறது. சாபத்தை ஆசீர்வாதமாக மாற்றுகிறவர் நம் இயேசு என்பது இயேசுவுக்கு இரு வம்ச வரலாறுகள் இருப்பதால் தெளிவாகிறது.

இந்த புத்தகத்தை குறைந்தது 10 பேருக்காவது படிக்க கொடுங்கள். புத்தகத்திற்கு ஓய்வு கொடுக்க வேண்டாம். உங்கள் காணிக்கை மற்றும் நன்கொடைகள். புது புத்தகங்களை மலரச் செய்யும்.

ஆவியானவரின் ஆலோசனை

100 கேள்வி பதில்கள்

இறையன்பு V. ஜான் வைராக்கியமான இந்து குடும்பத்தில் பிறந்தவர். தனது மாணத்தருவாயில் வானத்திலிருந்து தேவ வெளிச்சம் இவர்மேல் இறங்கியதால் உயிர் பிழைத்து இயேசுவை ஏற்றுக்கொண்டு இரட்சிக்கப்பட்டவர்.

1977–முதல் 40க்கும் மேற்பட்ட கிறிஸ்தவ மாத மற்றும் வார இதழ்களில் கதைகள், கட்டுரைகள் கவிதைகள், தேவ செய்திகள் எழுதி பிரபலமானவர். இவரது எழுத்து ஊழியத்தைப் பாராட்டி. "இந்திய கிறிஸ்தவ கலை இலக்கியக் கழகம்! பல்வேறு சந்தர்ப்பங்களில் "கவிஞர்", "இலக்கியச் செல்வர்" "திருமறைக் கலைஞர்" என்ற பட்டங்களை வழங்கி கௌரவித்துள்ளது.

1984–ல் உலக வேலையை விட்டுவிட்டு, தேவ அழைப்புடன் முழு நேர போதகர் பணியைச் செய்து வருகிறார். இவரது தலைமையின்கீழ் 5 சபைகள் இயங்கி வருகின்றன. "இயேசு விசாரிக்கிறார்" எனும் மாத இதழையும், 6 பாடல் ஒலி நாடாவும், 7 பிரசங்க ஒலி நாடாவும் வெளியிட்டு அநேகருக்கு ஆசீர்வாதமாக இருந்து வருகிறார்.

சபை மற்றும் வெளி ஊழியங்களின் மத்தியில் முற்றிலும் விசுவாசத்தில் இலக்கியப்பணி செய்துவரும் இவரை உங்கள் ஜெபத்தினாலும், நன் கொடைகளினாலும் தாங்குங்கள். புது புத்தகங்கள் வெளிவர உற்சாகப்படுத்துங்கள்.

WORD OF CHRIST
WOC
Chennai, India

978-93-82134-12-1
9 789382 134121

Price Rs.60.00